www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් நவ.17–23,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 179

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## புலிகள் சந்திக்கும் புதிய சவால்கள்





## பிரபாவின் கைக்குண்டு

## கூட்டணியின் குதிரையோட்டம்

## நான் அவர் செல்லம்
## குஷ்பு விசேஷ பேட்டி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இனவாத மனிதாபிமானம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பக்கச் சார்பான மனிதாபிமானம்!
பக்கச் சார்பான மனித உரிமைகள்!
பக்கச் சார்பான செய்திச் சுதந்திரம்!

மேற்கண்ட மூன்றும்
நாம் தினமும்-காதாலும்
கண்ணாலும் அறிந்து வருபவைதான்!

வடக்கு-கிழக்கில்
பாலியல் வதைகள்,
புதைகுழி மரணங்கள்,
காணாமல் போதல்கள்,
தொடர்கதையாகி உள்ளன!

யாழ்ப்பாணத்தில் பலியான
கிருஷாந்தி மற்றும் மூவரதும்
சடலங்கள் கொழும்புக்கு
கொண்டுவரப்பட்டு தகனமாயின!

சடலங்களைப் புகைப்படம்
எடுப்பதற்கு
பத்திரிகைகளுக்கு அனுமதியில்லை!

காரணம்: நடந்த கோரம்
வெளியே தெரியக்கூடாது
என்னும் முன்னெச்சரிக்கை!

இதேபோல் ஒரு சம்பவம்
தென்னிலங்கையில் நடந்திருப்பின்,
சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகள்
சீறியெழுந்து கண்டித்திருக்கும்!

குறிப்பிட்ட சம்பவம்
அரசுக்குச் சாதகமானதாயின்
அரசின் வெகுஜனத் தொடர்பு
சாதனங்களும்
புகைப்படங்களோடு
முக்கியத்துவம் கொடுத்து
வெளியிட்டிருக்கும்!

திருமலைச் சிறையில்
ஐந்து தமிழ் கைதிகள் பலி!
அவர்கள் பலியான விதத்தில்
பலத்த சந்தேகம் எழுந்துள்ளது!

சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகள்
நடந்தது என்னவென்று
ஆராயத் தலைப்படவில்லை!

அதே திருமலையில்
காணி அதிகாரி ஒருவர்
சுட்டுக் கொல்லப்பட்டபோது
சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகள்
கிட்டத்தட்ட ஒரு மாதகாலம்
கட்டுரைகளையும்
கண்டனங்களையும் வெளியிட்டன!

மனிதக் கொலைகளை
கண்டிப்பதுதான் மனிதாபிமானம்!
நாம் அதை மறுக்கவில்லை.

பலியானது யார்?
பாதிக்கப்பட்டோர் யார்?
என்று இனம் அறிந்து
கண்டிப்பதுதான் நியாயமில்லை!

மனிதாபிமானம், மனித உரிமைகள்,
செய்திச் சுதந்திரம் போன்றவை
இனம்-மதம்-மொழி அறிந்து
வெளிப்படுத்தப்படுமானால்
அதன் பொருள் இனவாதம்தான்!

செய்திச் சுதந்திர விடயத்தில்
தென்னிலங்கை சிங்கள-ஆங்கிலப்
பத்திரிகைகள் பலவும்
கடைப்பிடிக்கும் கண்ணோட்டம்
காத்திரமானதாக இல்லை.

'தமிழ் பேசும் மக்களுக்கு
என்ன குறை இந்த நாட்டில்?
வடக்கே காணி விளைகிறது;
கிழக்கே பூமி விளைகிறது;
எப்போதாவது எங்காவது
சில அசம்பாவிதங்கள் நடக்கலாம்.
புலிகள் என்னும் பயங்கரவாதிகளை
பூண்டோடு ஒழிக்கும் போரில்
சின்னச் சின்ன சம்பவங்களை
பூதாகரமாக நினைக்கக்கூடாது!'

சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகளை,
தொலைக்காட்சிகளை,
அரச வானொலியை
தொடர்ந்து பார்த்தும்-கேட்டும்
வரும் சிங்கள மக்களுக்கு
மேற்கண்ட அபிப்பிராயம்தான்
மனதில் தோன்றும்!

காரணம்: தமிழ் பேசும் மக்கள்
முகம் கொடுக்கும்
நெருக்கடியும், நிம்மதி இழப்பும்
நிறைந்த மறுபக்கத்தை
சிங்கள மக்கள் அறிய முடியாது!

அதனைத் தெரிவிக்க வேண்டிய
செய்தி ஊடகங்கள்
இனவாதச் சார்பு,
அரச சார்பு என்ற
வடிகட்டலின் பின்னரே
செய்திகளை வழங்குகின்றன!

பக்க சார்பான மனிதாபிமானமும்
பக்க சார்பான செய்தி ஊடகங்களும்
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
அடிப்படையான
இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வுக்கு
வேட்டு வைத்துக்கொண்டிருக்கின்றன!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை **என்றென்றும் அன்புடன்,**
ஆசிரியர்

# ஆன்மீகம்



## பெருமை

நாம் நன்மையான காரியங்களை செய்கின்றோம். இவ்வாறு நாம் செய்கின்ற நன்மையான காரியங்களைக் குறித்து பெருமை பாராட்ட முடியாதவர்களாய் இருக்கின்றோம்.

மனிதன் கடவுளின் சித்தத்துக்கு கீழ்படியாமல் தேவசாயலை இழந்து, கடவுளின் பரிசுத்தத்துக்கு முன் நிலை நிற்க முடியாத பாவிகளான தகுதியற்ற நம்மை, தகுதிப்படுத்தி பாவத்தின் விழுகையிலிருந்து கடவுள் நம்மை மீட்டதினால் நாம் செய்கின்ற நன்மையான காரியங்கள் யாவும் கடவுளையே சார்ந்திருக்கின்றன.

ஒரே கூட்ட மக்களாகவும் ஒரே மொழி பேசுகின்றவர்களாகவும் எங்கும் சிதறிப் போகாமல் வாழ ஓர் இடத்தைத் தெரிவு செய்து "பாபேல்" எனும் கோபுரத்தை கட்டி தங்களுக்கு பேர் உண்டாகப் பண்ணுவோம் என்று நினைத்த மக்களின் செயற்பாடு செயலற்றுப் போனதை ஆதி11:1-9 இலே காணுகின்றோம்.

"எதைச் செய்தாலும் அதை மனுவருக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்." (கொலோ 3:24)

ஆகவே, தங்களின் பேர் புகழுக்காக நன்மையான காரியங்களை செய்யாமல் ஆண்டவர் இயேசு மகிமைப்படும்படியாக, நல்ல காரியங்களை செய்வோம். அப்போதுதான் அவை சமூகத்துக்கு நன்மை பயக்கும் நற்காரியங்களாக மாறும்.

**சகோ. எஸ். யேசுநாதன், வாழைச்சேனை.**

## சொல்வது போன்று செய்யவேண்டும்

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மிஃராஜுக்கு (விண்ணுலக யாத்திரை) சென்றிருந்தபோது ஒரு கூட்டத்தினரைக் கண்டார்கள். அவர்களுடைய உதடுகள் நெருப்பினாலான கத்தரிக்கோல்களால் கத்தரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. "இவர்கள் யார்?" என வினவியபோது "இவர்கள் தங்களுடைய கூட்டத்தில் உள்ள சொற்பொழிவாளர்கள். இவர்கள் பிறருக்கு உபதேசம் செய்து விட்டு தாங்கள் அதன்படி அமுல் செய்யாதிருந்தார்கள்."

மற்றொரு ஹதீஸில், தீய செயல்களுடைய காரர்களுக்கு (உலமாக்களுக்கு) நரக வேதனை விரைவாக ஏற்படும். "முஷ்ரிக்குகளை விட நமக்கல்லவா முதலில் தண்டனை கிடைக்கின்றது?" என அவர்கள் வியப்படைவார்கள். அப்பொழுது "ஒரு குற்றத்தை தெரிந்து செய்வது தெரியாமல் செய்வதற்குச் சமமாக மாட்டாது." என பதிலளிக்கப்படும்.

மேலும் இக்காலத்தில் உபதேசக் கூட்டங்களும், சொற்பொழிவுகளும், பத்திரிகை கட்டுரைகளும் எத்தனை அமைப்புகளிலும் இலாபம், பலன் தராதவைகளாக இருக்கின்றன. இறைவன் தன் அருள் மறை குர்ஆனில் "நீங்கள் வேதத்தை ஓதுகிறவர்களாக இருக்கும் நிலையில் உங்களை மறந்து விட்டு மனிதர்களுக்கு நன்மையை நீங்கள் ஏவுகிறீர்களா? நீங்கள் (இதனை) விளங்க வேண்டாமா? என்று கூறுகிறான். மனிதர்களே நன்மையானவைகளை சொல்லியும் அதன்படி நடக்கவும் செய்யுங்கள். மேலும் தீமையானவற்றை தடுக்கவும் செய்யுங்கள் வெற்றிக்கு அதுதான் வழி."

**எம்.எம். முஹம்மது ஆஸிர், சாய்ந்தமருது-10.**

## கவிதைப் போட்டி இல. 176

### பரிசுக்குரிய கவிதை

### நலநோக்கார்

இனியவை தானிருக்க இன்னாவே இயம்பிடுவார்;
கையில் கனியிருக்க காய்களுக்கு கல்லெறிவார்;
பூவெல்லாம் பூத்திருக்க மொட்டெல்லாம் பறித்திடுவார்;
தம்வீட்டு முற்றத்து முட்செடியைப் பிடுங்குதற்கு
கையியலாத் தன்மையவர் என்வீட்டுத் தோட்டத்து
மல்லிகையை வேரோடு சாய்த்து அழித்தார்!
என் முகம் பார்த்து மலருமொரு சூரிய காந்தியுனை
மகளே- இளங் கொழுந்தென்றும் எண்ணாமல்
கிள்ளித் தீயிலிட்டார்-என்ன பயன் கண்டாரோ!!

சிவ கங்காதரி- மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



#### தொடரவேண்டாம்!

"புதைகுழி மர்மங்களைப்
புரிய வைப்போம்" என்றவர்தம்
வாயைப் பிளக்க வைக்கும்
வகை வகையாய்ச் சம்பவங்கள்,
புரையோடிய புண்ணாயிற்று-இனிப்
புரியவைக்க யார் வருவார்??
இதே கதைதான் தொடருமென்றால்
இனிப் பிறப்பே தொடரவேண்டாம்!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

#### யாருமில்லை

கட்டுப்பாட்டில் இருந்திருந்தால்
காணாமல் நீ போயிருப்பாய்!
தப்பி வந்தோம் உயிர் காக்க,
'முடியவில்லை உனைக் காக்க.
எரிப்பேனோ! புதைப்பேனோ?
எவருமில்லை எமக்குதவ!

க. கார்த்திகா- தோணிக்கல், வவுனியா.

#### வேலியும் பயிரும்

வேலியே பயிரை மேய்ந்தால்
வேறென்ன செய்யமுடியும்....?
எங்களால்-
அழுவதைத்தவிர!

மஸாஹிரா ஹனீபா-காத்தான்குடி.

#### அதர்மச் சக்கரம்!

கட்டுப்பாட்டு எல்லைக்குள்
காவல் வேலியே
கன்னியரை மேய்ந்தது!
காலனிடம் அனுப்பியது!
கதறுவோம் பதறுவோம்!
நாளையொரு கமிசன் வரும்-கன
கச்சிதமாய் கண் துடைக்கும்!
கதை முடிக்கும்!
மீண்டும்......
கட்டுப்பாட்டு எல்லைக்குள்....

திருமதி நிரஞ்சனி சச்சிதானந்தன்-
செங்கலடி.

#### மொட்டொன்று சருகானது

மொட்டொன்று முகிழ்ந்து
முடி சூடு மென்றிருக்க
கட்டாய பிடியினிலே கருகியதே.....!
கன்னி மலர்-இவள்
கொட்டா விழி கண்டு
கொட்டு மிரு விழிகள்
கட்டாய மினியென்றும்
வற்றாக் கடலே....!

எஸ். மதுமதி- யாதுமூர்.

#### சீரழிவுச் சின்னமிதோ!

விதைத்த குண்டுகளால்
விளைந்த அறுவடையோ?
சிதைந்த மானுடத்தின்
சீரழிவுச் சின்னமிதோ?

வீ.கே.ரி.தாசன்- வவுனியா.

#### அட்டூழியங்கள்

கைதடியில் காணாமல் போய்
செம்மணியில் எடுத்த
அம்மணியின் சடலமோ?
அல்லது
கோண்டாவிலில் தோண்டி எடுத்த
ராஜினியின் மையமோ?

அன்ரனி- தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.

## கவிதைப் போட்டி இல-179



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 23.11.1996

**முகவரி: கவிதைப் போட்டி இல.179**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.**

#### சிறகொடிப்பு

சிட்டாய்ப் பறந்த சிட்டுக் குருவியே...!
பாவிகளின் செய்கையால் பரிதவித்துப் போனாயே!
வானத்தில் பாடித்திரிந்த வானம் பாடியே
உன் சிறகுகளை உடைத்தாரோ...?
உன் வாய்திறந்து கூறாயோ?

எஸ்.டி. நற்குணராஜா- கண்டி.




கிருஷாந்தி, ராஜினி ஆகிய இரண்டு சகோதரிகளினதும் நிலை போல் இன்னும் எத்தனை இளம் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும்? எனது இனிய தங்க முரசே, அரசியல் நிலவரங்களையும், வெளிவராமல் முடங்கிக் கிடந்த- கிடக்கும் பல சம்பவங்களையும் மிகத் தெளிவான கருத்துக் கண்ணோட்டத்துடன் வெளியிடும் உனது துணிச்சலான முயற்சியை பாராட்டுகிறேன். கிருஷாந்தி, ராஜினியைக் கொன்றவர்களை அரசு தண்டிக்குமா.... அல்லது....??

ஏ.சீ.எம். மசூர்,
தெஹிகஸ்தலாவ, பலாங்கொட.

• • •

நீ தாங்கி வரும் அற்புதனின் அரசியல் தொடர் மர்மமான உண்மைகளைத் தெரியப்படுத்துவதுடன் எம்மை பிரமிக்க வைக்கின்றது. உனது பணி தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

பா. செபஸ்ரின், மடு-மன்னார்.

## வாசக(ர்) சாலை

'கற்பழிப்பு' என்று பாலியல் பலாத்காரக் கொடுமைகளைக் குறிப்பிடுவது தவறென்பதைச் சுட்டிக்காட்டிய வாசகியைப் பாராட்ட வேண்டும். தமிழ் சினிமாக்காரர்கள் பயன்படுத்திப் பழக்கப்பட்டுப்போன வார்த்தை அது. நம் சமூகத்தை நாமே கேவலப்படுத்தும் வார்த்தையாக அது இருக்கிறது. காமமிருகங்களால் பெண்கள் பாதிக்கப்படுவது போதாது என்று அவர்களை கற்பிழந்தவர்கள் என்று சித்தரித்தும் கொடுமைப் படுத்தவேண்டுமா? அந்த வார்த்தைப்பிரயோகம் கொடுமை புரிபவர்களுக்கு தாம் எதையோ சாதித்து விட்டோம் என்ற திருப்தியையும் கொடுத்துவிடும். பெண்களை கற்பிழக்கச் செய்து விட்டோம் என்று சாதனையாகச் சொல்லிக் கொள்வார்கள். இன்றைய காலகட்டத்தில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் மத்தியில் கற்பழிப்பு என்பது கெட்டவார்த்தைதான்!

எம். மாசிலாமணி, வவுனியா.

### "அது ஒரு ... கெட்ட வார்த்தை"

நூறாவது வாரம் வரை முரசில் இடம் பிடித்த 'தாய்' நம் இதயங்களிலும் இடம் பிடித்துவிட்டாள். நிறைவான தொடரைத் தந்த முரசுக்கு வாழ்த்துக்கள்.

செல்வி சி. ரோகிணி, பதுளை.

• • •

எப்படித்தான் நூறுவாரங்கள் விரைவாகக் கடந்துபோனதோ தெரியவில்லை. 'தாய்' நம்மையெல்லாம் நெகிழவைத்துவிட்டுப் போய் விட்டாள். உலகின் முதல் தரமான 'நாவலை' முழுதாகப் படித்த திருப்தி. 'தூக்குமேடைக் குறிப்பும்' நம்மை நெகிழ்த்தட்டும்.

ஜே.எம். ரிஸ்வான், காத்தான்குடி.

• • •

மாக்சிம் கார்க்கி என்னும் அற்புத எழுத்தாளர் காலத்தால் அழியாத படைப்பாக 'தாய்' நாவலை படைத்திருந்தார். ஜவஹர்லால் நேரு முதல் டாக்டர் கலைஞர் கருணாநிதிவரை போற்றிப் புகழ்ந்த அந்த நாவலை- அல்ல அல்ல- தளராத தாயை நமக்கும் அறிமுகம் செய்த முரசுக்கு நன்றி. நன்றி. நன்றி.

சோ. மாணிக்கராஜா, திருக்கோணமலை.

• • •

'பாரமில்லாத பட்ஜெட்' சிந்தியா சொன்ன பதில் 'சுருக்.' குட்டிக்கதைகள் பிரமாதம். இராமாயணத் தொடரில் 'வாலி வதம்' இராஜகுமாரனின் கை வண்ணத்தில் நல்ல பதம், இதம்.

எம். சர்மிளா, கொழும்பு-09.

அன்பின் முரசே!

நீர் தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் பலே ஜோர். ரசிகன் தரும் பரபரப்பான கொள்ளை ராணி பூலான்தேவி தொடர், இலக்கிய நயம் ஆகியவை எமது உள்ளங்களில் நிலையான இடத்தைப் பிடித்து விட்டன. ஆனால் இந்த நிலமை இலங்கையில் நடந்தாலும் பூலான் தேவிகள் உருவாகாமல் புதைகுழியில் புதைத்துவிடுகிறார்கள்.

சி. வேதநாயகம், தபாலகம், மட்டக்களப்பு.

என் அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அம்சங்களில் கொள்ளை ராணி பூலான் தேவியின் கதை படு சூப்பர். அத்தோடு இலக்கிய நயம் ரொம்ப பிரமாதம். இதனைத் தரும் ரசிகனுக்கு எனது வாழ்த்துக்கள்.

செவ்வன் இ. தேவதாஸ், பள்ளிக்குடியிருப்பு.

இனிய முரசே!

'தாய்' தொடர் என் போன்றோர் மனதை விட்டு நீங்காது! தொடர் தந்த முரசுக்கு என் நன்றிகள். இது போன்ற தரமான நாவல்களை தொடர்வதற்கு என் இனிய வாழ்த்துக்கள்.

சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு.

• • •

தினமுரசில் இடம்பெறும் அனைத்து அரசியல் கட்டுரைகளும் நாட்டின் யதார்த்த நிலமையை எடுத்தியம்புகின்றன. பூலான்தேவியின் தொடர் கதையும் மற்றும் சிறுகதைகளும் நல்ல படிப்பினையைத் தருகின்றன. முரசு தொடர்ந்தொலிக்க எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

எம்.ஏ.எம். முஸ்தபா, மருதமுனை-03.

• • •

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். ரசிகன் தரும் இலக்கிய நயம் அருமையிலும் அருமை. காதிலை பூ கந்தசாமியின் கற்பனை அற்புதம். வாழ்க... வளர்க உன் பணி!..

செல்வி சரோஜா சின்னையா, மாதம்பை,
இறக்குவானை.



படிப்பகம்

www.padippakam.com

# குடாநாட்டில் தீவிரமாகும் தாக்குதல்கள்
## யாழ் நகருக்குள் நடமாடும் புலிகளின் உளவுப்பிரிவு!

யாழ்-குடாநாட்டில் புலிகள் இயக்கத்தினர் தமது தாக்குதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளனர். படையினரின் ரோந்து அணிகள், முன்னணிக் காவலரண்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. கிருஷாந்திமீதான பாலியல் பலாத்காரச் சம்பவத்தை அடுத்து யாழ் குடாநாட்டு மாணவர்கள் மத்தியில் புலிகள் இயக்கத்தினரின் பிரசாரங்களும், உறுப்பினர் திரட்டல் நடவடிக்கைகளும் துரிதமாகியுள்ளன.

### இரு பிரிவு

யாழ் குடாநாடு தற்போது இரண்டு பிரிவாக இருக்கிறது. படையினர் நிலைகொண்டு பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள், படையினர் நிலைகொள்ளாத பகுதிகள் என்று இருவேறு பிரிவுகளாக உள்ளன.

படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் பலத்த பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்கள் இருந்தபோதும், புலிகள் இயக்க உறுப்பினர்கள் பல்வேறு ரூபங்களில் அங்கும் தங்கியிருக்கின்றனர்.

புலிகள் இயக்க உளவுப்பிரிவினர் பலர் யாழ்நகரில் பகிரங்கமாகவே நடமாடுகின்றனர். படையினருக்கு அவர்கள் யாரென்பது தெரியாது. பொதுமக்கள் அவர்களை இனம் கண்டு கொண்டாலும் வாயே திறப்பதில்லை.

புலிகள் இயக்க உறுப்பினர்தான் என்று தெரிந்துவிட்டால் அவரோடு பகிரங்கமாகப் பேசுவதும் இல்லை. அவர் புலிகள் இயக்க உறுப்பினர் என்று தமக்குத் தெரிந்த விடயத்தை வெளியிடுவதும் இல்லை.

புலிகள், படையினர் ஆகிய இருதரப் போடும் தமக்கு நட்பும் வேண்டாம், பகையும் வேண்டாம் என்ற போக்கில்தான் பொது மக்கள் பலர் நடந்து கொள்கின்றனர்.

எனினும் இரவு நேரங்களில் சில வீடுகளுக்குச் சென்று உணவுவகைகளைப் புலிகள் பெற்றுக்கொள்கின்றனர்.

இதேவேளை, படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் பகிரங்கமாகவே நடமாடுகின்றனர்.

தாம் நிலைகொள்ளாத பகுதிகளில் திடீர் தேடுதல் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுகின்றனர். குறிப்பிட்ட பகுதிக்கு படையினர் வருவது தெரிந்ததும் புலிகள் இயக்கத்தினர் தமது ஆயுதங்களோடு வேறு பகுதிக்கு சென்றுவிடுகின்றனர். தேடுதல் முடித்து படையினர் சென்றவுடன் புலிகள் மீண்டும் திரும்பி வருகின்றனர்.

### அனுமதி தேவை

குடாநாட்டுக்குள் படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து, கட்டுபாடற்ற பகுதிக்கு ஒருவர் செல்ல வேண்டுமானால் படையினரின் அனுமதி பெற்றாக வேண்டும்.

தான் எங்கு செல்கிறார்; எதற்காகச் செல்கிறார் என்ற விபரங்களை தெரிவிக்க வேண்டும். குறிப்பிட்ட நபர் எங்கு செல்கிறாரோ அங்குள்ள உறவினர்களும் அவர் தம்மிடம்தான் வருகிறார் என்பதை உறுதிப் படுத்தவேண்டும்.

புலிகளிடம் சென்று தகவல் தெரிவித்து விடலாம் என்று கருதியே இத்தகைய விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இத்தனை கட்டுப்பாட்டு விதிகள் மத்தியிலும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மாட்டிக்கொள்ளாமல் நடமாடுகின்றனர் என்பது யாழ் குடாநாட்டு மக்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

பாதுகாப்பு கெடுபிடிகள் நிறைந்த யாழ் நகரின் மத்தியில் உள்ள ஸ்டான்லி வீதியில் தான் முன்னர் கரும்புலித் தாக்குதலும் இடம்பெற்றது. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மயிரிழையில் உயிர் தப்பினார்.

சமீபத்தில் குண்டுவெடிப்பு இடம்பெற்ற சலுசலா விற்பனை நிலையமும் ஸ்டான்லி வீதியில்தான் இருக்கிறது.

படையினரின் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியிலும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர் தங்கி இருப்பதையே சலுசலா குண்டுவெடிப்பு சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது.

### ஊழியர் அச்சம்

யாழ் குடாநாட்டில் அரசாங்க நிறுவனங்கள் இயங்குவதற்கு எதிரான புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகளில் ஒன்றே சலுசலா குண்டுவெடிப்பாகும்.

இதனைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டில் உள்ள அரச நிறுவன ஊழியர்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் மீதும் புலிகளின் அச்சுறுத்தல் காணப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் பரவலான தாக்குதல்கள் இடம்பெறலாம் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. யாழ் குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் இருந்து வரும் தகவல்கள் அதனை உறுதிப்படுத்துகின்றன.

படையினரின் கவனத்தை திசைதிருப்ப வடக்கு-கிழக்கில் பரவலான தாக்குதல்களை நடத்தியபடி, பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தலாம் என்றும் சந்தேகிக்கப் படுகிறது.

## 'எல்லாளன் படை' எச்சரிக்கை
### 'தமக்குள் முரண்பாடு' என்று தெரிவிப்பு

தென்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு எல்லாளன் படையினரால் எச்சரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் 17.08.1996 அன்று திகதியிடப்பட்டுள்ளது. ஆயினும் கடந்தவாரம்தான் அக் கடிதம் சில பாடசாலைகளுக்கு கிடைத்துள்ளது. பதுளையில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'மாணவர்களுக்கு எச்சரிக்கை' என்னும் தலைப்பிட்டு, எல்லாளன் படையின் கடிதத் தலைப்போடு ஆங்கிலத்தில் அனுப்பப் பட்டுள்ள அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"யுத்தம் காரணமாக வடக்கிலும், கிழக்கிலும் ஏழைத் தமிழ் மாணவர்கள் பலியாகி வருகின்றனர்.

புலிகள் இயக்கத் தலைவர்களின் திட்டங்களே இன்றைய நிலைக்குக் காரணம் என்பது தெளிவாகியுள்ளது. இருப்பினும் அரசின் தீர்வுத் திட்டத்தை நாம் ஏற்கப்போவதில்லை.

தமிழ் சமுதாயம் அனாவசியமாகப் பலியாகாமல் தடுப்பதற்கு புலிகள் இயக்கத்தினர் வேறு புத்திசாலித்தனமான மார்க்கங்களை நாடலாம்.

இந்த உண்மையைத் தெரிந்திருந்த போதிலும் எமது அனுதாபிகளில் ஒரு பிரிவினர் ஒன்றுமறியாத அப்பாவிச் சிங்கள பாடசாலை மாணவர்களைத் தாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுகின்றனர்.

எமது உறுப்பினர்களின் இத்தகைய எண்ணங்களை மாற்றுவதற்கு நாம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறோம். ஆயினும் அந்த எண்ணத்தைக் கைவிட அவர்கள் ஆயத்தமாக இல்லை.

எமது படை உறுப்பினர்கள் சிலர் சில பாடசாலைகளில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர் என்பதை உங்களுக்கு தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

எமது படையிலுள்ள சில பிரிவினர் எமக்கே கெட்ட பெயரைச் சம்பாதித்துத் தரக்கூடியவிதமாக இவ்வாறான முடிவை எடுத்துள்ளனர். இந்த முடிவினால் எமது தமிழ் பிள்ளைகளும் பாதிக்கப்படும் நிலை உருவாகும் என்று அவர்களை எச்சரிக்கிறோம்." இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் மர்மம் என்னவென்று தெரியவில்லை.

கடிதப் பிரதி ஒன்று முரசுக்கும் கிடைத்துள்ளது. கடிதத்தில் காணப்படும் தட்டச்சு எழுத்துக்கள் எல்லாளன் படையினரின் முன்னைய கடிதங்களுடன் ஒத்திருக்கின்றன. அது தவிர முன்கூட்டியே திகதியிட்டு கடிதங்களை தாமதமாக அனுப்பிவைப்பதும் 'எல்லாளன் படை'யின் வழக்கமாகும். இக் கடிதமும் அவ்வாறுதான் அனுப்பப்பட்டுள்ளது.

## கிட்டுவின் சகோதரி கொழும்பில்?

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்தவர் கிட்டு. கிட்டுவின் சகோதரி முறையான சுசிலாதேவி என்பவர் கொழும்புக்கு வந்துள்ளார் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கிட்டுவின் சகோதரியும் புலிகள் இயக்க உறுப்பினர் என்றும், கொழும்பில் உளவு பார்க்க அவர் வந்திருப்பதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கிட்டுவின் சகோதரியும், இன்னொரு பெண்ணும் பிச்சை எடுப்பவர்கள் போன்ற வேடத்தில் கொழும்பில் நடமாடியதாகத் தகவல் கிடைத்துள்ளதாம். கொழும்பில் தேவாலயம் ஒன்றின் அருகே அவரைக் கண்டதாக கிடைத்த தகவலை அடுத்தே இச்சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை கிட்டுவின் பாரியார் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ் மருத்துவ மனையில் நேர்சாகப் பணியாற்றிவருகிறார்.

## வவுனியாவில் தாக்குதல் தொடரும்
### அகதிகளின் அவலம்! அதிகாரியின் அலட்சியம்!

வவுனியா கணேசபுரத்தில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள்மீது 07.11.96 அதிகாலை புலிகள் இயக்கத்தின் கெரில்லா அணியினர் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் தமது தரப்பில் ஐவர் பலியானதாகவும், படையினர் தரப்பில் ஒருவரது உடலையும் பெருமளவான ஆயுதங்களையும் கைப்பற்றியதாகவும் புலிகள் தெரிவித்தனர். அதிகாலை ஒரு மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரே நேரத்தில் 25 காவலரண்கள் அழிக்கப்பட்டன என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

லெப்டினன்ட் சத்துருக்கன் (கணபதி சந்திரன்- வாகரை, மட்டக்களப்பு), லெப்டினன்ட் கிருபா (கதிரவேலு சுபாஸ்கரன்- அளவெட்டி மேற்கு), தென்றல் (சுந்தரலிங்கம் சுதாகரன்- புதுக்குடியிருப்பு), அறிவுடைநம்பி (தம்பையா மங்களேஸ்வரன்- 7ம் வட்டாரம், புங்குடுதீவு) ஆகியோரது பெயர்கள் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளன.

வவுனியா உப்புவெளியில் கடந்த 11.11.96 அன்று அதிகாலை ஒருமணிக்கு மூன்று காவலரண்கள் தம்மால் தாக்கப்பட்டதாகவும், இரண்டு இராணுவத்தினரின் உடல்கள் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஐந்து நிமிடம் மட்டுமே நடைபெற்ற இத்தாக்குதலில் தமது தரப்பில் எவ்வித சேதமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 26ம் திகதி உப்புவெளியில் பலியான மேஜர் விஜயனின் நினைவாக இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்து வவுனியாவுக்குள் மக்களை கொண்டு வர அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது.

பெருமளவான மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வருகிறார்கள் என்பதை பிரசாரப்படுத்தவே அரச தரப்பினர் விரும்புகின்றனர்.

வவுனியாவில் நிலைமைகளைக் கண்டறிய புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் சென்றிருந்தார்.

மக்கள் தங்குவதற்கு போதிய வசதியில்லை என்று அவரிடம் முறையிடப்பட்டது. "வன்னியில் மரநிழல்களில்தானே இவர்கள் தங்கியிருந்தனர். அதைவிட இது பரவாயில்லைத்தானே?" என்று பதிலளித்தாராம் அந்த அதிகாரி.

இதேவேளை வவுனியாவில் புலிகள் இயக்கத்தினர் தமது தாக்குதல்களைத் தொடரலாம் என்று நம்பப்படுகிறது.

## வெளிநாடுகளில் கவன ஈர்ப்புப் போராட்டங்கள்
### அமெரிக்க தூதரகம் முன்பாக ஒன்றுகூடல்

புலிகள் இயக்கத்தினரின் சர்வதேச கிளைகளாலும், வெளிநாடுகளிலுள்ள தமிழ் அமைப்புக்களாலும் நடத்தப்பட்ட கவன ஈர்ப்பு போராட்டம் கடந்த 05.11.96 அன்று முடிவடைந்தது.

இலங்கை அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கவும், சர்வதேச அரங்கில் அவற்றை அம்பலப்படுத்தவுமே கவன ஈர்ப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஃபிரான்ஸ், அவுஸ்திரேலியா, நோர்வே, அமெரிக்கா, ஜெர்மன், பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, நெதர்லாந்து ஆகியநாடுகளில் கவன ஈர்ப்பு வாரம் பெரியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்பாகவும், வோஷிங்டனில் உள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சு காரியாலயம் முன்பாகவும் கவன ஈர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இலங்கை அரசுக்கு வழங்கும் உதவிகளை நிறுத்துமாறு கோரி இலண்டனில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக கவன ஈர்ப்பு ஒன்றுகூடல் நடத்தப்பட்டது.

நோர்வேயில் தீப்பந்த ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட தீப்பந்த ஊர்வலத்தின் இறுதியில் நோர்வே பாராளுமன்ற உப சபாநாயகரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. நோர்வே தொலைக்காட்சியிலும் தீப்பந்த ஊர்வலம் பற்றிய செய்தி முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பப்பட்டது.

## பாரிசில் நடந்த கொலைகள்!
### அரசு மீது பிரபா குற்றச்சாட்டு

ஃபிரான்சின் தலைநகரான பாரிசில் புலிகள் இயக்க நிதிப்பொறுப்பாளர் நாதன், ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர் கஜன் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு பிரபாகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

04.11.96 அன்று பிரபாகரனால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நிதி சேகரிப்பு, கொள்கை பரப்பு போன்ற முக்கிய பணிகளில் ஈடுபட்டிருந்த இரண்டு முக்கிய பொறுப்பாளர்கள் கொலையுண்டமை எமது இயக்கத்திற்கு மட்டுமன்றி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

சிறீலங்கா ஆட்சியாளர்களின் பயங்கரவாதம் கடல் கடந்தும் அரங்கேறியிருக்கிறது. இது இயலாமையின் வெளிப்பாடாகும். இச் சவாலை துணிவுடன் எதிர்கொண்டு தாயக விடுதலைக்கு உறுதியுடன் பணியாற்றுமாறு உலகத் தமிழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படுகொலையின் சூத்திரதாரிகள் யார் என்பதை சர்வதேச சமூகம் இனம்காண வேண்டும். அப்போதுதான் சர்வதேச சட்டங்களை மீறுவது யார் என்பது புலனாகும்." இவ்வாறு பிரபாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## "பாராளுமன்ற உறுப்பினர்களை கைதுசெய்யலாம்"
### தனது அனுமதி தேவையில்லை என்கிறார் சபாநாயகர்

ஒரு பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்யவோ விசாரணை செய்யவோ சபாநாயகரின் அனுமதி தேவையில்லை என்று சபாநாயகர் கே.பி.ரத்நாயக்க பொலிசாருக்கு அறிவித்திருக்கிறார்.

பட்டலந்த தடுப்பு முகாம் தொடர்பான சம்பவங்கள் பற்றி குற்றத் தடுப்புப் பிரிவினர் கடந்தவாரம் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவை, அவருடைய கொழும்பு வாசஸ்தலத்தில் விசாரணை செய்தனர்.

எத்தகைய குற்றச்சாட்டின் பேரிலும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரிடம் விசாரணை நடத்தவோ அல்லது கைது செய்யவோ சபாநாயகரின் அனுமதியை பொலிசார் பெற வேண்டும். எதிர்க்கட்சித் தலைவரிடம் விசாரணை செய்வதற்கு பொலிசார் சபாநாயகரின் அனுமதி கோரியிருந்தனர். இவ்வேளையில்தான், இதற்குத் தனது அனுமதி தேவையில்லை என்றும் பொலிசார் விசாரணையைத் தொடரலாம் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

பட்டலந்த தடுப்பு முகாமில் நடைபெற்ற சம்பவங்களை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி தனி விசாரணைக் குழுவை நிறுவியுள்ளார். ரணில் விக்கிரமசிங்காவின் இல்லத்தில் கடந்தவாரம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தொடர்ந்து ஐந்து மணிநேரம் விசாரணை நடத்தியிருந்தனர்.

## யாழ் குடாநாட்டில் தொலைபேசிச் சேவை
### முறைகேடுகள் நடப்பதாகவும் புகார்

(நமது நிருபர்)

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தொலைபேசிச் சேவைகள் ஓரளவு சீரடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். தற்பொழுது 36 இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நான்கு மார்க்கங்கள் மூலமாக வெளிமாவட்ட இணைப்புகள் பெற்றுக்கொடுக்கப்படுவதாகவும் இவ்வதிகாரிகள் முரசிடம் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை தொலைத் தொடர்புப் பரிசோதகர் ஒருவரின் மறைமுக ஈடுபாட்டுடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு அருகில் கொம்யூனிக்கேசன் சென்ரர் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. பொதுமக்கள் சேவை என்பதைவிடப் பணம் கறப்பதே இதன் குறிக்கோளாக இருப்பதாகப் பொதுமக்கள் கவலைப்படுகின்றனர்.

மூன்று நிமிட அழைப்புக்கு தொண்ணூறு ரூபா இங்கு அறவிடப்படுகிறது. காலை ஏழுமணி தொடக்கம் மாலை ஆறுமணிவரை தொலைபேசி இயக்குநர்களின் விசேட கவனிப்புடன் இந்நிலையத்துக்கு விரைவாக அழைப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. காலை ஏழுமணி தொடக்கம் எட்டு மணி வரையும் மாலை ஐந்து மணி தொடக்கம் ஆறு மணி வரையும் வேறொருவருக்கும் இணைப்புக்கள் வழங்கப்படாத நிலையிலும் இந்நிலையம் விசேட கவனிப்பைப் பெறுகிறது.

## பஸ்ஸில் செல்ல மக்கள் அச்சம்

வவுனியாவிலிருந்து மட்டக்களப்பு நோக்கி குடிமக்கள் பயணம் செய்து கொண்டிருந்த 61-6830 இலக்க இ.போ.ச. பஸ்ஸை நோக்கிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 10 குடிமக்களும் இரு படைவீரர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பஸ் சாரதியும் பாரதூரமான காயங்களுக்குள்ளானார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலைக்கு அருகே கடற்கரையோரமாகவுள்ள களுவன்கேணிக்குச் செல்ல விரும்பிய படைவீரர் நால்வர், பிரதான வீதியால் வந்து கொண்டிருந்த பஸ்ஸைத் திருப்பி தம்மைக் களுவன்கேணிக்கு கொண்டுசென்று இறக்கிவிட்டுத் திரும்புமாறு பஸ்சாரதியை நிர்ப்பந்தித்தனர். அது மாலை இருள் நேரமாக இருந்தது. களுவன்கேணி வீதியில் ஏற்கனவே புலிகளை எதிர்பார்த்துப் பதுங்கியிருந்த படையினர் பஸ் வருவதைக் கண்டதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பயணிகள் கூக்குரலிடவே துப்பாக்கிச் சூடு நிறுத்தப்பட்டது. பஸ் கண்ணாடிகள் யாவும் நொறுங்கிப் போயின. இச்சம்பவத்தின் பின்னர் பஸ்ஸில் பயணம் செய்ய மக்கள் அஞ்சுகின்றனர்.

தொலை தூரப்பயண பஸ்களைக்கூட இவ்விதம் படையினர் இடைமறித்துச் சென்று தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வருவது பொதுமக்களின் விசனத்திற்குள்ளாகி வருகிறது.

கடந்தவாரம் களுவன்கேணியில் இடம்பெற்ற படை-புலிகள் மோதலின் பின்னர் குடிமகனான ப.அலோசியஸ் (48) என்பவர் படையினரால் அடித்துக் கொல்லப்பட்டதாக மக்கள் தெரிவிக்கிறார்கள். அவ்வூரில் நடைபெற்ற மற்றுமொரு சம்பவத்தில் புலிகள் கொண்டு வந்த ஒரு உழவு இயந்திரத்தையும் ஆறு படகு எஞ்சின்களையும் படையினர் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வைத்தியர்களை மிரட்டும் வைத்திய அதிகாரி
### 25 ஆயிரம் மக்கள் பாதிக்கப்படும் அவலம்

மூதூர் மாவட்ட வைத்திய அதிகாரி அனஸ் என்பவரின் நிர்வாகத்தின் கீழ் கடமைபுரிய அங்குள்ள தாதிமார்களும் சிற்றூழியர்களும் மறுத்துவருகின்றனர். இருபத்தைந்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இவ் வைத்தியசாலைச் சீர் கேட்டினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நிர்வாகத் திறனின்மை, அடாவடித்தனம் என்பவை காரணமாக இவருடன் வேலை செய்ய இயலாதுள்ளது எனத் தாதிமார்களும் சிற்றூழியர்களும் கையெழுத்திட்ட மகஜர்கள் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

கிராமோதய சபைகள், தாதிமார் தொழிற் சங்கங்கள் என்பவையும் வைத்திய அதிகாரியின் நிர்வாகத்தைக் கண்டித்துள்ளன.

"நிர்வாகத்திறனின்மை காரணமாக 3.7.1996ல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் பதவி வறிதாக்கல் செய்யப்பட்டிருந்தார். அவரது கடமைகளைச் செய்யவென மூதூர் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட வைத்தியர்களான துஷ்யந்தகுமார், செல்வி பிரிந்தா ராமநாதன், ரங்கநாதன் ஆகியோர் அல்லல்களாலும் அவரது கையாட்களாலும் பயமுறுத்தப்பட்டு ஒருவர்பின் ஒருவராகத் துரத்தப்பட்டிருக்கின்றனர். அதுவுமல்லாமல் மாகாண அமைச்சினால் வழங்கப்பட்ட பதவி வறிதாக்கலை எவ்வித விசாரணைகளுமின்றி கொழும்பு அமைச்சு அதிகாரிகளைக் கொண்டு முறையற்ற விதத்தில் ரத்துச் செய்துள்ளார்.

மூதூர் மக்களதும் ஆஸ்பத்திரி ஊழியர்களதும் வெறுப்புக்களுக்குள்ளான குறிப்பிட்ட வைத்திய அதிகாரிமீது முழு அளவிலான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று மு. சந்திரகுமார் பா.உ. வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரைக் கோரியுள்ளார்.

இதன் பிரதிகள் டக்ளஸ் தேவானந்தா பா.உ.,வடக்கு கிழக்கு மாகாண தலைமைச் செயலர், சுகாதார அமைச்சுச் செயலர், மாவட்டச் சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மூதூர் வைத்தியசாலை ஊழியர்கள் வடக்கு-கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தியையும் சந்தித்தனர். 'உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தலைமைச் செயலர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

## மாவீரர்தின ஏற்பாடுகள் துரிதம்
### மட்டக்களப்பு இருளில் ஸ்தம்பிதம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-சுங்கான்கேணியில் 33 ஆயிரம் வோல்ட்ஸ் மின்சாரத்தைத் தாங்கிச் செல்லும் 5 பாரிய மின்கம்பங்களைப் புலிகள் சாய்த்து விட்டதால் கடந்தவாரம் முதல், மட்டக்களப்புக்கு இதுவரை கிடைத்து வந்த ஹபறணை ஊடான மின் விநியோகமும் முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது. இதனால் மட்டக்களப்பு நகர் உட்பட வாழைச்சேனையிலிருந்து 40 மைல் தூரமான பகுதி இருளில் ஸ்தம்பித்துள்ளது. ஃபக்ஸ் வசதி எங்குமில்லை. நகரைத் தவிர தொலைபேசி வசதி எவ்விடத்திலுமில்லை. தற்சமயம் பெரும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் கிடைக்கும் எரிபொருளைப் பெற மக்கள் நீண்ட வரிசையில் நிற்கிறார்கள். மெழுகுதிரி, குப்பி விளக்குகள், இலாந்தர் விளக்குள், பெற்றோமைக்ஸ் என்பவை பெரும் மவுசுடன் அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன.

எதிர்வரும் 27ம் திகதி வரை மட்டக்களப்பு நிலவரம் பெரும் தடுமாற்றமாகவே இருக்கும் என்று கருதப்படுகிறது. நவம்பர் 27ம் திகதி புலிகளின் மாவீரர் தினமாகும். அத்தினத்திற்கான ஏற்பாடுகளைப் புலிகள் தமது பகுதிகளில் தீவிரப்படுத்தியுள்ளதாக அறிய வருகிறது. அச்சம் நிறைந்த சூழ்நிலை மட்டக்களப்பில் காணப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# ஊக்குவிப்புக் கொடுப்பனவில் புறக்கணிப்பு!
## ஊழியர்களின் கோரிக்கை நிராகரிப்பு!!

(மன்னார் நிருபர்)

வன்செயல்கள் நடைபெறும் பிரதேசங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊக்குவிப்புக்கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் மன்னார்ப் பகுதி உள்ளடக்கப்படாதது குறித்து இப்பகுதியிலுள்ள அரச ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்படவேண்டிய இக்கொடுப்பனவு, நாட்டின் ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளன. இக்கொடுப்பனவைப் பெற மிகவும் தகுதியையுடைய இப்பகுதி எதற்காகப் புறக்கணிக்கப்பட்டது என்பது புரியாத புதிராகவே உள்ளது.

அடிப்படை வசதிகளான சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம், நீர், தொலைத்தொடர்பு உட்பட பலதுறைகளில் பின்னடைவைக் கொண்டிருக்கும் இம்மன்னார்ப்பகுதி வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள தொழிற்சங்கங்கள் பல இது தொடர்பாக ஒன்றிணைந்து குரல் கொடுத்தும் இதுவரை எதுவித பதிலும் இல்லை. எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது. 1996 ஆம் ஆண்டுக்கு மட்டும் இது வழங்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் மன்னார்த்தீவுக்கும் வெளியுலகுக்குமான நிலத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பகுதியில் சிவில் நிர்வாகம் நடைபெற்று வருகின்ற போதிலும் இடைக்கிடையே சில அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன.

தமது உயிரை கையில் பிடித்துக் கொண்டு தம் கருமங்களை செய்து வரும் அரச ஊழியர்கள், பொது நிர்வாக அமைச்சின் 29/95 இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் அநீதிக்குள்ளாகியுள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் பொழுது மன்னார் மிகவும் பின்தங்கியுள்ள ஒரு பகுதியாகும்.

# சந்தையாக மாறும் செயலகம்

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச் செயலகத்தில் இடப்பற்றாக்குறை நிலவுவதால் பணி புரியும் ஊழியர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.

போதிய மின்சார வசதிகள்; காற்றோட்ட வசதிகளற்ற குகை போன்று அமைந்துள்ள இவ்வலுவலகத்தின் பெரும்பாலான பகுதிகள் இருளிலேயே கிடக்கின்றன.

பொதுமக்கள் தினங்களில் இடவசதிக் குறைபாட்டினால் ஏறத்தாழ சந்தை போன்றே செயலகம் காட்சியளிக்கிறது.

தாங்கள் சந்திக்க வேண்டிய உத்தியோகத்தர்களைச் சுற்றி பொதுமக்கள் குழுமி நிற்கவேண்டியேற்படுவதால் அலுவலகத்துள் நுழைவது, வெளியே வருவது என்பன கடினமான காரியமாக இருக்கின்றன.

பிரதேசச் செயலாளரைச் சந்திக்க வேண்டிய மக்களின் வரிசை, பிற உத்தியோகத்தர்களின் மேசைகளைத் தழுவிச் செல்வது இங்கு சர்வசாதாரணமானது. ஓய்வூதியப் பிரிவும் 'ஒத்தாப்பு' ஸ்டைலிலான ஒரு பகுதியிலே அமைந்துள்ளது.

மழைக்காலம் வந்து விட்டாலோ உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இருக்கைக்குக் கீழே நுளம்புத்திரி கொளுத்தி வைத்துக் கொண்டுதான் கடமைகளில் ஈடுபடுகிறார்கள். பொதுமக்கள் தொகையும் தேவையும் பன்மடங்காக வளர்ந்துவிட்ட இக்காலத்திலும் பிரதான நுழைவாசல்களற்ற நூற்றாண்டுப் பழமையான கட்டடத்தில்தான் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தால் எப்படி?

பாராளுமன்ற உறுப்பினர்களும், தொடர்புடைய அதிகாரிகளும் சிரத்தை எடுத்து பிரதேசச் செயலகத்துக்கென ஒதுக்கப்பட்ட காணியில் புதிய கட்டடம் எழுப்ப நடவடிக்கை எடுக்காதவரை இந்தக் குறைபாடு தொடரும் என்று முரசிடம் தெரிவித்தனர் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சிலர்.

# மாணவர்கள் கண்டனப் பிரசுரம்

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவி கிருஷாந்தி மற்றும் ராஜினி மீதான பாலியல் பலாத்காரம், மற்றும் படுகொலைகளைக் கண்டித்து கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். பிரசுரம் ஒன்றையும் விநியோகித்தனர். பிரசுரம் விநியோகித்த மாணவர்கள் கொம்மாதுறை முகாமிலுள்ள இராணுவத்தினரால் எச்சரிக்கப்பட்டனர்.

வாழைச்சேனை நிருபர்

## கண்டிக்கிறோம்.

கைதடியில் கடந்த செப்டம்பர் 7ம் திகதி சீருடைப்படையின் காமுகவெறியர்கள் ஒன்பது பேரால் மாறி மாறி பாலியல் வன்மம் செய்யப்பட்ட பாடசாலை மாணவி கிருஷாந்தி, கோண்டாவிலில் ராஜினி ஆகியோர் மீது [illegible] கொலையுண்ட மாணவர் சமூகம் வன்மையாகக் கண்டிக்கிறது. பாடசாலை [illegible] வெளிநாட்டுச் [illegible] இழைக்கப்பட்ட வெறித்தனத்தை

மாணவர்கள்.
கிழக்குப்பல்கலைக்கழகம்.

# ஆசிரிய நியமனத்தில் புறக்கணிப்பு
## கண்டி மாவட்டத்தில் புகார்கள்

(கண்டி நிருபர்)

தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளுக்கு உதவி ஆசிரியர்களை நியமிக்கும் பொருட்டு கண்டி மாவட்டத்தில் காணப்படும் வெற்றிடங்கள் பற்றிய புள்ளி விபரம் சரியாக வழங்கப்படவில்லையென புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

28-29.9.96 ஆம் திகதிகளில் கண்டியில் இது தொடர்பாக நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு நியமனம் செய்யப்பட இருக்கும் ஆசிரியர் தொகையை விடவும் இரட்டிப்பாக பலரும் அழைக்கப்பட்டதால், தமக்கு நியமனத்திற்குரிய கடிதங்கள் கிடைக்காமையால் பெரும் அதிருப்திக்கும் விரக்திக்கும் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு பிரதேச பிரிவில் ஒருவரை நியமிக்கும் பொருட்டு இருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டதாலேயே பாதிக்கப்பட்டவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்துள்ளனர்.

ஹரிஸ்பத்துவ தொகுதியில் உள்ள 5 முஸ்லிம் பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு, கணிதம், பொது நியமனங்களுக்கான வெற்றிடங்கள் பல இருந் தும், தமிழ்பேசும் கல்வி அதிகாரிகள் உண்மையான புள்ளி விபரங்களைக் கொடுத்திருந்தனர். ஆனாலும் காலம் கடந்த புள்ளிவிபரங்களைச் சமர்ப்பித்ததனால் ஏற்பட்டுள்ள அநீதி குறித்தும் பாரபட்சம் குறித்தும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பல மாணவர்கள் அதிருப்திக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நீதி வழங்கக் கோரி கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் புகார் செய்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் உள்ள 17 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

# கடத்தப்பட்டவர்கள் கொலையாகினர்!

(புத்தளம் நிருபர்)

கடந்த 7.8.95ல் புத்தளம் நகரைச் சேர்ந்த இரு வாலிபர்களான எஸ். கிருஷ்ணபிள்ளை ராசகுமார், எஸ். கமலநாதன் ஆகிய இருவரும் கொழும்பு, புறக்கோட்டை பிரதான வீதியில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார்கள்.

அன்றிலிருந்து இவர்களைப் பற்றிய எதுவித தகவல்களும் கிடைக்காததால் கலக்கமடைந்த இவரது உறவினர்கள், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம். இல்யாஸின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து டாக்டர் இல்யாஸ். எம்.பி. இந்த இருவரின் நிலை குறித்து தனக்கு உடனடியாக அறியத்தருமாறு போலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு மா அதிபருக்கு கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இதன் பிரகாரம் கடந்த 21.10.96ல் குற்றத் தடுப்பு போலிஸ் மா அதிபரான திரு.நந்தன முனசிங்ஹவிடமிருந்து இல்யாஸ் எம்.பி.க்கு வந்த கடிதத்தில் இருவரும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது சம்பந்தமான பூரண விபரங்கள் தமக்கு கிடைத்துள்ளதாகவும் இது குறித்து மேலதிக உத்தரவு தமக்குக் கிடைக்கப்பெற்றதும் இதில் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஸ்போர்ட் திருட்டு
## இலங்கை இளைஞர்கள் கைது

புதுடில்லியில் வெளிநாட்டுப் பயணிகளிடம் பாஸ்போர்ட் திருடிவந்த மூன்று இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கருந்சன், ராதா முருகன், வேலுப்பிள்ளை கிருஷ்ணகுமார் மூவரும் இலங்கைத் தமிழர்கள். இவர்கள் சென்னையில் வசித்து வருகின்றனர். டில்லிக்கு அடிக்கடி சென்று, டில்லிக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளிடம் நன்றாகப் பழகுவார்களாம். அவர்கள் தங்கியிருக்கும் அறைகளுக்குச் சென்று அவர்கள் இல்லாத சமயங்களில் பாஸ்போர்ட் மற்றும் உடைமைகளைத் திருடுவார்களாம். பின்னர் இந்தப் பாஸ்போர்ட்டுக்களை வெளிநாடு செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு நல்ல விலைக்கு விற்றுவிடுவார்களாம்.

டில்லி பொலிசார் இவர்களை இம் மாதம் 1ம் திகதி கைது செய்தனர்.

# 80 இலட்சத்தில் இரண்டு பேரூந்து!

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி இலங்கைப்போக்குவரத்து சபையின் உபசாலைக்கு 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு நவீன ஜப்பானிய சொகுசு பஸ்களை கடந்த முதலாம் திகதி பிரதி தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வைபவ ரீதியாக கையளித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக இப்புதிய பஸ்கள் காத்தான்குடி சாலைக்கே வழங்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மக்கள் மயப்படுத்திய இ.போ.ச.சாலை முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

## அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

திருஞானசெல்வம் சுஜித்ரா 756351915 V
கலைமகள் வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.

ஜானகி பரமானந்தம் 686101096 V
நவாலி வடக்கு, மானிப்பாய்.

மேற்படி அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

விளம்பரப் பகுதி


## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

## UNION

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

## Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் பொதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P. உண்டு
தபாற் செலவு இலவசம்

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770

## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

நவம்பர் 19 முதல் 30 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 Fax : 436439 டிசம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், நவம்பர் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M.பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

## அகில இலங்கை இஸ்லாமிய தொண்டர் ஆசிரியர் சங்கம்
### அஸ்லிவ்டா - அங்குரார்ப்பண கூட்டம்

நாடு முழுவதும் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பல வருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். இவர்களில் அநேகருக்கு இன்னும் அரச நியமனம் வழங்கப்படவில்லை. இவர்களை ஏமாற்றி பதவிக்கு வந்தவர்கள் இவர்கள் விடயத்தில் அக்கறையற்று இருக்கின்றனர். இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது. ஆதலால், இஸ்லாமிய தொண்டர் ஆசிரியர்கள் தம்மை ஒரு சங்கமாக அமைத்துக் கொண்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் கட்சியின் வழிகாட்டலுடன் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குத் தயாராக வேண்டியுள்ளது.

எனவே அகில இலங்கை இஸ்லாமிய தொண்டர் ஆசிரியர் சங்கம் - ALL SRI LANKA ISLAMIC VOLUNTEER TEACHERS ASSOCIATION (அஸ்லிவ்டா ASLIVTA) - அமைக்கப்பட்டு மாவட்ட ரீதியான பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய செயற்குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளது. விரைவில், கொழும்பில் அஸ்லிவ்டா அங்குரார்ப்பணக் கூட்டமும் மாநாடும் நடைபெற உள்ளது.

சகல முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்களையும் கீழ்க்காணும் படிவத்தைத் தயாரித்து 10 ரூபா முத்திரையுடன் அனுப்பி அங்கத்தவராகப் பதிந்து கொள்ளுமாறு கேட்கிறோம்.

1 முழுப்பெயர்:
2 நிரந்தர விலாசம்:
3 கற்பிக்கும் பாடசாலையும்: விலாசமும்:
4(i) தேசிய அடையாள அட்டை இல:
4(ii) அனுபவம்:
5 உள்ளூராட்சி சபை
6 தேர்தல் தொகுதி
7 மாவட்டம்

அதிபர் அத்தாட்சி

இவர் எமது வித்தியாலயத்தில் ..........லிருந்து .........வரை தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

அதிபர் கையொப்பம் பாடசாலை முத்திரை

அனுப்ப வேண்டிய முகவரி

M.L. AWFER ORGANISER - ASLIVTA
SRI LANKA MUSLIM KATCHY
'DHARUL MUSLIMEEN' 27, Mohideen Masjid Road,
Maradana - Colombo - 10 , Tel : 434141

Advt.

## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
+
எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா. க்ஷயம். இளைப்பு. பீனிசம். தலைவலி. மலேரியா. கண்டமாலை. சொறி. சிரங்கு. பாண்டு. ரேகை. காக்கை வலிப்பு. வாதம். நீரிழிவு. மூலரோகங்கள். இருதய நோய்கள். இடுப்புவலி. நெஞ்சு எரிவு. குடல்வாய்வு. நரம்புத் தளர்ச்சி. வீரியக் குறைவு. இரத்தமின்மை. சொப்பன ஸ்கலிதம். பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு. மாசம் முன். பின் காணுதல். சூதகவலி. பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

முருகானந்தா வைத்தியசாலை
No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு - 11.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சுக்கான அழைப்புக்குள் போருக்கான முனைப்பு!

ஜனாதிபதி சந்திரிகா பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. அதனை முன்னிட்டு அரசாங்க பத்திரிகைகளில் ஒரு பேட்டி வெளியாகியிருந்தது.

ஜனாதிபதியின் பேட்டியில் உள்ள முக்கிய விடயங்களை கவனிக்காமல் விட்டுவிட்டு, புலிகளும் பேச்சு நடத்த தயார் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்று வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன.

இதற்கு முன்னரும் இந்திய புறொன்ட்லைன் சஞ்சிகைக்கு ஜனாதிபதி பேட்டியளித்திருந்தார். அப்போதும் இதேபோலவே வியாக்கியானங்கள் செய்யப்பட்டன.

'புறொன்ட்லைன்' பேட்டி வெளியுலகில் புலிகளை தனிமைப்படுத்த வீசப்பட்ட சுழற்பந்து போன்றது.

புறொன்ட்லைன் பேட்டி மூலமாக, ஒரு பிவாதமான தலைவியல்ல. நெளிவு சுழிவுகளோடு நிலமையைக் கையாளக் கூடியவர். போரை நிறுத்தி ஆக்கபூர்வமான சமாதான முயற்சிகளுக்குத் தயாராக இருப்பவர் என்பதை வெளியுலகுக்கு காட்டவே விரும்பினார் ஜனாதிபதி.

அதேநேரம் புலிகள் தாமாக முன்வந்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்டால் மட்டுமே அதுபற்றிய அடிப்படைகளை ஆராயலாம் என்பதையும் ஜனாதிபதி கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

புலிகளாக முன்வந்து பேச்சுக்கு தயார் என்று அறிவித்தால், அரசாங்கத்துக்கு சங்கடம் ஏற்படாது. போரில் அரசாங்கம் பெற்ற வெற்றியின் அடையாளமாக அதனைக் கூறிக்கொள்ளலாம்.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வருவதற்கு முன்னர் புலிகளைப் பற்றி கொண்டிருந்த மதிப்பீடுகளை இப்போது முழுமையாக மாற்றிக்கொண்டுள்ளார்.

அப்போது புலிகளைப் பற்றி சந்திரிகாவுக்கு விளக்கம் சொன்னவர்கள் போரில் அனுபவப்படாதவர்கள். புலிகளைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளாதவர்கள்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தான் புலிகள் தொடர்பான முழுச் சரித்திரமும் அவருக்குக் கிடைத்துள்ளது.

அதில் ஒன்றுதான், புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது என்பது பிரபாகரனுக்கும் பொருந்தும் என்பதை ஜனாதிபதி அறிந்து வைத்திருப்பது.

புலிகள் தாமாக முன்வந்து பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுக்கமாட்டார்கள். பேச்சுவார்த்தைக்கு தயார் என்று புலிகள் சொல்வார்களே தவிர, தமது தரப்புக்கு பலவீனமான நிலையில் பேச்சுக்கு தாமே வலிய முன்வரமாட்டார்கள் என்பது ஜனாதிபதிக்கு தெரிந்திருக்கிறது.

பலம்தான் அனைத்தையும் தீர்மானிக்கிறது. என்பதுதான் பிரபாகரனின் தத்துவம்.

இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் பூரணமாக நிலைகொண்டிருந்தது. புலிகளின் தலைமை வன்னிக் காட்டுக்குள் செல்ல வேண்டி ஏற்பட்டது.

வன்னிக் காட்டை நோக்கிச் செல்லும் முயற்சியிலும் இந்தியப்படை இறங்கியது.

புலிகளுக்கு அது ஒரு பாரிய நெருக்கடி. அதிலிருந்து தப்ப வேண்டுமானால் இந்தியாவுடன் பேச்சு நடத்தலாம் என்று புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் பிரபாகரனிடம் கூறினார்கள்.

**"பலம் இல்லாதபோது பின்வாங்கலாம். ஆனால் பேச்சுக்கு செல்லக்கூடாது. பலம் இல்லாத நிலையில் பேச்சுக்கு செல்வது சரணடைவதற்கு சமமானது. நான் உயிருடன் இருக்கும்வரை அதற்கு உடன்பட மாட்டேன்."** என்று சொல்லிவிட்டார் பிரபாகரன்.

கழுத்துக்குநேராக கத்திவருகிறது என்று தெரிந்த நிலையிலும் வலியச் சென்று பேச்சு நடத்தும் முடிவை நிராகரித்தவர் பிரபாகரன்.

இப்போது கத்தி பிரபாகரனை தொட முடியாத தூரத்தில்தான் இருக்கிறது. போர்க்கள நிலவரப்படி படையினர் நிலப் பகுதிகளை பிடித்துள்ளனர். ஆனால் புலிகள் இராணுவரீதியில் பலவீனமாக வில்லை.

மரபுப் போர் முறையில் படைகளும், கெரில்லாப் போர்முறையில் புலிகளும் பலமான நிலையில் உள்ளனர்.

போர்க்களத்தில் இழப்புகள் என்று எடுத்துக்கொண்டால் புலிகளைவிட படைத்தரப்புக்கே அதிக இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

குறைந்தது வாரத்தில் ஒரு தாக்குதலாவது புலிகள் நடத்திவிடுகிறார்கள். இந்நிலையில் வெற்றி தோல்வி என்பது இருதரப்புக்கும் இடையில் அடிக்கடி கைமாறிக்கொண்டிருக்கும் ஒன்றாகவே இருக்கிறது.

ஆனால் ஜனாதிபதியின் பேட்டிகளில் தமது தரப்பு பலமாக உள்ளதுபோன்ற தொனியே காணப்படுகிறது.

களத்தில் வெற்றிபெற்று எதிரியின் கழுத்துக்கு குறிவைக்கும் நிலையில் உள்ள ஒரு தரப்பின் தலைவியாகவே ஜனாதிபதி கூறும் கருத்துக்கள் அமைந்துள்ளன.

புறொன்ட்லைன் பேட்டியில் "பிரபாகரன் முன்வந்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்டால் அதுபற்றி பரிசீலிக்கலாம்." என்றார் ஜனாதிபதி.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டாம் என்று கூறுவதைவிட, அந்த மத்தியஸ்தம் ஏற்படவே முடியாத வகையில் புலிகளின் கோட்டுக்குள் பந்தை அடித்துவிட்டார் ஜனாதிபதி.

ஜனாதிபதியின் விவேகமான பந்தாட்டத்தைப் புரிந்துகொள்ளாமல், பேச்சுவார்த்தைக் கதவு திறக்கப்பட்டு விட்டது என்று கருதப்பட்டது. அரசாங்கம் பலவீன மாகிவிட்டது அதுதான் ஜனாதிபதி இறங்கி வந்துவிட்டார் என்றும் விமர்சனங்கள் சொல்லப்பட்டன.

இரண்டுமே தவறு என்பதை அடுத்தகட்ட நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் வெளிப்படுத்தியது.

கிளிநொச்சி நகரைப் படைகள் கைப்பற்றின. புலிகளின் தலைவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டு புலிகளை பயங்கரவாத இயக்கமாக வெளியுலகுக்கு காட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்போது மீண்டும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.

புறெண்ட்லைன் சஞ்சிகைக்கு கொடுத்த பேட்டியில் ஜனாதிபதி கூறிய கருத்தோடு, அரசாங்க பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டி முரண்படுகிறது.

சில அடிப்படைகள் தெளிவுபடுத்தப்படுமானால் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்பதை வலியுறுத்த மாட்டோம் என்பது புறொன்ட்லைனுக்கு ஜனாதிபதி சொன்ன கருத்து.

அரசாங்கப் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி அளித்துள்ள பேட்டியில், "ஆயுதங்களை கீழே வைத்தால்தான் பேச்சு நடத்தலாம்" என்று கூறியிருக்கிறார்.

புறொன்ட்லைன் பேட்டியில் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நிபந்தனைகள் எதனையும் ஜனாதிபதி நேரடியாகக் கூறவில்லை. பேச்சு நடத்துவதற்கான அடிப்படைகள், நம்பிக்கையை ஏற்படுத்த அவசியங்கள் என்றரீதியில் தான் சில காரணங்களைக் குறிப்பிட்டார்.

அரச பத்திரிகைகள் மூலம் உள்நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்தில் நிபந்தனைகள்தான் முன்னிறுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கூறியுள்ள இரண்டு நிபந்தனைகளும் தென்னிலங்கையில் அரசாங்கத்தின் 'இமேஜை' உயர்த்தக்கூடியவை.

போரிலே நாங்கள்தான் பலமாக இருக்கிறோம். புலிகளை பணியவைப்போமே தவிர, புலிகளிடம் ஏமாற மாட்டோம் என்பதை ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றே அர்த்தம்.

புலிகள் ஆயுதங்களை கைவிடவேண்டும், குறிப்பிட்ட காலத்திற்குள் பேச்சை நடத்தி முடிக்க வேண்டும் என்ற இரு நிபந்தனைகளுக்கும் மறைமுகமான அர்த்தம் அதுதான்.

ஆக, மொத்தத்தில் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் வெற்றி பெறுவது என்பதை அரசாங்கம் திடமான முடிவாகக் கொண்டுள்ளது என்பதையே ஜனாதிபதியின் பேட்டி உறுதிப்படுத்தியுள்ளது.

போர்க்களத்தில் பலமான நிலையில் உள்ள தரப்பின் பிரதிநிதியாக இருந்து பேசுவதைப் போலவே ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழல் எழாமல் பார்த்துக் கொள்வதில்தான் அரசாங்கம் அக்கறை காட்டுகிறது.

தனது உண்மையான நிலைப்பாட்டை வெளியுலகம் முன்பாக அரசாங்கம் தெரிவிக்குமானால் பாதகம் ஏற்பட்டுவிடும்.

புலிகள்மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்தாலும், சரி, புலிகள் இயக்கத்தையே தடை செய்வதாலும் சரி, அரசும், புலிகளும் பேசித்தான் பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்பதே வெளியுலகில் நிலவும் பொதுக்கருத்து.

புலிகள் தொடர்பான அரசாங்கத்தின் வாதங்களை ஏற்றுக்கொள்ளும் நாடுகளும் புலிகளுடன் பேசாமல் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்ற நிலைப்பாட்டை ஆதரிக்கப்போவதில்லை.

புலிகள் கெரில்லாப் போரில் பலமான நிலையில் இருக்கிறார்கள். தொடர் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் புலிகளை ஒரேயடியாக ஓரம்கட்டி விடலாம் என்று அரசாங்கம் நினைப்பது நடக்காது என்பது இராணுவ வல்லுநர்களுக்கு தெரிந்துள்ளது.

எனவே போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் புலிகளுடன் பேசித்தான் தீரவேண்டும் என்பதுதான் சர்வதேச அபிப்பிராயம்.

இந்த அபிப்பிராயத்துக்கு எதிராக கருத்துச் சொல்வதைவிட, புலிகளுடன் பேசத் தயாராக இருக்கிறோம் என்று அறிவித்துவிடுவதுதான் வசதியானது.

அதேசமயம் புலிகளின் குணம் அறிந்து நிபந்தனைகளை விதித்துவிட்டால் புலிகள் ஒருநாளும் பேச வரமாட்டார்கள்.

ஆக, ஜனாதிபதியின் சமீபத்திய பேட்டிகள் மூன்று தரப்பினரை நோக்கி மூன்று விதமான செய்திகளை தெரிவித்துள்ளன.

1. அரசாங்கம் பேச்சுக்கு எதிரானது அல்ல என்பதை வெளி யுலகுக்கு தெரிவிப்பது.

2. புலிகளை தோற்கடிப்பதில், பணிய வைப்பத்தில் அரசாங்கம் உறுதியாக இருப்பதை தென்னிலங்கை வாக்காளப் பெருமக்களுக்கு தெரிவிப்பது.

3. நீங்கள் பேச்சுக்கு வருவதானால் உங்கள் தோல்வியை நீங்கள் ஏற்றுக்கொண்டதாகவே அர்த்தம் என்பதை புலிகளுக்கு தெரிவிப்பது.

இரு தரப்புக்குமே இது பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய தருணமல்ல என்பது நன்கு தெரியும்.



ஆனாலும் தாம் மூடியுள்ள பேச்சுவார்த்தைக் கதவுக்கு முன்பாக 'பேசத் தயார்' என்ற வாசகங்களுடன் கூடிய திரையை தொங்க விட்டுள்ளன.

கதவை மூடியிருப்பது போரில் தமது கரங்களை மேலோங்கச்செய்ய! திரையை தொங்கவிட்டிருப்பது வெளியுலகின் கண்களைக் கவர. விஷயம் அதுதான்.

திரைகளுக்குப் பின்னால் ஆயுதங்கள் உராயும் சத்தங்கள் கேட்கின்றன. அடுத்த பாய்ச்சலுக்கு அரசாங்கம் படைகளைத் தயார்படுத்திவருகிறது.

புலிகளும் தமது அணிகளை ஒழுங்குபடுத்தி ஒவ்வோர் திசையிலும் இலக்குகளை குறிப்பிட்டு அனுப்பிவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

'பேச்சுவார்த்தைக்கான அறிகுறிகள் தெரிகின்றன' என்பது சொல்வதற்கு சுகமாக இருக்கலாம். ஆனால் களநிலவரம் நேர்மாறாக இருக்கிறது

போருக்கான உபாயங்கள் வகுப்பதிலும், மேலும் போரைத் தீவிரப்படுத்துவதிலுமே இருதரப்புக்களும் தீவிர சிந்தனையில் இருக்கின்றன.

# நெருக்கடியை திருப்பிக்கொடுக்கும் உத்திகள்

மறுதரப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வழிவகைகள் பற்றித்தான் இரு தரப்பும் யோசித்துக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கம் புலிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாகக் கருதிக்கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மக்களைத்தான் முதலில் பதம் பார்க்கின்றன. அரசின் அணுகுமுறை அவலை நினைத்து உரலை இடித்த கதையாகிவிடுகிறது.

ஆயினும் புலிகளுக்கும் சமீபகால களநிலவர மாற்றங்கள் புதிய நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளன. குறிப்பாக வடபகுதியில் தான் புதிய நெருக்கடிகளுக்கு புலிகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வவுனியாவை திறந்துவைத்து வன்னிப் பகுதிகளில் இருந்து மக்களை உள்ளே வர அனுமதித்துள்ளது அரசாங்கம்.

அகதிகள் தமிழகம் செல்வதைத்தான் புலிகள் விரும்பினார்கள்.

தமிழக அரசு அகதிகளை அனுமதிக்கும் என்று தமிழக முதல்வர் கலைஞர் கூறினாலும், அங்குள்ள அணுகுமுறைகள் அகதிகளை வரவேற்பதாக அமையவில்லை.

அகதிகளை ஏற்றிச் செல்லும் படகுகளை தமிழகப்பொலிசார் பறிமுதல் செய்துவிடுகின்றனர். அதனால் படகுகளில் அகதிகளை ஏற்றிச் செல்ல படகோட்டிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

அகதிகள் செல்லும் படகுகள் கடலில் வைத்து கடற்படையினரால் தாக்கப்படும் அபாயமும் இருக்கிறது. இவற்றால் தமிழகம் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை குறைந்தது.

அகதிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதைவிட தமிழகம் செல்வது தமக்கு சாதகம் என்றே புலிகள் கருதினார்கள். எனினும் நிலமைகள் புலிகளின் விருப்பத்துக்கு மாறாகவே அமைந்துள்ளது.

நிலப்பகுதிகளை இழந்தது இராணுவ ரீதியில் புலிகளுக்கு பெரும் பாதகமாக இல்லாவிட்டாலும், புதிய நெருக்கடிகள் பலவற்றுக்கு புலிகள் முகம் கொடுத்தாக வேண்டும்.

இடம்பெயர்வால் ஏற்பட்ட விரக்தி. திடீரென்று வாழ்க்கைமுறை மாறியதால் ஏற்பட்டுள்ள துயரங்கள் காரணமாக வன்னிப் பகுதியில் உள்ள மக்களில் ஒரு பகுதியினர் புலிகளின் நிர்வாக முறைகளுக்கு கட்டுப்பட மறுக்கிறார்கள்.

யாழ் குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் புலிகள் நிலை கொண்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் படையினர் மீது அதிருப்தி ஏற்படுவது புலிகளுக்கு சாதகமாக இருக்கிறது. இன்னொரு புறத்தில் "நீங்கள் எங்களை கைவிட்டு ஓடியதால் தானே இந்நிலை." என்று மக்கள் குற்றம் சாட்டுவதையும் புலிகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

முன்னர் வடபகுதியில் புலிகள் நிதி திரட்டக் கூடியதாக இருந்தது. ஆயுதங்கள் வாங்குவதற்காக என்று நூறுகோடி ரூபா திரட்டும் திட்டத்தை புலிகளின் நிதிப்பிரிவு முன்வைத்தது. பாரியளவில் அத்திட்டம் வெற்றியளிக்க ஆரம்பித்த நிலையில்தான் யாழ்குடாநாடு படையினர்வசம் சென்றது. அதனால் அத்திட்டத்தை தொடர முடியவில்லை.

இப்போது தமது நிதித் தேவைகளுக்கு வெளிநாடுகளிலுள்ள தமிழர்களையும், தமது வெளிநாட்டு வியாபார தொடர்புகளையுமே பெரியளவில் சார்ந்து நிற்கும் அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் வெளிநாடுகளிலும் முன்பு போல நிலமை இல்லை. கனடா, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டனர். பலவந்தமாக நிதி திரட்டியதாக குற்றம் சாட்டப்பட்டனர்.

வெளிநாடுகள் பலவற்றில் புலிகள் இயக்க நடவடிக்கைகள் அங்குள்ள பொலிசாரால் தீவிரமாகக் கண்காணிக்கப் பட்டுவருகின்றன.

இது தவிர உள்நாட்டில் ஆட்பற்றாக்குறை என்பது ஒரு பெரும் பிரச்சனையாக இருக்கிறது.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்ட பகுதிகளில் இருந்து கணிசமான உறுப்பினர்கள் தம்மோடு சேரலாம் என்று புலிகள் நம்பியிருக்கின்றனர். பொது மக்களுக்கும் படையினருக்குமான உறவில் ஏற்பட்டுவரும் விரிசல்கள் புலிகளுக்கு நம்பிக்கையூட்டுகின்றன. ஆனாலும் அதற்காக புலிகள் சில காலம் காத்திருக்க வேண்டியுள்ளது.

புலிகளும் விடப்போவதில்லை. படையினரும் திரும்பிச் செல்லப்போவதில்லை என்ற எண்ணம்தான் யாழ் குடாநாட்டு மக்களிடம் தோன்றியுள்ளது.

புலிகளால் வெற்றிகரமான தாக்குதல்கள் தொடுக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் புலிகள் யாழ்குடாநாட்டை மறுபடி தம் வசப்படுத்த முடியுமா என்பது தான் அங்குள்ள மக்களின் சந்தேகம்.

ஆனால் புலிகளின் தலைமை மட்டும் நம்பிக்கையோடு இருக்கிறது. இது தற்காலிக பின்னடைவு மட்டுமே என்று உறுதியாகக் கூறிவருகிறது.

"அவலங்களை நமக்குத் தந்தவர்களுக்கு அதையே திருப்பிக் கொடுப்பது தான்" பிரபாகரனின் தலைமைக் காலத்தில் ஏற்பட்டுள்ள சிறப்பு அம்சம் என்று புலிகளின் பத்திரிகை கூறுகிறது.

அதன் அர்த்தம் வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் போரின் விளைவுகளை, நாட்டின் ஏனைய பகுதி மக்களும் உணரச் செய்வதுதான். எனவே வடக்கு-கிழக்குக்கு வெளியே தாக்குதல்களை தொடர்வது புலிகளின் தாக்குதல் உபாயங்களில் முக்கிய அம்சமாக இருக்கிறது.

தனது கட்டுப்பாட்டு பகுதிகளில் தாம் எதிர்நோக்கும் அதே நெருக்கடிகளை, அரசாங்கமும் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் எதிர்நோக்கச் செய்வதுதான் புலிகளின் உத்தியாக இருக்கிறது.

நாரதர்

# அதிரடி அப்பாத்துரை



ரெண்டு எழுத்துத் தலைவரின் பிறந்தநாளை வருடா வருடம் மறக்காமல் கொண்டாடுவது அவரது மறுதரப்பார்தான். அவரே மறந்தாலும் இவை மறக்கமாட்டினம். பாதுகாப்புக்கள். ரோந்துகள். நித்திரை முழிப்புக்கள் என்று நவம்பர் மாதம் முழுக்க தலைநகர் வரை ஒரே கொண்டாட்டம் தான். மாவீரர் தினத்துக்கு ரெண்டு எழுத்தார் கொடி கட்ட முன்னரே தெற்கில் புதுப் புது பாதுகாப்பு அரண் கட்டிப்போட்டினம். என்ன, சனம்பாடுதான் திண்டாட்டம். ஆங்காங்கே பலத்த விசாரிப்புக்கள். தடவல்கள் நடக்குதாம்.

**போ**லிக் கையெழுத்துப் போடும் ஆட்களுக்கு ஒரு உற்சாகமான செய்தி. அப்படிக் கையெழுத்துப் போட சட்டத்தில் நல்ல இடம் இருக்குதாம். சொல்லியிருப்பவர் லேசுப்பட்ட ஆளில்லை. சட்டத்தை பக்கம் பக்மாகக் கரைச்சு குடிச்சவர். எனக்கும் சட்டம் தெரிஞ்ச ஆட்கள் சிலர் பழக்கம். இன்னொருவருக்கு சார்பாக என்ற குறிப்புடன் தனது பெயரைக் குறிப்பிட்டு வேறொருவர் தனது கையொப்பம் போடமுடியும். வேறொருவர் மாதிரியே கையொப்பம் போட எந்த நாட்டுச் சட்டத்திலும் இடமில்லைப் பாருங்கோ. செய்வதையும் செய்து போட்டு சட்டத்தை துணைக்கு கூப்பிடலாமோ. கறுப்புக் கோட்டுப் போடாத ஆட்களுக்கும் இப்பவெல்லாம் சட்டம் தெரியும் பாருங்கோ. பழைய பாச்சா பலிக்காது. நிலமானவர் செய்தது சட்டப்படியும் தவறு. சனத்தை முட்டாளாக்க நினைத்த காரணப்படியும் தவறு.

**ரெ**ண்டு எழுத்துத் தலைவரும் இனிமேல் உஷாராகத்தான் இருக்க வேணும். அவர் மாதிரியே கையொப்பம் போட்டு ஒப்பந்தம் எழுதினாலும் எழுதிப்போடுவினம். எழுதிப்போட்டு சட்டத்தில் இடமிருக்குது எண்டு சொன்னால் யார் என்ன செய்யிறது? எனக்கொரு சந்தேகம். கூட்டான கட்சியினர் சனத்திடம் கையொப்பம் வாங்கும் இயக்கம் நடத்தப்போவதாக அறிவிச்சவையல்லோ. ஏன் சிரமப்பட வேணும்? சனம் சார்பாக அவையே கையொப்பம் போட்டு அனுப்பி வைக்கலாம்தானே. ஒருவேளை அந்த நம்பிக்கையில்தான் அப்படி ஒரு திட்டம் போட்டினமோ தெரியில்லை. ச்சா.. சட்டம் படிச்சிருப்பது எத்தனை விதமான உபயோகம் பார்த்தியளோ?!

**டெ**ன்மார்க்கில் இருந்துவந்து இங்கு மாட்டுப்பட்ட பெண் தன்னையறியாமல் ஒரு நல்ல காரியம் செய்துபோட்டார். "எங்களையும் நீங்கள் திருப்பி அனுப்பினால் அவரது கதிதான்" எண்டு வெளிநாட்டிலுள்ள நம் நாட்டுக்காரர் உதாரணம் காட்டும் உதாரண புருசியாக மாறிப்போனார். சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாக பிரச்சனையைப் பெரிதுபடுத்திப் போட்டு அதிகார தரப்பார் கையைப் பிசைந்து கொண்டிருக்கினம். வெளிநாட்டுப் பேப்பர்காரரையும் பிடிச்சுப்போட்டினம். பின்னணி ஆராயப்பட்டதாம். என்ன பெரிய பின்னணி, அங்கே திரும்பிப் போய் கிழி கிழியென்று கிழிக்கப்போகினம். பொல்லைக் கொடுத்துப்போட்டு அடிவாங்கிய கதைதான் நடக்கப் போகுது. எப்படியோ வெளிநாட்டில் உள்ள நம்நாட்டவர்களுக்கு குறிப்பிட்ட விஷயங்கள் வரப்பிரசாதம் மாதிரித்தான்.

**பி**டிபட்ட ஆட்களை விடுவித்துப் போட்டு பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதில் அரசியல் வாதிகளுக்குள் பலத்த போட்டி இருக்குதல்லோ. இப்போது அரசியல்வாதிகளுக்கு போட்டியாக சட்டத்தரணிகளும் முழு மூச்சோடு இறங்கியிருக்கினம். டென்மார்க்கில் இருந்து வந்தவர் விடயத்தில் தாமே தலையிட்டதாக இரண்டு சட்டத்தரணிக் குழுக்கள் உரிமை கோரியுள்ளன. பொலிஸ் நிலையத்துக்கு முன்னால்போய் தலையைக்காட்டிவிட்டு வந்து தானும் உரிமை கோரலாமோ எண்டு வேறொரு சட்டத்தரணி என்னிடம் ஆலோசனை கேட்டார். 'சபாஷ் சரியான போட்டி' எண்டுமட்டும் சொல்லிவிட்டு நழுவி வந்துவிட்டேன்.

**யா**ழ்ப்பாணத்தில் தளபாடச் சாமான்கள் மிக மலிவாகப் பெற்றுக்கொள்ள முடிகிறதாம். பச்சைத் தரப்பாரிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் வீட்டுக்கதவுகளை விறகுத் தேவைக்கு வாங்கிக் கொள்ளலாமாம். எனக்குத் தெரிந்த ஒருவர் 50 ஆயிரம் ரூபாய்க்கு பச்சைத் தரப்பாரிடம் தளபாடங்கள் வாங்கியிருக்கிறார். அதன் பெறுமதி இரண்டு இலட்சம்வரை இருக்குமாம். சர்வதேச லெவலில் பார்த்தாலும் தளபாடம் மலிவாகக் கிடைக்கும் பகுதி யாழ்ப்பாணம் தான் போல கிடக்கு. கோவிந்தா, கோவிந்தா!

**ச**மீபத்தில் படித்த ஒரு சின்னக் கவிதை மாதிரியான அனுபவ மொழி. உங்களுக்கும் உதவுமோ என்று பாருங்கள்.

இடமறிந்து

"நண்பனிடத்தும்
காதலியிடத்தும்
விட்டுக் கொடுத்து
நேசம் பெறு.

பணியாளரிடத்தும்
பகையாளியிடத்தும்
தட்டிக்கொடுத்து
லாபம் பெறு"



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்
அற்புதன் - எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# யாழ்ப்பாணத்தில் இந்தியப்படைகளுக்கு ஏற்பட்ட ஆச்சரியம்!

103

**பிரபாமீது நம்பிக்கை**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பிரபாகரன் ஏற்கப்போவதில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்பதை பிரபாகரனை நன்கு அறிந்தவர்கள் புரிந்தே வைத்திருந் தனர்.

பிரபாகரனுடன் நேரடியான தொடர்புடன் தமிழ்நாட்டில் இருந்து 'வீர வேங்கை' பத்திரிகை நடத்தியவர் கோவை மகேசன்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக கோவை மகேசன் எழுதியதில் முக்கியமான சில பகுதிகள் இவை:

"ஜயவர்த்தனா முன்வைத்திருக்கும் 'அரசியல் தீர்வு' என்பது ஒரு சூழ்ச்சி வலை. அந்த வலையில் ஈழத் தமிழர்களோ, தமிழீழப் போராளிகளோ வீழ்ந்தால் அதை அறுத்துக்கொண்டு வெளி வரவே முடியாது.

'டொனமூர் என்றால் தமிழர் இல்லை' (DONOUGHMORE MEANS TAMILS NO MORE) என்று இலங்கைத்தீவின் சுதந்திரத்துக்கு பாடுபட்ட சேர்.பொன்.இராமநாதன் 1931ல் கூறிய அதே டொனமூர் திட்டத்தில் கூறப்பட்ட மாகாண சபைகளை-57 ஆண்டுக்கு முன்பு கூறப்பட்ட அதே ஆலோசனையை, ஐந்து, ஆறு தலைமுறை கழித்து இன்று 'அரசியல் தீர்வாக' முன்வைத்திருக்கிறார் ஜயவர்த்தனா.

வடக்குடன் கிழக்கை இணைக்கும் யூ.என்.பி. முஸ்லிம் பிரமுகர்களிடம் ஜே.ஆர்.என்ன சமாதானம் சொல்லியிருக்கிறார் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

"நீங்கள் ஏன் இதற்கு கலங்க வேண்டும்? கிழக்கில் சிங்களவரும், முஸ்லிம்களும் 34 சதவீதம் இருக்கிறீர்கள். உங்களுக்கு இஷ்டமில்லை என்பதை கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் காட்டிவிடுங்கள்!"

ஜே.ஆரின் சூழ்ச்சி புரிகிறதா? இடையிலுள்ள ஓராண்டுகாலத்தில் கிழக்கு மாகாணத்தில் மேலும் சிங்களவரைக் குடியேற்றி தமிழ் மாநிலம் உருவாகுவதை வாக்கெடுப்பு என்ற சாக்கில் இல்லாமற் செய்துவிடலாம்.

தமிழர்களைப் பூண்டோடு ஒழிக்கும் இத்திட்டத்துக்கு போராளிகள் என்று கூறிக்கொண்டு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவரும் சில குழுக்களை ஜயவர்த்தனாவும், இந்திய அரசும் பயன்படுத்த நினைக்கிறார்கள்.

சிறீலங்கா அரசுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அது இருநாட்டு எல்லைகளைப் பற்றியதாகவே இருக்கும் என்று கூறிய நமது புலிகள், ஒற்றையாட்சி சிறீலங்காவுடன் நிர்வாகப் பரவலாக்கல் பற்றிப் பேச்சு நடத்தச் செல்லலாமா?

சிறீலங்கா அரசு தமிழீழத்தில் நடத்தும் அனைத்துத் தேர்தல்களையும் தமிழீழ மக்கள் புறக்கணிக்கவேண்டும் என்றும், போட்டிபோடுகிற துரோகிகளைத் தீர்த்துக்கட்டியும் தமிழீழ மக்களின் சுயமரியாதையைக் கட்டிக்காத்து வருபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்கள் எதிர்காலத்தில் அரசியல்வாதிகளாகமாறி ஒற்றையாட்சிக்கும், ஜயவர்த்தனாவின் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட மாகாணசபைத் தேர்தலிலும் பங்குபற்றி சிறீலங்கா ஆட்சியில் பங்காளிகளாக மாறுவார்கள் என்பது எண்ணிக்கூடப் பார்க்க முடியாதது.

**தூங்கவைக்கும் முயற்சி**

தமிழீழ விடுதலைப் புலிகளை ஜே.ஆர்-ராஜீவ் உடன்பாடு என்ற பெயரில் நிராயுதபாணியாக்கி தூங்கவைக்கும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது.

நமது தமிழீழ விடுதலைப் புலிகள் தூங்குவதுபோல பாசாங்கு செய்வார்களே தவிர தூங்கிவிடமாட்டார்கள்.

ஆயுதம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதே என்றால், கொடுத்த ஆயுதங்களைப் பறித்திடப் புலிகளுக்கா அவகாசம் தேவை? எங்கே, எப்படி ஆயுதம் எடுப்பதென்பது தம்பி பிரபாவுக்குத் தெரியும்."

கோவை மகேசன் எழுதியவற்றில் பல விடயங்கள் பின்னர் உண்மையாகின.

**திக்ஷித் முரண்பாடு**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் ஒவ்வோர் அடிவைப்பிலும் பிரபாகரன் முரண்டுபிடிப்பவராகவே இருந்தார்.

ஆயுத ஒப்படைப்பு விடயத்தில் பிரபாகரன் தாமதம் செய்வதாக இந்தியத் தூதர் திக்ஷித் அதிருப்தி கொண்டுவிட்டார்.

இந்திய படையினர் புலிகள் விடயத்தில் மென்மையான போக்கை கடைப்பிடிக்கிறார்கள். கண்டிப்பாக நடந்துகொள்கிறார்கள் இல்லை என்பது திக்ஷித்தின் கருத்து.

ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு அமைப்பு உடனடியாக தனது ஆயுதங்களை அப்படியே ஒப்படைத்துவிடாது. விட்டுத்தான் பிடிக்கவேண்டும் என்று கருதினார்கள் இந்தியப்படை அதிகாரிகள்.

இலங்கையில் இந்தியப்படை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தவர் திபிந்தர் சிங். அவருக்கு பிரபாகரனின் மனப்போக்குகள் தெரிந்திருந்தன.

திபிந்தர் சிங்கின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்தில் இருந்தவர் ஜெனரல் ஹரிகிரத் சிங். அவரும் புலிகளுடன் முரட்டுத்தனமான போக்கைக் கையாளவிரும்பவில்லை.

புலிகள் இயக்கத்தினருக்கும், இந்தியப் படையினருக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்பட்டிருந்தது.

இந்தியப் படை அதிகாரிகள் புலிகள் இயக்க முகாம்களுக்குச் சென்றனர். புலிகள் இயக்கப் பிரமுகர்களுடன் நட்புடன் பழக ஆரம்பித்தனர்.

இத்தகவல்கள் எல்லாம் திக்ஷித்துக்கு எட்டிவிட்டன.

இந்திய இராணுவத் தளபதி கிருஷ்ண சுவாமி சுந்தர்ஜிக்கு திக்ஷித் ஒரு புகார் அனுப்பிவைத்தார். இந்தியப்படை நடவடிக்கை தொடர்பாக தனது புகாரில் திக்ஷித் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

"அமைதிப்படைக்கு என்ன பொறுப்பு வழங்கப்பட்டதோ அப்படை அதனை நடைமுறைப்படுத்த ஆயத்தமாகவில்லை. பிரபாகரனுக்கு பெரும் மரியாதை காட்டுகிறார்கள். இந்திய படை வீரர்களும், அதிகாரிகளும் பிரபாகரனுக்கு சல்யூட் அடிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். இப்போதுள்ள ஜி.ஓ.சி-54வது பிரிவை மாற்றாவிட்டால் நிலமை மோசமடையலாம்."

பொலிஸ் படை அமைக் கப்படாமை போன்றவை புலிகள் இயக்கத்தின் குற்றச்சாட்டுக்களாக இருந் தன.

ஏனைய இயக்கங்களை வடக்கு-கிழக்கில் பிரவேசிக்க அனுமதிப்பது தொடர்பாகவும் புலிகள் இயக்கத்தினர் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தனர்.

"அமைதியை நிலைநாட்டுவதற்காக என்று புலிகள் இயக்கத்திடம் இருந்து ஆயுதங்களை ஒப்படைக்கக் கோரும் இவ்வேளையில், ஏனைய தமிழ் இயக்கங்களுக்கு இந்திய அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியுள்ளது. தமிழ் பகுதிகளுக்கும் அவர்களை அனுப்பி வைத்துள்ளது. இந்திய அரசின் இத்தகைய நடவடிக்கை தொடர்பாக நாம் அதிர்ச்சியும், வியப்பும் அடைந்துள்ளோம்" என்று புலிகள்

களை தொடர்ந்து கேட்க முடிகிறது. தமிழ் நாட்டில் ஆறுகோடி தமிழர்கள் இருந்தும் ரேடியோவில் தமிழ் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுவதில்லையே. நீங்கள் ஏன் பிரச்சனைப் படுகிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பிய தமிழ்நாட்டு படைவீரர்களும் இருந்தனர்.

**வாங்கிக் குவித்தனர்**

அப்போது இந்தியாவில் வெளிநாட்டுப் பொருட்கள் அரிதாகத்தான் கிடைக்கும். அப்படிக் கிடைத்தாலும் விலை கூடுதலாக இருக்கும்.

பெரும்பாலான படைவீரர்களின் குடும்ப



பூஸாவில் இருந்து விடுதலையானவர்கள் இந்தியக் கடற்படைக் கப்பலில் ஏற்றப்படுகின்றனர்.

என்பது திக்ஷித்தின் குற்றச்சாட்டு.

இந்திய அமைதிப்படையைச் சேர்ந்தவர்கள் பலர் புலிகள் இயக்கத்தினரின் வீடுகளுக்குச் செல்கின்றனர். அவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு புகைப்படங்கள் எடுத்துக் கொள்கின்றனர். அவர்களின் திருமண வைபவங்களில் கலந்து கொள்கின்றனர் என்றும் திக்ஷித் குற்றம் சாட்டியிருந்தார்.

யாழ் மாவட்ட புலிகள் இயக்கத் தளபதி குமரப்பாவின் திருமணம் அமைதிப்படை வந்தபின்னர்தான் நடைபெற்றது. அத்திருமண நிகழ்ச்சியில் இந்தியப் படையைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டதாக திக்ஷித்துக்கு தகவல் கிடைத்துவிட்டது. அதன் பின்னர்தான் தனது அதிருப்தியைக் கொட்டி இந்தியப் படைத் தளபதிக்கு உடனே புகார் அனுப்பிவைத்தார்.

இயக்கத்தினர் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

ஏனைய தமிழ் இயக்கங்களை இந்திய அரசு தமிழ் பகுதிகளில் பிரவேசிக்க அனுமதித்தமையை புலிகள் விரும்பவில்லை. அதேசமயம் ஆயுத ஒப்படைப்பு நடவடிக்கையை தாமதப்படுத்த அது ஒரு காரணமாகச் சொல்லப்படக்கூடியதாக இருந்தமை புலிகளுக்கு மற்றொரு சாதகமாக அமைந்தது.

**படையினரின் ஆச்சரியம்**

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் நிலை

வாழ்க்கைத்தரம் உயர்வானதல்ல. அதனால் வெளிநாட்டுப் பொருட்களை கூடுதல் விலையில் வாங்கக்கூடிய வசதியும் இருந்ததில்லை.

யாழ்ப்பாணத்தில் கடைத்தெருக்களுக்குச் சென்ற இந்தியப் படைவீரர்களின் விழிகள் வியப்பால் விரிந்துபோயின.

எங்கும் வெளிநாட்டுப் பொருட்கள் குவிந்து கிடந்தன. விலைகளை விசாரித்துப் பார்த்தார்கள். அப்படி ஒன்றும் அதிகமாகத் தெரியவில்லை.

இருந்த பணத்தையெல்லாம் கொடுத்து ஆசைப்பட்ட பொருட்களையெல்லாம் வாங்கிக் குவிக்கத் தொடங்கி விட்டனர்.

என்ன குறை இருக்கிறது

# இந்தியப் படைகள்மீது இந்தியத் தூதரின் புகார்!

இந்தியத் தூதர் திக்ஷித்தை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. திக்ஷித்துக்கும் புலிகள் இயக்கம் தொடர்பாகவும், பிரபாகரன் தொடர்பாகவும் அப்போது நல்ல அப்பிப்பிராயம் இருக்கவில்லை.

பிரபாகரன் தொடர்பாக திக்ஷித் கொண்டிருந்த கருத்து மோசமானதாக இருந்தது. பிரபாகரன் தொடர்பாக திக்ஷித் தெரிவித்த கருத்து இது:

"பிரபாகரனுடன் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்புவைத்திருந்த இந்தியக் குடிமகனாகிய நான் அவர் பற்றிக் கொண்டுள்ள கருத்தினைக் கூறுகிறேன். அவர் ஒரு தன்னலங்கொண்ட அதிகாரப் பிரியர். ஒரே கட்சி, ஒரே தலைவன் என்ற நிலைப்பாட்டை உடையவர். உங்கள் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு ஒருவருடன் பழகுவது போலாகும் அவருடன் பழகுவது."

**புலிகளின் புகார்**

புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் தொடர்பாக திக்ஷித் அதிருப்திகொள்ளத் தொடங்கிய கட்டத்தில், பிரபாகரனும் இந்திய அரசின் போக்குக் குறித்து தனது அதிருப்தியை மெல்ல மெல்ல வெளிக்காட்ட ஆரம்பித்தார்.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை; வடக்கு-கிழக்கில் அவசரகால சட்டம் வாபஸ் பெறப்பட வில்லை; ஊர்க்காவல் படைகளின் ஆயுதங்கள் களையப்படவில்லை; புனர்வாழ்வு என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை நடத்துதல், தமிழ்

கொண்டிருந்த இந்தியப் படையினருக்கு அங்குள்ள வாழ்க்கை முறை ஆச்சரியமாக இருந்தது.

"வீடு, கிணறு, மலசலகூடம், ரி.வி, ரேடியோ என்று எல்லாம் இருக்கின்றன. உங்களுக்கு வேறு என்ன பிரச்சனை?" என்று இந்தியப்படை வீரர்கள் சிலர் பொது மக்களிடம் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

இந்தியாவில் பொதுவாக வீடுகளில் கிணறுகள் இருப்பது அரிது. மலசலகூடம் இல்லாத வீடுகளும் பெருமளவில் இருக்கின்றன. வெளிப்பகுதிகளுக்குச் சென்று காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்துவிடுவார்கள். ஒரு செம்பு தண்ணீருடன் காலைக்கடன் பூர்த்தியாகிவிடும்.

தமிழ் நாட்டில்கூட அதே நிலைதான். தமிழகத் தலைநகரான சென்னையில் சன நெரிசல் மிகுந்த வீதிகளின் ஓரத்தில் சிறுவர்கள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டிருப்பார்கள்.

குடிப்பதற்கும், குளிப்பதற்கும் குழாய்த் தண்ணீரைத்தான் நம்பியிருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்து குழாயில் தண்ணீர் பிடித்து வைத்தால்தான் அன்றைய குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும். கிணறுகள் எங்காவது அரிதாகத்தான் இருக்கும்.

இந்தியப் படையில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். இந்தியப் படையில் இருந்த ஏனைய மாநிலத்தவர்களுக்கு தமிழ் தெரியாது. தமிழ்நாட்டு படைவீரர்கள் தான் அவர்களுக்கும், யாழ்ப்பாண மக்களுக்கும் இடையே மொழிபெயர்ப்பாளர்களாகவும் உதவ வேண்டியிருந்தது.

தமிழ்நாட்டு படைவீரர்களுக்கும் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கைத்தரம் பேராச்சரியமாகத்தான் இருந்தது.

'இங்கே ரேடியோவில் தமிழ் நிகழ்ச்சி இங்கே? என்று ஆச்சரியம்தான் சென்ற இடங்களில் கண்ட நிலவரங்கள் மூலம் இந்தியப் படையினருக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

"யாழ்ப்பாண பெண்கள்கூட அழகாகத்தான் இருக்கிறார்கள். சுதந்திரமாக விதம் விதமான ஆடைகளோடு சிட்டுக் குருவிகள் போல சைக்கிள்களில் பறந்து திரிகிறார்கள். இத்தனை சுதந்திரம் நம்நாட்டுப் பெண்களுக்கு இல்லையே!" என்று தமிழ்நாட்டுப் படைவீரர் ஒருவர் வருத்தப்பட்டாராம்.

தாம் எதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பது பெரும்பாலான இந்தியப்படை வீரர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இங்கே தமது கடமை என்னவென்றும் அவர்களுக்குப் புரியவில்லை.

தமிழ் மக்களுக்கு உதவி செய்யவே தாம் வந்திருப்பதாக படைவீரர்களில் ஒரு பகுதியினர் கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் இந்த தமிழ் மக்கள் எல்லா வசதிகளோடும் இருந்துகொண்டு எதற்காகப் பிரச்சனைப்படுகிறார்கள் என்பதுதான் அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது.

**புலிகளுக்கு ஆதரவு**

திருக்கோணமலையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படைவீரர்களும் புலிகளுடன் சுமுகமான உறவு வைத்திருந்தனர்.

ஒப்பந்தத்தின் பின்னர் திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்படுவதாக புலிகள் இயக்கத்தினர் புகார் தெரிவித்தனர்.

குடியேற்றங்களை நடத்தும் முயற்சிகளை புலிகள் இயக்கத்தினர் எதிர்த்தபோது இந்தியப் படையினர் அந்த முயற்சிக்கு ஆதரவளித்தனர்.

இந்தியப்படையும், புலிகள் இயக்கத்தினரும் இணைந்து குடியேற்றங்களை தடுக்கிறார்கள். புலிகள் இயக்கத்தினர் சிங்கள மக்களை அச்சுறுத்தும்போது இந்தியப் படையினர் கண்டும் காணாமல் இருக்கின்றனர் என்று இலங்கைப் படையினருக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்தியப்படையினர் நின்றமையால் இலங்கைப் படையினர் எதிலும் நேரடியாக தலையிடமுடியாமல் இருந்தது. தமது கோபத்தை இலங்கைப் படை வீரர்கள் மறைமுகமாகத் தெரிவிக்கத்திட்டமிட்டனர்.

திருமலையில் அமைதிப்படையினர் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கைப் படைவீரர் ஒருவர் மறைந்திருந்து சுட்டுவிட்டு ஓடித்தப்பிவிட்டார்.

அதனையடுத்து திருமலையில் மற்றொரு சம்பவம் இடம்பெற்றது.

இந்தியப்படை வீரர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்றுபேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட மூவரில் மூவினத்தைச் சேர்ந்தவர்களும் இருந்தனர்.

இந்தியப் படைவீரர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதற்கான காரணம் என்னவென்று விசாரித்தபோது கிடைத்த தகவல் இது:

"அந்தப் படைவீரரின் சகோதரனும் ஒரு படைவீரன்தான். யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி விபத்து ஒன்றில் அந்தச் சகோதரன் பலியானார். செய்தி அறிந்ததும் ஏற்பட்ட சோகம் கோபமாக மாறியது. துப்பாக்கியை எடுத்து மூன்று பொதுமக்களை சுட்டுத்தள்ளி தனது கோபத்தைத் தணித்துக்கொண்டார்"

**கைதிகள் விடுதலை**

இலங்கை அரசு சிறைகளில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க ஆரம்பித்தது.

விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளில் நீண்டகால சிறைத்தண்டனையை எதிர்பார்த்திருந்தவர்களும் இருந்தனர்.

காலி பூஸா முகாமில் ஆடு மாடுகள்போல தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளும் விடுதலையானார்கள். விடுதலையான அனைவரும் காலி துறைமுகத்தில் தரித்து நின்ற இந்தியக் கடற்படைக் கப்பலில் ஏற்றப்பட்டனர்.

'நிர்தேஷக்' என்னும் பெயருடைய அக்கப்பல் மூலமாக விடுதலையானவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

மட்டக்களப்புக்கு ஆகஸ்ட் 15ம் திகதிக்குப் பின்னர்தான் இந்தியப் படையினர் அனுப்பிவைக்கப்பட்டனர்.

பிரிகேடியர் எல்.எம்.டார் தலைமையில் இந்தியப் படையின் 76வது இன்ஃபென்டரிப் பிரிவு மட்டக்களப்பில் இறங்கியது.

மட்டக்களப்பு மக்கள், இந்தியப் படையினருக்கு மாபெரும் வரவேற்பு அளித்தனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் அப்போது 18 அதிரடிப்படை முகாம்கள் இருந்தன. அவற்றில் மொத்தமாக 650 அதிரடிப்படையினரே இருந்தனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் சென்று இறங்கிய இந்தியப்படை வீரர்களின் எண்ணிக்கை 45 ஆயிரம்.

ஆகஸ்ட் மாதத்தில் மட்டக்களப்பில் தமது அலுவலகம் ஒன்றையும் புலிகள் இயக்கத்தினர் திறந்துவைத்தனர்.

அலுவலகத் திறப்பு விழாவுக்கு வந்து புலிக்கொடியை ஏற்றிவைக்குமாறு பரமதேவாவின் தாயாரை புலிகள் இயக்கத்தினர் அழைத்திருந்தனர்.

1984ல் கருவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் பலியானவர் பரமதேவா.

பரமதேவாவின் சகோதரர் வாசுதேவா புளொட் இயக்கத்தில் அரசியற்துறைச் செயலாளராக இருந்தார்.

தமது இயக்க வேலைகளை ஆரம்பிக்க வாசுதேவாவும், புளொட் இயக்க படைத்துறைச் செயலர் ஜோதீஸ்வரன் என்னும் கண்ணனும் மட்டக்களப்புக்குச் சென்றனர்.

மட்டக்களப்பில் புளொட் இயக்கத்தினரின் பிரவேசத்தை தடுப்பது என்று முடிவு செய்தனர் புலிகள் இயக்கத்தினர்.

புளொட் இயக்கத்தினரும் ஆயுதங்களுடன்தான் நடமாடினார்கள். புலிகள் இயக்கத்தினருக்கும், புளொட் இயக்கத்தினருக்கும் இடையே பரவலான மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

செப்டம்பர் 17ம் திகதி புளொட் இயக்கத்தைச் சேர்ந்த 70 பேர்வரை புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்டதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டன.

மட்டக்களப்பில் புளொட் இயக்க முக்கியஸ்தர்களை தீர்த்துக்கட்ட புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டனர்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றுக்கும் புலிகள் திட்டமிட்டனர்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஜே.ஆர். ஜயவர்த்தன: கண்டி யாத்திரை முதல் இறுதி யாத்திரை வரை!

அலசுவது- இராஜதந்திரி

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர்-

மின்சாரம், தொலைபேசி ஆகியன யாழ்ப்பாணத்தில் சீராக இருந்த காலம். நேரந்தவறாது யாழ்தேவி ரயில்கூட குடாநாட்டின் ஊடாக கூவிச் சென்ற காலகட்டம்.

அப்போது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கமே பதவியிலிருந்தது.

யாழ்நகரில் டச்சுக் கோட்டையைச் சூழவரவிருந்த முற்றவெளி மைதானம். அன்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன



கண்டி யாத்திரையில் ஜே.ஆர்

தலைமையில் ஐ.தே.க.வின் சிரேஷ்ட பிரமுகர்களின் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து பொதுக்கூட்டமொன்றை நடத்தியிருந்தது.

காலஞ்சென்ற காமினி திசாநாயக்கா, முன்னாள் அமைச்சர்களான எ.ஸி.எஸ்.ஹமீத், கே.டபிள்யு. தேவநாயகம் உட்பட ஐ.தே.க. பிரமுகர்கள் பலரும் அன்று யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற அப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றினர்.

ஜே.ஆர். ஜயவர்த்தன பேசுவதற்கு எழுந்தார். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் பலரும் அவருக்கு மாலைகள் சூடி ஆரவாரஞ்செய்தனர்.

முற்ற வெளியில் அன்று ஜே.ஆரின் பேச்சைக் கேட்பதற்காகப் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

மேடையிலிருந்தவர்கள், மற்றும் மக்கள் கூட்டத்தினருக்கும் கைகூப்பியபடி ஜே.ஆர். தமது பேச்சை ஆரம்பித்தார்.

எப்போதும் தமது பேச்சின்போது பழைய சம்பவங்களையும் அசைபோட்டுப் பேசுவதே ஜே.ஆரின் பாணியாகும். அன்று யாழ்ப்பாண முற்றவெளிக் கூட்டத்திலும் பழைய சம்பவங்கள் சிலவற்றை அவர் நினைவுபடுத்தத் தொடங்கினார்.

அச்சமயத்தில் மேடைக்கருகே கூட்டத்திலிருந்து ஒரு குரல் "கண்டியாத்திரையை ஏன் நடத்தினீர்கள்?" என்று ஒலித்தது. அப்போது ஜே.ஆர். ஜயவர்த்தன, "நான் அதற்கு பதில் கூறுகிறேன்; என்னைப் பேச அனுமதியுங்கள்" என்று கூறினார்.

அப்போது "இல்லை, இல்லை கண்டியாத்திரை பற்றிக் கூறிவிட்டு ஏனையவற்றைப் பேசுங்கள்," என்று கூட்டத்திலிருந்து வேறு பல குரல்கள் வெளிவந்தன.

மேடையிலிருந்த ஐ.தே.க பிரமுகர்கள் எழுந்து நின்று கூட்டத்தவரை ஆசுவாசப்படுத்த முயன்றனர்.

அவ்வேளையில் ஜே.ஆர். நின்றிருந்த மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டன. இரவு சுமார் எட்டுமணி இருக்கும்.

ஜே.ஆரின் மேடைக்குப் பின்னால் போடப்பட்டிருந்த அலங்காரச்சிகரம் ஆட்டங்காணத் தொடங்கியது.

"உன்னுடைய பேச்சும் வேண்டாம்; நீயும் வேண்டாம்," என்று கூறியபடி கூட்டத்திலிருந்து சரமாரியாக கற்களும், செருப்புக்களும் ஜே.ஆரின் மேடையை நோக்கி வீசப்படலாயின.

மேடைக்குப் பின்னாலிருந்த அலங்காரச் சிகரம் பிடுங்கி எறியப்பட்டதுடன் ஐ.தே.க.வினரின் கூட்டமும் முடிவுக்கு வந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டமக்கள் எதுவுமறியாதவர்களாக, அடிதடி எதுவும் பலமடைந்துவிடுமோ என்று பயந்தவர்களாக முற்றவெளி மைதானத்திலிருந்து நாலாபுறமும் சிதறி ஓடலாயினார்கள்.

மறுநாள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரியான 'ஈழநாடு', 'ஜே.ஆர். ஜயவர்த்தனவின் முற்றவெளிக்கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. கல்வீச்சுடன் மேடை அலங்காரங்கள் பிடுங்கி எறியப்பட்ட போதிலும் ஜே.ஆர். ஜயவர்த்தன காயமெதுவுமின்றி மேடையிலிருந்த அவரது ஆதரவாளர்களால் பாதுகாப்பாக முற்றவெளி மைதானத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டார்' என்ற செய்தியை வெளியிட்டிருந்தது.

1957ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தன கண்டியாத்திரையை மேற்கொண்டு, அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்காவுக்கும், தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேறாது தடுத்தார்.

தாம் ஒரு ஜனநாயகவாதி, அஹிம்சாவாதி என்று காட்டும் வகையில் 'யாத்திரை' என்ற பெயரில் அன்று ஜே.ஆர். அந்த ஒப்பந்தத்துக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தியிருக்கலாம். ஆனால் இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்படக்கூடிய எந்தவொரு தீர்வும் குழப்பப்படுவதற்கு அந்த விஷமத்தனமான கண்டியாத்திரையே கால்கோளிட்டிருந்தது.

அந்த யாத்திரை மூலமாகவே, தாம் ஒரு பேரினவாதி என்பதையும் ஜே.ஆர். முதலில் இனங்காட்டியிருந்தார்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இனப்பிரச்சினை இன்று இருந்திருக்காது என்பது அர்த்தமல்ல.

பேரினவாதிகள் தமது அரசியல் செல்வாக்கைக் கட்டி எழுப்புவதற்கு இனப்பிரச்சினையையே தொனிப்பொருளாகக் கொண்டுவந்துள்ளனர்.

1957ம் ஆண்டு கண்டியாத்திரையை நடத்தி ஜே.ஆர்., பண்டா-செல்வா, ஒப்பந்தத்தைத் தடுத்தார். ஆனால் ஓராண்டின் பின்னர்- 1958ம் ஆண்டு அன்றைய பிரதமர் பண்டார நாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே இனக்கலவரம் தமிழர்களுக்கெதிராக பூதாகரமாக வெடித்திருந்தது.

எனவே தேசியக் கட்சிகளான ஐ.தே.கவும், ஸ்ரீ.ல.சு.க.வும் கடந்தகாலம் முதற்கொண்டு நிகழ்காலம் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உளசுத்தியுடன் உடன்படவில்லை என்பதே தெளிவு.

1977ம் ஆண்டு பெரும்பலத்துடன் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

1978ம் ஆண்டு தாம் பெற்ற பெருவெற்றியையடுத்து காலிமுகத்திடலில் இலங்கையின் 30வது சுதந்திர தினத்திலன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியாகவும் ஜே.ஆர். பதவிப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

1970ம் ஆண்டு இலங்கை ஒரு குடியரசாக மாறியபோது, தேசாதிபதிப்பதவி ஜனாதிபதி பதவியாக மாறியிருந்தது. இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக- தேசாதிபதியாகவிருந்த வில்லியம் கோபல்லாவவே பதவி வகித்தார். ஆனால் 1978ம் ஆண்டிலேயே ஜே.ஆர். ஜயவர்த்தன முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

வடக்கிலும், கிழக்கிலும் இன்று மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவும் இடம்பெற்றிருக்கக் காணப்படுகின்றன. பாலியல் பலாத்காரம், கொலை, ஆட்கடத்தல், என்றெல்லாம் அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் கோரத்தாண்டவமாடுகின்றன.

1978ம் ஆண்டு ஜேர்.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தின் ஆரம்பகாலப் பகுதியிலேயே வடக்கே ஆட்கடத்தல், கொலை என்பன தலைகாட்ட ஆரம்பித்தன.

யாழ்ப்பாணத்தில் 1978ம்,79ம் ஆண்டுகாலப் பகுதியில் இளைஞர்கள் சிலர் காணாமல் போயிருந்தனர். அவர்களில் சிலரின் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட சடலங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர்களில், இன்பம் என்ற தீவிரவாத இளைஞரும் ஒருவராவர்.

ஜே.ஆரின் புலனாய்வு நடவடிக்கைகளைக் கவனிக்கவென அவரது நம்பிக்கைக்குரிய இராணுவ அதிகாரியான பிரிகேடியர் வீரதுங்க அன்று பூரண அதிகாரங்களுடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தின் கனரக இராணுவ வண்டிகள் யாழ்ப்பாண மண்ணில் உருள ஆரம்பித்ததும் ஜே.ஆரின் ஆட்சிக்காலத்திலேயாகும்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டமை, மற்றும் அங்கு விரிவான முறையில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை, 1983ம் ஆண்டு இனக்கலகம் என்பவையெல்லாம் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அராஜக ஆட்சியில் இடம்பெற்றவை என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.



சுமார் 11 வருடகாலம் ஜே.ஆர். ஜயவர்த்தன இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தார்.

தாராளப் பொருளாதாரக்கொள்கை என்பது அவரது தாரக மந்திரமாக இருந்தது. ஆனால் அத்தாரக மந்திரத்தை அவரால் ஒழுங்காக உச்சாடனம் செய்வதற்கு இலங்கையின் இனவாத அரசியல் இடமளித்திருக்கவில்லை.

1987ம் ஆண்டு ஜே.ஆர் ஜயவர்தனவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே ஏற்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் கூட வெறுமனே ஒரு கண்துடைப்பாகவே விளங்கியிருந்தது.

ஜே.ஆரைப் பற்றிய கதைவரும்போதெல்லாம், அவரைச் சார்ந்தவர்கள் இரண்டாம் உலகப் போரின் பின்னர் சான்ஃபிரான்ஸிஸ்கோ நகரில் அவர் நிகழ்த்திய உரைபற்றியே குறிப்பிடுவதுண்டு.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஓரங்கட்டப்பட்டிருந்த ஜப்பானை மீண்டும் உலக சமூகம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஜே.ஆர். தமது சான்ஃபிரான்ஸிஸ்கோ நகர உரையில் கூறியிருந்தார்.

"பகைமையை அன்பினாலேயே வெல்லவேண்டும்," என்று ஜே.ஆர். சான்ஃபிரான்ஸிஸ்கோ உரையில் கூறியிருந்தார். புத்தபகவானின் போதனைகளையும் அவர் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் 80ம் ஆண்டுகளின் நடுப் பகுதியில் வடக்கே தீவிரவாத நடவடிக்கைகள் சூடுபிடித்த வேளை, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டுமானால் "சாத்தானுடனும் நட்புக் கொள்வேன்" என்று ஜே.ஆர். கூறியிருந்தார்.

இக் கூற்றையடுத்தே யாழ்ப்பாண நகரின் மையத்திலிருந்த வைத்தியசாலையை இடம்மாற்றுவதற்கான உத்தரவை அன்று அரசு வழங்கியதுடன், யாழ்ப்பாணக்கோட்டையைச் சூழவரவுள்ள பிரதேசமும் ஒரு மரணவலயமாக உருமாறியது.

ஜே.ஆர். ஜயவர்த்தன நிறைவேற்று அதிகார ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தித் தம்மை ஒரு வரலாற்று நாயகனாக உருவாக்குவதற்கு முயற்சித்தார். ஆனால் அந்த முயற்சியில் அவர் கையாண்ட அணுகுமுறைகள்- குறிப்பாக இனப்பிரச்சினை தீர்வில் அவர் கொண்டிருந்த நிலைப்பாடு என்பன அவரது ஆட்சிக்காலத்தில் ஒரு கறை படிந்த அத்தியாயத்தையே ஏற்படுத்தியிருந்தது.

கண்டியாத்திரை மூலம் தம்மை ஒரு முக்கிய அரசியல் வாதியாக இனங்காட்டி தொடர்ந்து தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களிலெல்லாம் தம்மை ஒரு பெரும் அரசியல் சக்தியாக்க் கட்டி எழுப்புவதில் ஜே.ஆர். முனைப்பாக இருந்தார்.

தமது எண்ணங்களை, எதிர்பார்ப்புகளை ஜே.ஆர். நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் நாட்டுமக்களிடையே- பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் கூட அவரது நடவடிக்கைகள் பிரபலம் பெறவில்லை என்பதனையே ஜே.ஆரின் இறுதியாத்திரையும், அந்த யாத்திரை குறித்து சந்திரிகா ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாடும் புலப்படுத்தியிருந்தன.

# கூட்டணியின் இருமுகம்

அவசரகாலச் சட்டத்திற்கு எதிர்ப்பு.

போர் மூலம் சமாதானம் என்பதை திட்ட வட்டமாக அறிவித்துள்ள அரசாங்கத்திற்கு ஆதரவு.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரட்டைப் போக்கு அதுதான்.

அவசரகாலச் சட்டத்தை சட்டணி எதிர்த்தாலும், ஆதரித்தாலும் அச்சட்டம் நிறைவேறியே தீரும்.

அவசரகாலச் சட்டம் என்ற ஒன்றுதான் எல்லாவற்றுக்கும் காரணம். அரசாங்கம் எதற்கும் பொறுப்பல்ல. அதுதான் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கிறோம். அரசாங்கத்தை ஆதரிக்கிறோம் என்று கூட்டணியினர் நேரடியாகச் சொல்லவில்லையே தவிர, அவர்களது நிலைப்பாடு அப்படித்தானிருக்கிறது.

பாலியல் பலாத்காரம் செய்யவும், கழுத்தை நெரித்து இளைஞர்களை கடலில் வீசவும் அவசரகாலச்சட்டம் அனுமதி கொடுக்கவில்லை.

அவசரகாலச் சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மேற்கண்ட சம்பவங்கள் நடந்தே தீரும்.

அவற்றைத் தடுக்க ஒரே வழி சம்பந்தப் பட்டவர்கள் மீதான பூரண விசாரணையும், தகுந்த நடவடிக்கையும் மட்டுமே.

தண்டிக்கப்படமாட்டோம் என்ற நம்பிக்கைதான் வேலியே பயிரை மேயக் காரணமாக இருக்கிறது.

திருமலையில் ஐந்து சிறைக்கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அது தொடர்பான சந்தேகங்கள் இருந்தும் விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை.

இதற்குக் காரணம் அவசரகாலச்சட்டம் அல்ல. அரசாங்கத்தின் மெத்தனப் போக்குதான் காரணம்.

தேடுதல் நடவடிக்கைகளின்போது அத்துமீறல்கள் நடைபெறுகின்றன. இதற்கெல்லாம் காரணம் அவசரகாலச் சட்டம் அல்ல.

சட்டங்கள், மனித உரிமை சாசனங்கள் என்பவற்றுக்கெல்லாம் புறம்பான சம்பவங்கள் தான் இன்று நடைபெற்று வருகின்றன.

காரணம், போரில் வெற்றி பெறுவது ஒன்றே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது. போர் நடவடிக்கைகள் என்பதை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் தென்னிலங்கையில் தனது அரசியல் தளத்தை பாதுகாக்கவும் முற்பட்டுள்ளது.

இன்றைய அரசாங்கம் பதவியில் தொடர்வதற்கும், மீண்டும் பதவிக்கு வருவதற்கும் போரில் அறுவடையாகும் வெற்றிகள் மட்டுமே சொல்லிக்கொள்ளும்படியான சாதனைகளாக இருக்கின்றன.

வேலை வாய்ப்பு வழங்கினோம், அணைக் கட்டுகள் நிறுவினோம், இத்தனை கோடியில் வறுமை ஒழிப்புத் திட்டம் தீட்டினோம் என்று அரசாங்கம் பட்டியலிட எதுவுமில்லை.

யாழ் குடாநாட்டைப் பிடித்தோம், கிளிநொச்சியைக் கைப்பற்றினோம், கிழக்கில் புலிகளை தாக்கினோம் என்றுதான் பட்டியல் காட்டவேண்டும்.

அரசாங்கத்தின் கையில் உள்ள பட்டியல் அதுதான். அந்தப் பட்டியிலில் உள்ள சாதனைகள் அரசாங்கத்தின் அல்லது ஆளும் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளால் பெறப் பட்டவையல்ல. படையினரின் நடவடிக்கைகளாலும், இரத்தம் சிந்தல்களாலும் பெறப் பட்டவை.

மேலும் அந்தப் பட்டியலில் சாதனைகளை நிரப்பியாக வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திப் போடலாம். பொதுத் தேர்தலை ஒத்திப்போடுவது சிரமம். ஆகவே அடுத்த தேர்தலுக்கு இடையே பட்டியலை சாதனைகளால் பூர்த்தி செய்தாக வேண்டும்.

எனவே-படைகளைச் சார்ந்தே இருக்க வேண்டும். படையினரை உற்சாகப்படுத்தியே ஆகவேண்டும். எடுத்ததுக்கெல்லாம் நடவடிக்கை என்று படைத்தரப்பை வெறுப்பூட்டக் கூடாது.

இதுதான் அரசாங்கத்தின் நிலைப்பாடு.

புலிகள் மீதான வழக்குகள், போருக்கான ஆட் திரட்டல்கள் மூலம் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் அரசாங்கம் தனது நிலைப் பாட்டை தெளிவுபடுத்திவிட்டது.

ஒளிவு மறைவில்லாமல் ஜனாதிபதியே மிகத் தெளிவாக புலிகளை பலவீனப்படுத்தும் காலக்கெடுவையும் அறிவித்துள்ளார்.

ஆக, பேச்சு மூலமே தீர்வு காணவேண்டும். என்று கூறும் கட்சிகள் இரண்டில் ஒன்றை தெரிவுசெய்ய வேண்டும்.

போர் மூலம் தீர்வைக் காண்பது என்று முடிவு செய்துள்ள அரசாங்கத்தை ஆதரிப்பதா?

அல்லது அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொண்டு பேச்சு மூலமான தீர்வுக் காகப் போராடுவதா?

இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிப்பது போன்றதுதான்.

அதைத்தான் கூட்டணி செய்கிறது.

அவசரகாலச் சட்டம்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்பதுபோல மக்களை நம்ப வைப்பது கூட்டணிக்கு அவசியமானது. காரணம்; அப்போதுதான் அதனை எதிர்ப்பது மூலமாக தம்மை ஒரு துணிச்சலான அரசியல் கட்சியாகக் காட்டிக் கொள்ளலாம்.

அரசாங்கத்தை ஆதரிப்பதும் முக்கியமானது. அப்படியானால்தான் தேவையான சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனாதிபதிமீது சண்டேலீடர் சொன்ன குற்றச்சாட்டைக் கண்டு யாருக்கும் வராத கரிசனை கூட்டணிக்கு வந்தது. போலிச் கையெழுத்துப் போட்டு அறிக்கை விடுமளவுக்கு அவசரம் ஏற்பட்டது.

"பாருங்கள் உங்களுக்கு கைகொடுக்க வேண்டிய சமயங்களில் நாங்கள் கைகொடுக் காமல் விட்டிருக்கிறோமோ? எதோ எங்கள் எதிர்கால அரசியலுக்காக அவசரகாலச் சட் டத்தை மட்டும் எதிர்க்கிறோம். அதைக் கண்டு கொள்ளாதீர்கள். இப்படிச் செய்தால்தானே அடுத்த தேர்தலில் நாமும் வெற்றி பெறமுடியும். மீண்டும் உங்களுக்கு ஒரு நெருக்கடி என்றால் உதவிசெய்ய நாம் பதவிக்கு வரமுடியும்" என்பதுதான் கூட்டணிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான இரகசிய உடன்பாடு.

கையெழுத்து இயக்கம், கண்டன அறிக்கை எல்லாம் கூட்டணியினர் தம்மை தக்கவைத்துக் கொள்ளும் தந்திரம் என்பது அரசாங்கத்திற்கு தெரியும்.

கூட்டணி தப்பான வழிக்கு செல்லாது என்ற நம்பிக்கை அரசுக்கும் இருக்கிறது. அரசியல் தீர்வுப் பொதியை தயாரிக்க உதவியதுமுதல், இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் பல இரகசிய ஆலோசனைகளை வழங்கும் பிரமுகர்கள் உள்ள 'கனவான்களின்' கட்சிமீது அரசாங்கம் ஏன் சந்தேகப்படப்போகிறது?

ஆனால் இவையாவும் மிகப் பழைய தந்திரங்கள். இப்போதெல்லாம் மக்கள் சொல்லுக்கும், செயலுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை சுலபமாக கண்டுபிடித்துவிடுகிறார்கள்.

கூட்டணி தனது பழைய தந்திரங்கள் என்ற குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டலாம் என்று நினைப்பதுதான் தப்புக்கணக்குத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

கடந்தவாரம்

சிறையில் இருந்து பிணையில் விடுதலையாகிறாள் பூலான்.
பூலானை அவளது சகோதரி வீட்டுக்கு அனுப்புகின்றனர் பெற்றோர்.
பூலானின் கிராமத்திற்குள் கொள்ளைக் கோஷ்டி புகுந்து பூலானின் பெரியப்பா வீட்டில் கொள்ளை நடத்துகிறது.
பழி பூலான்மீது விழுகிறது.
பூலானின் பெற்றோரைப் போலிசார் கைது செய்கின்றனர்.

இனி...

# கொள்ளை ராணி பூலான்தேவி

"என் பெரியப்பா வீட்டுக்குள் கொள்ளைக் கோஷ்டி புகுந்தது. பெரியப்பாவின் மகன் அந்தக் கழுதை மையாதீனையும் கொள்ளைக்காரர்கள் நையப்புடைத்துவிட்டார்கள்' என்ற செய்தியைக் கேட்கச் சந்தோசமாகத்தான் இருந்தது.

பணம். அந்தப் பாழாய்ப்போன பணத்துக்காகத்தானே எங்களைப் பாடாய்ப் படுத்தியது பெரியப்பா குடும்பம். இப்போது எல்லாவற்றையும்தான் கொள்ளைக் கோஷ்டியினர் அள்ளிக்கொண்டு போய்விட்டார்களே.

இப்போது பெரியப்பா குடும்பத்தினர் என்ன செய்யப் போகிறார்கள். தலையில் அடித்துக்கொண்டு கதறுவார்கள். பெரியம்மாக் கிழவி மூக்கைச் சிந்திக் கொண்டு ஒரு மூலையில் கிடப்பாள்.

மையாதீனுக்கு எப்படி அடித்திருப்பார்கள்? எப்படியெல்லாம் அந்தக் கழுதை துடித்திருப்பான்?

ஐயோ..... அதையெல்லாம் என் கண்ணாரக் காணமுடியவில்லையே!

எனக்கும் இப்படித்தானடா வலித்தது. என்னை முறித்துப் போட்டீர்களேயடா பாவிகளே. இப்போது பாருங்களடா நீங்கள் முறிந்து போயிருக்கிறீர்கள் என்றெல்லாம் கத்தவேண்டும் போல இருந்தது.

கொள்ளைக் கோஷ்டியை நான்தான் ஏவிவிட்டேன் என்று வாய்கூசாமல் சொல்லியிருக்கிறார்கள் பாவிகள்.

அதுகூட எனக்குப் பெரிதாகப்படவில்லை. என்னைத் தேடிப்போன பொலிஸ்காரர்கள் அப்பாவையும், அம்மாவையும் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற செய்திதான் நெஞ்சைப் பிளந்தது.

செய்யாத குற்றங்களுக்கு எல்லாம் நான் ஒருத்தி அனுபவித்ததுபோதும். பாவம், வயதான காலத்தில் அவர்களுமா நரக வேதனைப்படவேண்டும்.

வேண்டாம். என்ன நடந்தாலும் பரவாயில்லை. பொலிசில் சென்று உண்மையைச் சொல்லிப் பார்க்கலாம்.

நான் சொல்லும் உண்மைக்கு ஒரு வெள்ளிக்காசுகூட மதிப்பிருக்கப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும்.

என்னைக் கண்டதுமே அந்த நாய்கள் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு கெட்டகாரியம் செய்யத்தான் நினைக்கும்.

பரவாயில்லை. அனுபவித்தவள் தானே. எனக்கு என்ன, நாய்கள் கடிப்பது புதிதோ? அப்பாவையும், அம்மாவையும் அந்த நரகத்தில் இருந்து முதலில் மீட்க வேண்டும்.

அதனால்தான் என் கிராமத்துக்குச் செல்லும் முடிவை எடுத்தேன்.

அக்காதான் அழத்தொடங்கினாள். அப்பாவும் அம்மாவும் பொலிஸில் பிடிபட்டது, நான்தான் கொள்ளைக் கோஷ்டியை ஏவிவிட்டதாக பெரியப்பா குடும்பத்தினர் அபாண்டம் சொன்னது, இப்போது நான் பொலிசுக்கு சென்று சரணடையப்போவது என்று எல்லாவற்றுக்கும் சேர்த்து அழு அழுவென்று அழுது தீர்த்தாள்.

"பூலான்மீது ஒரு குற்றமும் இல்லையே. அவள் ஏன் ஒளிக்க வேண்டும்? பொலிசில் போய் உண்மையைச் சொல்லுவோம். நாம் ஏன் பயப்படவேண்டும்?" அத்தான்தான் ஆறுதல் சொன்னார்.

குற்றம் செய்யாதவர்கள்தான் பொலிஸ்காரரிடம் பயப்படவேண்டியிருக்கிறது என்பது அத்தானுக்கு எங்கே தெரியப்போகிறது. உண்மையைச் சொன்னால்தான் உள்ளே பிடித்துப் போடுகிறார்கள். உண்மை பேசுவதற்கு என்ன மரியாதை இருக்கிறது என்பதை அத்தான் அறியவில்லை. பாவம், அவர் நல்ல மனிதர்.

அக்காவுக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்பதற்காக நானும் அத்தான் சொன்னதற்கு தலையாட்டினேன்.

என்னுடன் துணையாக அத்தானும் வந்தார். ஜமுனா நதியைக் கடந்துதான் கிராமத்துக்குச் செல்ல வேண்டும்.

தோணி தயாராக இருந்தது. தோணிக்காரருக்கு என்னை நன்றாகத் தெரியும். எங்களைக் கண்டதும் அவர் முகத்தில் பீதி தெரிந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டார்.

"பூலான்! இப்போது ஏனம்மா இங்கே வந்தாய்? கிராமத்தில் எல்லோரும் உன்மீது ஆத்திரமாக இருக்கிறார்கள். நீ அங்கே போனால் உன்னை அடித்தே கொன்று விடுவார்கள்! வேண்டாம், திரும்பிப் போய் விடு! ஆத்திரமெல்லாம் அடங்கட்டும்! அதன்பின்னர் வந்துபார்!" என்று கெஞ்சாத குறையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதற்குள் தோணிக்குள் இருந்தவர்கள் என்னைக் கண்டுவிட்டனர். எல்லோருமே முறைத்து முறைத்துப் பார்ப்பதுபோலிருந்தது.

"அப்பாவையும், அம்மாவையும் பிடித்து வைத்திருக்கிறார்கள். நான் போகாவிட்டால் விடமாட்டார்கள். நடப்பது

தருவது 18 ரசிகன்

நடக்கட்டும். நான் வரத்தான் போகிறேன்" என்றேன்.

பயன்கருதாமல் பிறருக்கு உதவும் மனிதர்களும் இல்லாமல் போய்விடவில்லை. அந்தத் தோணிக்காரரும் சூதுவாதில்லாத மனிதர்.

"பூலான்! நீ பிடிவாதக்காரி! நான் என்ன சொன்னாலும் நீ கேட்கப்போவதில்லை. நான் சென்று கிராம மக்களிடம் பேசிப்பார்த்துவிட்டு வருகிறேன். அதுவரை நீங்கள் இருவரும் இங்கேயே நின்று கொள்ளுங்கள். யார் கண்ணிலும் படாமல் மறைந்து நில்லுங்கள்." என்றார்.

அதுதான் சரி என்று அத்தானும் சம்மதித்தார். நான் வேண்டா வெறுப்பாக தலையாட்டினேன்.

எனக்கென்னவோ இப்படி ஒளிந்தும் பயந்தும் இருப்பது அசிங்கமாகத் தெரிந்தது.

தோணிக்காரர் அக்கரைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது அவரது முகம் இருண்டு கிடந்தது.

"அங்கு யாரும் சமாதானமாகவில்லை. நீ கிராமத்தில் கால்வைத்தால், அங்கேயே வெட்டிப் புதைத்துவிடுவார்கள். நான் சொல்வதை நம்பு!" என்றார்.

நான் கேட்கவில்லை. பிடிவாதமாக நின்றேன். "திரும்பிப்போய்விடுவோம் பூலான்!" என்று அத்தானும் சொல்லிப் பார்த்தார். நான் மறுத்துவிட்டேன்.

தோணிக்காரர் வேறு வழியில்லாமல் ஒரு பெருமூச்சோடு எங்களைத் தோணியில் ஏற்றிக் கொண்டார்.

கரைக்கு சென்று இறங்கும்போது இருட்டிவிட்டது.



தோணி கரைக்கு வந்தபோது யாரோ எம்மைப் பார்த்துவிட்டு ஓடுவதுபோலத் தெரிந்தது. சரியாகப் பார்ப்பதற்கு இடையில் இருளில் கரைந்துவிட்டார்கள்.

நானும் அத்தானும் எங்கள் வீட்டை நெருங்கும்போதுதான் அக் காட்சி தெரிந்தது.

கிராமத்தவர்கள் பலர் சேர்ந்து கம்புகளோடும், தடிகளோடும் எங்களை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தனர்.

கரையில் இருந்து கவனித்துவிட்டு யாரோ ஓடிப்போய் செய்தி சொல்லியிருக்க வேண்டும்.

நான் பயப்படவில்லை. ஏனோ தெரியாது இப்போதெல்லாம் எனக்குப் பயமே வருவதில்லை.

அத்தானை நினைத்துத்தான் கவலைப்பட்டேன் என்னுடன் வந்ததற்காக அவரும் அடிபடப்போகிறாரே என்று வருத்தமாக இருந்தது.

ஓடி ஒளியவும் சந்தர்ப்பமில்லை. அருகே வந்துவிட்டார்கள்.

"ஏனடி வேசி இங்கே வந்தாய்?"

முன்னால் ஓடிவந்தவன் ஒருவன் கத்திக் கொண்டே தடியை வீசினான்.

என் தோளில் அடி விழுந்தது. சுளீர் என்று வலித்தது.

அத்தான் குறுக்கே நின்று கூட்டத்தைப் பார்த்து கைகூப்பினார்.

"அவளை ஒன்றும் செய்யாதீர்கள். நீங்கள் நினைப்பது போல் ஒன்றும் நடக்கவில்லை. பூலான் எங்கும் போகவில்லை. எங்கள் வீட்டில்தான் இருந்தாள்!"

"நீதான் இவளை வைத்திருந்தாயா? சிறுக்கி வேசை! அக்கா புருசனையே மயக்கிப் போட்டுவிட்டாள்!" யாரோ ஒரு நாய்க்குப் பிறந்தவன் கத்தினான்.

நான் காதுகளை மூடிக்கொண்டேன். அத்தான் இதனை எதிர்பார்க்கவில்லை. அவமானத்தால் குறுகிப் போனார்.

கூட்டத்தினருக்குள் மையாதீனின் ஆட்கள்தான் முன்னணியில் நின்றார்கள். அவர்கள்தான் கிராமத்தினரைத் தூண்டிவிட்டிருக்க வேண்டும்.

"ஏனடி சிறுக்கி, கொள்ளைக்காரருக்கு என்னடி கொடுத்தாய்? எத்தனை பேருக்கடி முந்தானை விரித்தாய்?" கேட்டவனை எனக்குத் தெரியும். மையாதீனின் வலது கையாக இருக்கும் கழிசடை.

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"வாடா! உனக்கும் விரிக்கிறேன். நாய்க்குப் பிறந்த நாயே! உன் கூடப்பிறந்தவர்கள் யாருக்கடா முந்தானை விரிக்கிறார்கள்?"

தொண்டை வலிக்க கத்தினேன். "கொல்லுங்களடா இந்த வேசி மகளை!" என்று ஒருவன் கத்திக்கொண்டே தடியால் அடித்தான்.

அத்தான் குறுக்கே புகுந்து மறிக்க, அவரது நெஞ்சில் ஒருவன் எட்டி உதைத்தான். அய்யோ.. அத்தான்.. வேரறுந்து விழுந்த மரம்போல பிடரி அடிபட தரையில் விழுந்தார்.



பூலான்

நான் மடங்கி அமர்ந்து தலையைக் கைகளால் பொத்திக்கொண்டு குனிந்து கொண்டேன். என் முதுகுமீது மளார் மளார் என்று தடிகளால் அடித்தார்கள்.

"கொள்ளைக்காரர்களுக்கு இந்த உடம்பைத்தானேயடி காட்டி மயக்கினாய்!" யாரோ ஒரு கழிசடை நாய் கத்துவது கேட்டது.

எனக்குள் இருந்த வன்மம் உயிர்த்தது. பல்லைக் கடித்து வலியைத் தாங்கிக் கொண்டேன்.

'அடியுங்களடா. அடியுங்கள். ஒவ்வொரு அடியையும் திருப்பித் தரத்தான் போகிறேன். இதே கிராமத்தில், இதே இடத்தில் நானும் திருப்பி அடிப்பேன். என் மனதில் அந்த வன்மம் எழுந்ததும் உடல் விறைத்துப் போகிறது. வலிகள் தெரிவதில்லை.

அடிக்கடி இப்படித்தான் நடக்கிறது. 'திருப்பியடிப்பேன்' என்ற எண்ணம் வந்ததும் எங்கிருந்துதான் என் உடலுக்கும், மனதுக்கும் அந்தப் பலம் வருகிறதோ நான் அறியேன்.

அந்த நம்பிக்கைதான் என்னை வாழ வைத்தது. ஒரு பெண்ணான என்னை எத்தனை நாய்கள் கூடிக் குதறிப்போட்ட போதும் வலிதெரியாமல், செத்துப்போ என்று தூண்டாமல் அந்த நம்பிக்கைதான் காப்பாற்றியிருக்கிறது.

ஆபாசமாக திட்டுகிறார்கள். கேட்கிறது. அநியாயமாக அடிக்கிறார்கள். விழுகிறது. நான் மட்டும் திருப்பியடிப்பதை நினைத்துக் கொண்டு எதுவுமே நடக்காததுபோல, யாரோ ஒரு மூன்றாம் மனிசிக்கு நடப்பது போல இருக்கிறேன்.

சத்தியமாய் அனுபவித்துச் சொல்கிறேன். துணிந்தால் துக்கமில்லை.

"பொலிஸ் வருகிறது விலகுங்களடா" என்று கூட்டத்தில் முணு முணுப்புக் கேட்கிறது.

தங்கள் பங்குக்குக் கடிப்பதற்காக வருகிறார்கள். வரட்டும்.

என் கையில் பிடித்து இழுத்து: "எழுந்து கொள்ளடி" என்கிறான் ஒருவன்.

"இவளை அடித்தீர்களா?" என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்கிறான் ஒரு பொலிஸ்காரன்.

"இல்லை ஐயா! நீங்கள் வரும்வரை பிடித்து வைத்திருந்தோம். தப்பியோடப் பார்த்தாள் ஐயா. கல் எடுத்து எறிந்தாள். அதுதான் லேசாக.."

"அடித்தீர்களாக்கும். பெட்டைக் கழுதை, படாத இடத்தில் பட்டு செத்துத் தொலைந்தால் யார் பதில் சொல்வது. சரி... சரி எல்லோரும் கலைந்து போங்கள். இனி நாங்கள் இவளைப் பார்த்துக் கொள்கிறோம். வாடியம்மா, கொள்ளைக் கோஷ்டித் தலைவி!"

அந்தப் பொலிஸ்காரன் கேலியாக நினைத்து சொன்ன வார்த்தைகள் விரைவில் பலிக்கப்போகிறது என்பது அவனுக்குத் தெரியாது.

என்னை ஜீப்பில் ஏற்றினார்கள். அத்தானை விரட்டிவிட்டார்கள்.

ஜீப்பில் ஏறும்போது உறுதியாக நினைத்துக் கொண்டேன்:

"பொலிஸ் என்னைப் பிடிப்பது இதுதான் கடைசியாக இருக்க வேண்டும்."

(தொடர்ந்து வரும்)

# ஜாக்சனை மொய்த்த ரசிகைகள்

மைக்கேல் ஜாக்சன் மீது பெண் ரசிகைகள் பைத்தியமாக இருக்கிறார்கள் என்பது தெரிந்த செய்திதான்.

ஆனால் இந்தியா போன்ற ஒரு நாட்டில் மைக்கேல் ஜாக்சன்கூட அப்படியொரு வரவேற்பை நினைத்தும் பார்த்திருக்க மாட்டார்.

இம்மாதம் நவம்பர் 1ம் திகதி இந்தியாவில் மும்பையில் மைக்கேல் ஜாக்சனின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

1500 ரூபாய், 5 ஆயிரம் ரூபாய் என்று டிக்கெட்டுக்களுக்கு கட்டணம் அறிவிடப்பட்டது. இலட்சக்கணக்கான பார்வையாளர்களுடன் மைதானம் நிரம்பி வழிந்தது. ஆண்களை விட பெண் ரசிகைகளின் எண்ணிக்கை அதிகம்.

வண்ணக் கலர்களில் கண்கவர் விளக்குகளின் ஒளியில் மைக்கேல் ஜாக்சன் தனது பொப் இசை நிகழ்ச்சியை ஆரம்பித்தார்.

உடலை வளைத்தும், நெளித்தும் மைக்கேல் ஜாக்சன் துள்ளியும், குலுங்கியும் ஆட மைதானம் முழுக்க ஒரே ஆரவாரம்.

பாதுகாப்புக்காக பதினைந்தாயிரம் பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். பொலிசாரில் பலர் ரசிகர்களை கட்டுப்படுத்தும் பணியை மறந்துவிட்டு, மைக்கேல் ஜாக்சனை ரசிக்க ஆரம்பித்துவிட்டனர்.

5 ஆயிரம் ரூபா டிக்கெட்டுக்கு உரிய ஆசனங்களில் பொலிசார் சென்று இடம் பிடித்துக்கொண்டதுதான் மற்றொரு வேடிக்கை.

ஏதோ பொலிசாரில் ஒரு பகுதியினர் என்றாலும் உஷாராக இருந்தமையால் மைக்கேல் ஜான்சன் உருப்படியாக திரும்பிச் செல்ல முடிந்தது.

அதுவும் இல்லாவிட்டால் பைத்தியமான ரசிகர்களும், ரசிகைகளும் அவரை பிய்த்தெடுத்திருப்பார்கள்.

தனது ஆட்டம், பாட்டம் மூலமாக தூள் கிளப்பிக்கொண்டிருந்த ஜாக்சன் ஒரு கட்டத்தில் கண்ணீர்விட்டு அழுதார்.

அவர் அழுவதைப் பார்த்ததும் பெண் ரசிகைகளும் அழத்தொடங்கிவிட்டனர்.

"மைக்கேல் அழவேண்டாம், நாங்கள் உங்களை நேசிக்கிறோம்" என்று பெண் ரசிகைகள் அழுதபடியே சப்தமிட்டனர்.

நிகழ்ச்சி முடியுமட்டும் அரங்கம் முழுவதும் கூச்சலும், அழுகையும், மகிழ்ச்சி ஆரவாரமும் என்று ஒரே அல்லோல கல்லோலம்.

மும்பையின் திரைப்பட நடிகர்களும், நடிகைகளும் படையெடுத்து வந்திருந்தனர். மொடல் அழகிகளும் வந்து மைக்கேல் ஜாக்சனை தரிசித்துக் கொண்டிருந்தனர். நடிகர்களும், நடிகைகளும் தங்களை



மறந்த ஆடிப்பாடத் தொடங்க ரசிகர்கள் பாடு ஒரே கொண்டாட்டம்.

அரங்கத்திற்குள் ஆடியும், கூச்சலிட்டும் களைத்துப்போன ரசிகர், ரசிகைகளுக்கு தாகத்தைப் போக்க வழியில்லை. ஒரு போத்தல் தண்ணீரை 40 ரூபாய்க்கு தருணமறிந்து விற்பனை செய்தனர் வியாபாரிகள். ஒரு பாக்கெட் உருளைக் கிழங்கு சிப்ஸ் 50 ரூபாய்வரை விற்கப்பட்டது.

நிகழ்ச்சி முடிந்ததும் ஒரு பத்திரிகையாளர் சொன்ன கருத்து: "இந்தியப் பெண்கள் ரொம்பத்தான் முன்னேறி விட்டார்கள். தங்கள் உணர்ச்சிகளை பகிரங்க அரங்கில் வெளிப்படுத்தும் அளவுக்கு கட்டுப்பெட்டித்தனத்தையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டார்கள்."

# இந்தியச் சிறையில் இங்கிலாந்து கனவுக்கன்னி

இங்கிலாந்தின் கனவுக் கன்னி ஒருவர் இந்தியச் சிறையில் மூன்று வருடங்கள் நுளம்புகளோடு போராடியிருக்கிறார்.

அவரது பெயர் சமந்தா ஸ்லேட்டர்



அவர் ஒரு மொடல் அழகி. விளம்பரப் படங்களுக்கு ஒயிலாகப் போஸ் கொடுப்பவர். அவர் ஒரு முறை ஒரு போஸ் கொடுத்தால் நூறு தடவை போஸ் கொடுத்த மாதிரி. அந்தமாதிரி ஒரு புகழ்.

சம்பாதித்த பணத்தை செலவுசெய்து ஜாலியாக இருக்கலாம் என்று இந்தியாவுக்கு உல்லாசப் பயணம் சென்றார். தனியாக அல்ல, அவரது ஆண் நண்பர், ஸ்டைலாக ஆங்கிலத்தில் சொல்வதானால் 'போய் ஃபிரண்ட்'டுடன் சென்றார். நண்பரின் பெயர்: ஆண்ட்ரு.

இந்திய கேரள மாநிலத்தில் ஜோடியாக உலகை மறந்து இருந்தபோது பொலிஸ் லபக்கென்று பிடித்துவிட்டது.

இருவரிடமும் 27 கிராம் உயர்தரப் போதைப் பொருள் இருந்தது. அதனால் கேரள நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

பத்து வருட கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இங்கிலாந்திலுள்ள பத்திரிகையாளர்களை சந்தித்து சமந்தா ஸ்லேட்டரின் உறவினர்கள் சந்தித்தனர். "இந்தியச் சிறையில் சமந்தா ஸ்லேட்டர் கஷ்டப்படுகிறார். இங்கிலாந்தின் கனவுக் கன்னியை இந்தியச் சிறையில் நுளம்புகள் பதம் பார்க்கின்றன. எத்தனை பெரிய அநியாயம் பாருங்கள்" என்று சொல்லி உசுப்பேத்தி விட பத்திரிகைகளும் பக்கம் பக்கமாக எழுதித்தள்ளின.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசுடன் தொடர்பு கொண்டது.

அழகியை விடுதலை செய்ய வழி உண்டா என்று கேட்டது. அதற்கிடையே மூன்று வருடங்கள் சிறையில் கழித்து விட்டார் அழகி.

மூன்று வருடங்களும் மிகப் பணிவாக நடந்துகொண்டார். நல்லொழுக்கம் காரணமாக சிறைத்தண்டனை கழிக்கப்பட்டுள்ளது. எனவே அழகியை விடுதலை செய்யலாம் என்று கேரள ஆளுநர் உத்தரவிட்டார்.

மூன்று வருட சிறைவாழ்க்கையின் பின் அழகி விடுதலையாகிவிட்டார்.

விடுதலையான அழகி மகா சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போனார்.

"எங்கள் நாட்டில் குறைந்தளவு போதைப் பொருள் வைத்திருந்தால் தண்டனை கிடையாது. பரவாயில்லை. சிறையில் இருந்தமையால் சத்யசாயி பாபாவின் நூல்களை படிக்க முடிந்தது. அவர்தான் இனி என் குரு." என்று சொல்லிவிட்டு இங்கிலாந்துக்குப் பறந்து போய்விட்டார்.

அதுமட்டுமா, "இனிமேல் போதை ஒழிப்பு பிரச்சாரம் செய்யப்போகிறேன்." என்றும் ஒரு போடு போட்டுள்ளார்.

சிறையில் இருந்தபோது பாபாவின் நூல்களைப் படித்து அழகி சாமிப் போக்காக மாறியது காதலருக்குப் பிடிக்கவில்லையாம். உறவை முறித்துக் கொண்டார்.

காதலரும் விரைவில் விடுதலையாகப் போகிறார். உறவு முறிந்துவிட்டதால் அவருக்காகக் காத்திருக்காமல் இங்கிலாந்துக்கு சென்றுவிட்டார் அழகி.

ஜோடிப் புறாக்களாக வந்தவர்கள் தனிப்பறவைகளாக தாயகம் திரும்புவது சோகம்தானே!

# வித்தியாச அடையாள அட்டை

அடையாள அட்டையின் முக்கியத்துவத்தைப் பற்றி நம்மைவிடத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை.

ஆனால் மலேசியாவில் சமீபத்தில் ஒரு புதுவிதமான அடையாள அட்டை அறிமுகமாகியுள்ளது.

கள்ளக்காதலர்கள் யார், திருமணமான தம்பதியர் யார் என்று கண்டுபிடிக்கத்தான் அந்த அடையாள அட்டை.

மலேசியாவில் 13 மாநிலங்கள் உள்ளன. கிட்டத்தட்ட பாதிப்பேர் முஸ்லிம் மக்கள்.

விபச்சாரம், மற்றும் கள்ளக் காதலர்களை பிடிப்பதற்காக நட்சத்திர விடுதிகளில் சோதனைகள் நடைபெறுவதுண்டு. அப்போது முஸ்லிம் தம்பதிகளும் தேவையில்லாமல் மாட்டிக் கொள்கிறார்கள்.

இது தொடர்பாக மலேசிய நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. முஸ்லிம் தம்பதிகளுக்கு தனியான அடையாள அட்டை கொடுக்கப்பட்டால் சோதனைகளில் சிக்கிக் கொள்ள மாட்டார்கள் என்று வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து திருமணமான முஸ்லிம் தம்பதிகளுக்கு திருமண அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கைக்கு அடக்கமான அளவில் அடையாள அட்டை இருக்கும்.

விடுதிகளில் தங்கச்செல்லும் தம்பதிகள் அடையாள அட்டையை மறந்துவிட்டுப் போனால் அம்பேல்தான்.



படிப்பகம்

www.padippakam.com

## 12 ஆயிரம் பேர் வேண்டும்

பிறந்தநாள் என்றதும் 'கேக்'தான் ஞாபகம் வருகிறது. ஒரு கேக்கை தயாரித்து துண்டுகளாக வெட்டி பகிர்ந்து கொடுத்தால் கொடுப்பவருக்கும், பெறுபவருக்கும் இனிப்பான விஷயம். வெளிநாட்டவர்களின் பண்பாடு என்றாலும் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடுவது நம் இரத்தத்திலும் ஊறிவிட்ட பண்பாடாகிவிட்டது.

கேக் பிரியர்களுக்கு ஒரு இனிப்பான தகவல். படத்தில் இருப்பதுதான் பிரமாண்டமான ஸ்ரொபெரி கேக். இதன் எடை 5 ஆயிரம் இறாத்தல். இதனை சாப்பிட்டு முடிக்க 12 ஆயிரம் பேராவது இருக்க வேண்டும். இதனைத் தயாரித்த சாதனைப் பெண்தான் கேக் முன்பாக போஸ் கொடுக்கிறார். இந்த கேக் 1954ல் லெபனான் நாட்டில் உருவாக்கப்பட்டது. இப்படி ஒரு கேக்கை செய்தால் பிறந்தநாளுமாச்சு, சாதனை செய்ததுமாச்சு. முயன்றுபாருங்களேன். ஓடி ஓடிக் கொடுக்காலம் ஊருக்கெல்லாம் கொடுக்கலாம்.




## கடலுக்குள் காதல்

காதல் என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரிய சமாச்சாரமல்ல. கடல் குதிரைகள் காதல் விஷயத்தில் மனிதர்களையும் தூக்கிச் சாப்பிட்டு விடக் கூடியவை. கடல் குதிரைகளின் ஆணும், பெண்ணும் சந்தித்துவிட்டால் வம்புதான். நீண்ட நேரத்திற்கு பிரிக்கவே முடியாது.


கடல் குதிரைகளிடம் உள்ள இன்னொரு விஷயமும் ரொம்ப ஆச்சரியமானது. முறைதவறிய உறவுகளுக்கு இடமே இல்லை. எனக்கு நீ, உனக்கு நான் கோட்பாடுதான். கடல் ஆராய்ச்சியாளர்களே வியந்துபோயிருக்கின்றனர்.

இன்னொரு ஆச்சரியமும் இருக்கிறது. கடல் குதிரைகளில் பெண் கடல் குதிரை முட்டைகளைப் போடும். அந்த முட்டைகள் ஆண் கடல் குதிரையின் கர்ப்பப் பையில் சேர்ந்துவிடும். ஆண்களால் முடியாத காரியம் என்று பெண்கள் சொல்லும் விஷயத்தை கடல் குதிரைகள் முறியடித்து விட்டன.

கடலுக்குள் சந்தித்து அண்ணலும் நோக்க, அவளும் நோக்க காதல் மலர்ந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறிவிட்ட கடல் குதிரை ஜோடிதான் படத்தில் காணப்படுகிறது.

கடல் குதிரைகளுக்கு மனிதனால்தான் ஆபத்து. கடல் குதிரை மாமிசம் சாப்பிட்டால் காதல் சாமாச்சாரங்களில் வீரியமாக இருக்குமாம் அதனால் கடல் குதிரைகளை தேடிப்பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். கடல் குதிரைகளாவது சந்தோசமாக காதலித்து குடும்பம் குட்டிகளாக வாழ மனிதன் அனுமதிக்கக் கூடாதா. விடமாட்டார்களே!





## சைக்கிளில் தூங்கலாம்

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என்பதற்கு உதாரணமான சைக்கிள் இது. பயணம் செய்ய மட்டுமல்ல, பயணத்தின் இடையில் களைப்பு ஏற்பட்டால் ஒரு மரநிழலில் ஒதுங்கி தூங்கவும் முடியும். படுக்கையே தேவையில்லை. சைக்கிளே படுக்கையாக மாறிவிடும். அதுவும் சாதாரண படுக்கையல்ல சொகுசான படுக்கை.

இந்த அபூர்வ வசதி கொண்ட சைக்கிளை உருவாக்கியவரின் பெயர்; ஜோசப் ஸ்ரெயின் லவ். சிக்காக்கோவைச் சேர்ந்தவர்.

நம்நாட்டில் இடம்பெயரும் மக்களுக்கு இவ்வாறான சைக்கிள்கள் கிடைத்தால் மிக உபயோகமாக இருக்கும். ஆனால் இரண்டு சைக்கிள்களை மட்டும்தான் ஜோசப் உருவாக்கி இருக்கிறார் என்பது ஏமாற்றமான செய்தி.


தகவல் பெட்டி



## சுடாத சட்டி

சமையலுக்கு பயன்படுத்தும் கைபிடியுடன் கூடிய பொரிக்கும் சட்டி(சோஸ்பான்) உங்கள் வீட்டில் இருக்கிறதா? பொரிக்க, வறுக்கப் பயன்படுத்தும் சட்டியை வியக்கும் வகையில் பிரமாண்டமாகச் செய்திருக்கிறார்கள். தாயும் நான்கு பிள்ளைகளும் ஹாயாக அமர்ந்திருப்பதில் இருந்தே அதன் பிரமாண்டம் தெரிகிறதல்லவா.

அமெரிக்காவின் தலைநகரான வோஷிங்டனில் இச் சாதனைச் சட்டி உருவாக்கப்பட்டது. சட்டி சுட்டதடா கையை விட்டதடா என்றொரு பாட்டு இருக்கிறது. இது சுடாத சட்டி.






## இப்படியும் ஒரு மரியாதை

நம் வீடுகளில் எல்லாம்தான் தும்புத்தடி இருக்கிறது. மாய்ந்து மாய்ந்து வீட்டைச் சுத்தம் செய்து பொதுச்சேவை செய்கிறது. வேலை வாங்கிவிட்டு ஒரு மூலையில் போட்டுவிடுகிறோம். தும்புத்தடிக்கு நாம் கொடுக்கும் மரியாதை, அவ்வளவுதான். தும்புத்தடிக்கு பட்டுக்குஞ்சமா கட்ட முடியும்? என்று கேட்பீர்கள்.

படத்தில் இருக்கிறது பாருங்கள் தும்புத்தடி. இதற்குப் பட்டுக் குஞ்சம் கட்டவில்லை. ஆனால் பார்ப்போர் யாவரும் வியக்குமளவுக்கு செய்துவிட்டனர்.

தும்புத்தடி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று தனது 50வது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது. தமது நிறுவன வளர்ச்சிக்குக் காரணமான தும்புத்தடிக்கு ஒரு மரியாதை செய்தால் என்ன என்று யோசித்தார்கள். அதன் விளைவு, மாபெரும் தும்புத்தடி ஒன்றை செய்து காட்சிக்கு வைத்தனர்.

உலகிலேயே மிகப் பெரிய தும்புத்தடி என்ற மரியாதை இதற்குத்தான். இதன் உயரம் 40 அடி. அகலம் 13 அடி. ஆயிரத்தி நானூற்றி நாற்பது சாதாரண தும்புத்தடிகளை செய்வதற்கான தும்புகள் மூலம் இதனை உருவாக்கினார்கள். நவம்பர் 14, 1940ல் இச்சாதனைத் தும்புத்தடி உருவாக்கப்பட்டது. இதுவரை முறியடிக்கப்படாத சாதனை. தும்புத்தடிக்கும் சாதனையில் இடமுண்டு. வாழ்க, பொதுநலம்.



படிப்பகம்

www.padippakam.com

# "நான் அவர் செல்லம். அவர் என் செல்லம்"

## பூரிப்போடு குஷ்பு பேட்டி

குஷ்புவின் மனதில் காதல்ப் பூ மணம் வீசிக்கொண்டிருக்கிறது. அதனால் பூரிப்போடு இருக்கிறார். மனம் கவர்ந்த மணாளர் சுந்தர் ரஜினி படத்தை இயக்குகிறார். குஷ்புவுக்கும் கைநிறையப் பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. மகிழ்ச்சிக்கு என்ன தடை. அந்த மகிழ்ச்சி குஷ்புவின் பேட்டியிலும் எதிரொலிக்கிறது. மும்பாய் சினிமா இதழுக்கு குஷ்பு அளித்த பேட்டி இது.

**கேள்வி:- இயக்குநர் சுந்தரிடம் உங்களுக்குப் பிடித்தது எது?**

குஷ்பு:- மிக நல்ல மனிதர். பெண்களைக் கறிவேப்பிலைபோல பயன்படுத்திவிட்டு வீசிவிட நினைக்கும் ஆண்கள் மத்தியில் வித்தியாசமானவர் சுந்தர். பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்.

**கேள்வி:-உங்கள் இருவரில் முதன் முதலில் விருப்பத்தைக் கூறியது யார்?**

குஷ்பு:- 'முறைமாமன்' படப்பிடிப்பின்போதுதான் அது நடந்தது. "ஏன் குஷ்பு, உனக்கும் எனக்கும் பிள்ளைகள் பிறந்தால் உன்னைப்போல இருக்குமா, என்னைப் போல இருக்குமா?" என்று கேட்டார். எனக்கு ஷாக்! என் முகத்தையே பார்த்துக்கிட்டிருந்தார். சற்று நேரம் அப்படியே இருந்துவிட்டு நானும் 'ஐ லவ் யூ' சொன்னேன்.

**கேள்வி:- உங்கள்மீது பிரியமாக இருக்கிறாரா?**

குஷ்பு:- (வெட்கப்பட்டுக்கொண்டு) அவர் எனக்குச் செல்லம். நான் அவருக்குச் செல்லம். (கலுக்கென்று சிரிக்கிறார்)

**கேள்வி:- அவர் தந்த மறக்க முடியாத பரிசு?**

குஷ்பு:- பொருளாகத் தந்ததில் வைரமோதிரம்!

**கேள்வி:- அவருக்குரிய ஆடைகளைத்தெரிவுசெய்ய நீங்களும் கூடச் செல்வீர்களா?**

குஷ்பு:- நான்தான் அவருக்குரிய உடைகளை செலக்ட் செய்வேன். அவருக்கு ஜீன்ஸ்தான் பிடிக்கும். அதை உடனே செலக்ட் செய்துவிடலாம். சேர்ட் எடுப்பதுதான் கஷ்டம். முக்கால் கைவரை நீளமாக இருக்கும் சேர்ட்தான் போட்டுக்கொள்வார். எனக்கு முழங்கால்வரை இருக்கும் சேர்ட் அவருக்கு சரியாக இருக்கும். அதனால் அவருடைய சேர்ட்டைப் போட்டுப் பார்த்துதான் நான் வாங்குவேன்.

**கேள்வி:- உங்களுக்குள் சண்டை வருவதுண்டா?**

குஷ்பு:- நான்தான் அடிக்கடி சண்டை போடுவேன். அவர் சிரிச்சக்கிட்டே இருப்பார். அவருக்கு கோபம் வராது. எப்போதாவது ஒருமுறைதான் வரும். நான் பயந்து ஓடிவிடுவேன்.

**கேள்வி:- மறக்கமுடியாத நிகழ்ச்சி?**

குஷ்பு:- தன்னுடைய விருப்பத்தை அவர் என்னிடம் சொன்னதுதான் மறக்க முடியாத நிகழ்ச்சி. அதுதான் திரில்லிங்கான அனுபவம்.

**கேள்வி:- எப்போதெல்லாம் இருவரும் சந்திப்பீர்கள்?**

குஷ்பு:- எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் சந்திப்போம். ஒருமுறை உணவு விடுதி ஒன்றில் இருவரும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தோம். ஒரு தயாரிப்பாளர் எங்கள் இருவரையும் பார்த்துவிட்டு ஒருமாதிரியாகச் சிரித்துக் கொண்டுபோனார். நாம் ஏன் மற்றவர்களுக்குப் பயப்படணும் என்று நினைத்தோம். அதனால் பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு எங்கள் காதலை பகிரங்கமாக அறிவிச்சோம்.

**கேள்வி:- இந்த வாழ்க்கை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?**

குஷ்பு:- பிடித்திருக்கிறது. கமலும் சரிகாவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பி கல்யாணம் பண்ணிக்கிட்டபோதும் யார் யாரோ என்னவெல்லாமோ பேசினாங்க. இப்போது அவர்கள் இருவரும் சந்தோசமாகத்தான் இருக்கிறார்கள்.

நாங்கள் நல்லா இருந்தால் வயிறெரிந்து பேசவாங்க. நல்லா இல்லாமல் போனால் 'அப்பவே எனக்குத் தெரியும்' என்று கெக்களி கொட்டுவாங்க. நான் கஷ்டப்பட்டபோது 'அடடா குஷ்பு கஷ்டப்படுறாளே' என்று' யாரும் உதவி பண்ண வரவில்லை. அதனால் நான் மற்றவர்களைப் பற்றி கவலைப்படுவது கிடையாது.

**கேள்வி:- உங்கள் திருமணத்துக்கு மதம் ஒரு தடையாக இருக்குமா?**

குஷ்பு:- நிச்சயமாக பிரச்சனையாக இருக்காது.

**கேள்வி:- கடவுள் நம்பிக்கை உண்டா?**

குஷ்பு:- உண்டு. கிருஷ்ணர், விநாயகர் பிடிக்கும். இவர்களில் கிருஷ்ணர் எனக்கு ஃப்ரெண்ட் மாதிரி.

**கேள்வி:- உங்கள் கனவு?**

குஷ்பு:- அவருக்கு நான். எனக்கு அவர். இந்த வாழ்க்கை எனக்குப் போதும். பெரிய கனவெல்லாம் நான் காணுவதில்லை.

## சங்கவியின் பாராட்டு

'காதல் தேசம்' படத்தில் நடித்து புகழ்பெற்றவர் அப்பாஸ். இன்றைய இளம் கதாநாயகர்களில் முன்னணியில் இருப்பவர்களில் அவரும் ஒருவர்.

பல படங்களில் மளமளவென்று ஒப்பந்தமாகி நடித்துக் கொண்டிருக்கிறார் அப்பாஸ். 'இனியெல்லாம் சுகமே' படத்தில் தன்னுடன் சங்கவியை ஜோடியாகப் போடுமாறு சிபாரிசு செய்திருக்கிறாராம் அப்பாஸ். சிபாரிசு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விஷயமறிந்த சங்கவி அப்பாஸ் புகழ் பாடத்தொடங்கிவிட்டார். "இளம் கதாநாயகர்களில் கம்பீரமானவர் அப்பாஸ்தான்" என்றும் ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார் சங்கவி. "பாவம் அப்பாஸ், என்ன பாடு படப்போகிறாரோ" என்று பரிதாபப்பட்டாராம் மற்றொரு இளம் ஹீரோ. சங்கவியின் தந்திரம் எல்லாம் அந்த ஹீரோவுக்கு அத்துப்படி. அவர் விஜய்.

## காதோடு சொல்லுகிறோம்

புகழ் கிடைத்ததும் தாய்க்குலங்களை ஊருக்கு அனுப்பி விட்டு தனியாக இருந்த நடிகைகள் மனம் மாறியிருக்கின்றனராம். எல்லாம் சமிதா மரணத்தால் ஏற்பட்ட ஞானம்தான். உதவியாளர்களை நம்பினால் தாமும் ஒரு நாள் தொங்கவேண்டி இருக்குமோ என்று பயம் வந்துவிட்டதாம். ஸ்ரீவித்தியமான நடிகை தனது தந்தையாரை அவசரமாக அழைத்து வீட்டில் தங்கச் செய்துள்ளார்.

நிரோசமான நடிகைக்கும், அவரது அக்கா நடிகைக்கும் இடையே கசமுசாவாம். அதனால் ரோசத்துடன் புறப்பட்டு இலங்கைக்கு வந்துவிட்டார் நிரோசம். 'ராம்' நடிகருடன் மீண்டும் காதலை ஆரம்பித்த போது அக்கா தடை போட்டார். தடையை மீறியும் காதலித்தார் நிரோசம். மீண்டும் ஏமாற்றிவிட்டார் 'ரா'வில் தொடங்கி 'கி'யில் முடியும் மூன்றெழுத்து நடிகர். 'சொன்னேன் கேட்டியாடி' என்று 'ரா' நடிகை வசைபாடினாராம். இலங்கைக்கு பறந்து வந்துவிட்டார் நிரோசமான நடிகை.

'பா'வில் பெயர் தொடங்கும் பிரியமான நடிகை வீட்டில் தப்புக்காரியம் நடந்த செய்தியை பத்திரிகைகள் வெளியிட்டுவிட்டன. பத்திரிகையாளர்கள் மீது பொல்லாத கோபத்தில் இருக்கிறாராம் நடிகை. இதற்கிடையே தொடர்ந்தும் சட்டம் தன்மீது பாயாமல் இருப்பதற்காக எந்தப் புளியங்கொம்பைப் பிடிக்கலாம் என்றும் தீவிர ஆராய்ச்சியில் இருக்கிறாராம்.

'நண்பன்' என்பதற்கு ஒத்த கருத்துள்ள படம் ஒன்றில் நடிக்கிறார் 'கார்' நடிகர். அவருடன் ஜோடியாக நடிக்கும் 'ஈஸ்வரமான' நடிகையுடன் படப்பிடிப்பு முடிந்ததும் ஒன்றாகக் கிளம்பிப் போகிறாராம் நடிகர். நடிக்கக் கற்றுத் தருகிறாரோ?

'ரம்ப' நடிகையின்மீதுதான் தமிழ்பட நடிகைகள் பலர் வசை புராணம் பாடுகிறார்கள். தமக்கு வரவேண்டிய வாய்ப்புக்களை அநியாயமாகத் தட்டிப் பறிக்கிறாராம். 'ரம்ப' நடிகைக்கு ஒரு உதவியாளர் இருக்கிறார். நடிகை சார்பாகத் தூது சென்று வலை வீசுவதில் அவர் கெட்டிக்காரர் என்கிறார்கள்.

## பெயர் திருட்டு

'சுந்தரப் புருஷன்' படவெற்றிக்குப் பின்னர் லிவிங்ஸ்டன் கதாநாயகனாக உயர்ந்து விட்டார்.

அவர் புதிதாக நடிக்கும் படமொன்றுக்கு 'உனக்கும் எனக்கும் தான் கல்யாணம்' என்று பெயர் வைத்துள்ளனர். ஆனால் இப் பெயர் தனது படமொன்றுக்கு சூட்ட இருந்தது என்றும், பெயரைத் திருடி விட்டார்கள் என்றும் ஒருவர் புகார் செய்திருக்கிறார். அவரது பெயர் பட்டூர் செல்வம். 'சுந்தரப் புருஷன்' படத்திற்கு மூலக்கதை எழுதியவர் அவர்தான். 'உனக்கும் எனக்கும் கல்யாணம்' படத்தில் லிவிங்ஸ்டனின் ஜோடி தேவயானி.

## 'ஆனந்தம்' மாற்றம்

மணிரத்னம் இயக்கத்தில் பலத்த எதிர்பார்ப்புக்களை உரு... வாக்கியுள்ள படம் 'ஆனந்தம்'.

அடிக்கடி நடிகர்களை மாற்றிக் கொண்டிருந்தா... மணிரத்னம். இப்போது படம் வெளியாகும் நேரத்தி... படத்தின் பெயரை மாற்றுவது பற்றி யோசி... கிறார். 'இருவர்' என்று பெயர் வை... கலாமா என்று யோசி... துக் கொண்ட... ருக்கிறா...



ஸ்வாதி
படம் : செல்வா

## ரம்பா முன்னணியில்

ரம்பாவின் வசம் எக்கச்சக்கமான பட... கள். ரஜினியுடன் 'அருணாச்சலம்', சத்... ராஜுடன் 'உன்னைவிடமாட்டேன்', விஜ... காந்த் ஜோடியாக 'தர்மசக்கரம்', சரத்கும... ருடன் 'ஜானகிராமன்', அஜித்குமாருட... 'ராசி', அர்ஜுனுடன் 'அடிமைச் சங்கி... மம்முட்டியுடன் 'அகிம்சை', பிரபுதேவாவுட... 'வி.ஐ.பி', என்று பட்டியல் நீள்கிறது.

நக்மா, ரோஜா, மீனா எல்லோரையு... பின்னுக்குத் தள்... விட்டு முன்னே வந்... விட்டார் ரம்பா.



கார்த்திக்-ஈஸ்வரி ராவ்
படம் : ஸ்டாலின்

## பிரியத்தோடு கவனிக்கிறார் மந்ரா

அருண்குமார்-மந்ரா நடித்த 'பிரியம்' படம் தோல்வியடைந்துவிட்டது. அருண்குமார்- மந்ரா இரகசியச் சந்திப்புக்கள் மட்டும் வெற்றிகரமாகத் தொடர்கின்றன.

'பிரியம்' படத்தில் நடித்தபோது அருண்குமாரின் அன்புச் சிறைக்குள் அடைபட்டுக் கிடந்து மூச்சுத் திணறிப்போனார் மந்ரா. படப்பிடிப்புக்கள் முடிவடைந்ததும் நிம்மதிப் பெருமூச்சோடு தப்பிப்போனார் மந்ரா. அவர் போனாலும் அருண்குமார் விடுவதுமாதிரி இல்லையாம்.

மந்ரா கலந்துகொண்ட படப்பிடிப்பொன்றுக்கு நேரடியாகவே சென்று தன் மனதில் இருப்பதைக் கொட்டினாராம் அருண்குமார். உருகிப்போன மந்ரா இப்போதெல்லாம் அருண்குமாரைத் தினமும் சந்தித்து பிரியமாக நடந்து கொள்கிறார்.

## வெளிநாட்டு மாப்பிள்ளை

நடிகை ஷோபனாவுக்கும் மலையாள நடிகர் மோகன்லாலுக்கும் இடையில் காதல் இருந்தது. மோகன்லாலின் மனைவியின் தந்தையான நடிகரும், தயாரிப்பாளருமான பாலாஜி விஷயமறிந்து சூடாகிவிட்டார். ஷோபனாவுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுவிட்டது. ஷோபனா பயந்துபோய் ஒதுங்கிக் கொண்டார்.

இப்போது வெளிநாட்டுப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து ஷோபனாவுக்கு மணமகன் தேடுகிறார்களாம். உள்நாட்டுப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தால் இசகு பிசகாகிவிடுமோ என்று பயம்.



வாணி விஸ்வநாத்-ஸ்வாதி
படம் : மை இந்தியா


படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## ரஜினிக்கு தங்கை

'பூவே உனக்காக' படம் மூலம் தமிழில் அறிமுகமான அஞ்சு அரவிந்த், ரஜினிக்குத் தங்கையாக 'அருணாச்சலம்' படத்தில் நடிக்கிறார். இது தவிர அப்பாஸிற்கு ஜோடியாக 'ஆசைத்தம்பி'யிலும், பார்த்திபனுடன் 'காங்கேயம் காளை' படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## தம்பிக்கு கல்யாணம்

அருண்குமாரும் மும்பை நடிகை பாயல் இருவரும் ஜோடியாக நடிக்கும் படம் 'கண்ணாளனே' இப்படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிப்பவர் குஷ்புவின் தம்பி அப்துல்லா. அவர் ஒரு பெண்ணைக் காதலித்துக் கொண்டிருந்தார். சொந்தக்காலில் நிற்கும்போதுதான் கல்யாணம் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார் அப்துல்லா.

'கண்ணாளனே' படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததும் வாக்குறுதியைக் காப்பாற்றிவிட்டார் அப்துல்லா. காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டுவிட்டார். பெண்ணின் பெயர் செரீன். டாக்டராக இருக்கிறார்.

## "சில்க் எனக்கு நல்ல தோழி"

கே. பாலசந்தர், பாரதிராஜா, மணிரத்னம் மூவரும் மூன்று விதமானவர்கள். தனித்தனிப் பாணியில் படம் எடுப்பவர்கள். இந்த மூவரது இயக்கத்திலும் ஒரே நேரத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றிருப்பவர் பிரகாஷ்ராஜ்.

'ஆசை' படத்தின் மூலம் கொடூரமான வில்லனாக மிரட்டியவர் பிரகாஷ்ராஜ். டிஸ்கோ சாந்தியின் தங்கையும் நடிகையுமான லலிதாகுமாரியை திருமணம் செய்தார் பிரகாஷ்ராஜ். அந்த யோகமோ என்னவோ கதாநாயகனாகவும் உயர்ந்துவிட்டார்.

கே. பாலசந்தர் இயக்கத்தில் 'கல்கி', மணிரத்னம் இயக்கத்தில் 'ஆனந்தம்', பாரதிராஜா இயக்கும் 'சிறகுகள் முறிவதில்லை.' ஆகிய படங்களிலும் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. "மூன்று பிரம்மாக்களின் படைப்பிலும் மூன்றுவிதமான பிரகாஷ்ராஜ் உங்கள் முன் தோன்றுவான்." என்று மகிழ்ச்சியோடு சொல்கிறார் பிரகாஷ்ராஜ். 'ஆனந்தம்' படத்திற்காக மீசையைத் தியாகம் செய்திருக்கிறார்.

'அம்மா நாகம்மா' என்ற பெயரில் தெலுங்கில் வெள்ளிவிழா கண்டபடம் தமிழில் வந்துள்ளது. சில்க் சுமிதாவும் அதில் நடித்திருப்பதால் ரசிகர் கூட்டம் அலைமோதுகிறது. சில்க் சுமிதாவுடன் அதில் ஒரு நடனம் ஆடுகிறார் பிரகாஷ்ராஜ்.

"சில்க் அருமையான டான்சர். பழக இனிமையான பெண். நெருங்கி நடிக்கும் போது அவர் கண்களில் உள்ள போதை எந்த நடிகனையும் தடுமாறச் செய்துவிடும். சில்க் எனக்கும் ஒரு நல்ல தோழி" என்று நினைவு கூர்ந்துள்ளார் பிரகாஷ்ராஜ்.

## 'டூப்' இல்லாமல் சத்யராஜ்

கே.பி.பிலிம்ஸ் கே. பாலு தயாரித்த 'சேனாதிபதி' படத்தில் சேனாதிபதி, சேதுபதி என இரட்டை வேடத்தில் நடித்துள்ளார் சத்யராஜ்.

'சேனாதிபதி' படத்தில் இடம்பெற்ற சண்டைக் காட்சிகளில் 'டூப்' இல்லாமல் ஒரிஜினலாக நடித்தார் சத்யராஜ். கிளைமாக்ஸ் சண்டைக் காட்சியில் நடித்த போது எதிர்பாராத விபத்தில் சிக்கினார். இதில் அவரது முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டது. பிறகு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற அவர், உடல் நிலை நன்கு தேறிய பிறகு 'வள்ளல்' படப்பிடிப்பில் கலந்து கொண்டார். தற்போது இப்படத்தின் படப்பிடிப்புக்கள் பொள்ளாச்சியில் நடைபெற்று வருகிறன.

இதையடுத்து 'உன்னை விட மாட்டேன்.' படத்தில் மீசையில்லாமல் ஒரு வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறார் சத்யராஜ். மேலும் 'பகைவன்', 'பெரிய மனுஷன்' ஆகிய படங்களிலும் மாறுபட்ட வேடங்களில் நடிக்கவுள்ளார்.

## 'ஆனந்தம்' தாமதம்

'மணிரதனம்' இயக்கும் 'ஆனந்தம்' படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன. ஆனாலும் தீபாவளிக்கு படத்தை வெளியிட மாட்டார்களாம்.

கமலின் 'அவ்வை சண்முகி' பரபரப்பாக எதிர்பார்க்கப்படுவதால், அது வெளியாகி பரபரப்பு ஓய்ந்த பின்னரே 'ஆனந்தம்' வெளியாகும். மணிரத்னம் வியாபார நுணுக்கம் தெரிந்தவர்.



பிரகாஷ்ராஜ்- சில்க் சுமிதா
படம் : நாகவள்ளி



ரம்பா
படம் : ரம்பா ஓ ரம்பா

...ம் பனி மலையில்
...லெம் தலையும்
முகம் துடைத்து
நடை பழகும்
மேக ஊர்வலம்
...லே ஆறுதல் தரும்
...ழிகளிலே

...ிஞர் வைரமுத்து.

## பாலசந்தரின் 'தில்லானா–தில்லானா'

'கல்கி' படத்தின் வேலைகளை முடித்த கையோடு புதிய பட இயக்கத்தில் இறங்கிவிட்டார் கே.பாலசந்தர்.

கே.பாலசந்தரின் கவிதாலயா பட நிறுவனம் தயாரித்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கிய படம் 'முத்து'. அப்படத்தில் பிரபலமான பாடல் 'தில்லானா, தில்லானா'.

தனது புதிய படத்திற்கும் 'தில்லானா தில்லானா' என்று பெயரிட்டுள்ளார் கே.பாலசந்தர். அவரது இயக்கத்தில் முழுக்க முழுக்க பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த படமாக உருவாகப்போகிறது.

நடிகர், நடிகைகள் தேர்வில் படுதீவிரமாக இருக்கிறார் பாலசந்தர். ஒரே சமயத்தில் மூன்று மொழிகளில் தயாராகப்போகிறது 'தில்லானா தில்லானா'.

## மினி சினி

* பிரபு நடித்த மனசுக்குள் 'மத்தாப்பு', 'சின்னப்பூவே மெல்லப்பேசு' ஆகிய படங்களை இயக்கிய ராபர்ட்-ராஜசேகர் இருவரும் பலகாலம் பிரிந்திருந்தனர். தற்போது இவர்கள் இருவரும் இணைந்து புதிய படமொன்றை இயக்கவுள்ளனர். ஹீரோவாக பிரபு நடிக்கிறார்.

* 'இந்தியன்' படத்தைத் தொடர்ந்து ஷங்கர் இயக்கும் 'ஜீன்ஸ்' படத்தில் பிரசாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தில் நடிக்கும் நாஸருக்கும் இரட்டை வேடமாம்.

* வினீத்-அப்பாஸ்-தபு நடித்த 'காதல் தேசம்' தெலுங்கில் 'பிரேமதேசம்' என்ற பெயரில் டப் செய்யப்பட்டு வெளியாகி பெரு வெற்றி பெற்றுள்ளது. இதனால் 'காதல் தேசம்' இயக்குநர் கதிருக்கு ஒரு தெலுங்குப்படம் இயக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

* இப்போது மணிவண்ணன் நடிக்காத படங்கள் மிகக்குறைவு எனலாம். அவ்வளவு பிஸியாக நடித்து வரும் மணிவண்ணன் தற்போது படங்களை இயக்குவதில்லை. வரும் வருட ஆரம்பத்தில் இவர் சத்யராஜ் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* தற்போது தமிழில் முன்னணியில் இருக்கும் ரம்பா, தெலுங்கில் சிரஞ்சீவியின் தம்பி கல்யாண் நடிக்கும் படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார் இவர் தமிழில் 'மாண்டர்' படத்திலும் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியுள்ளார்.

* ராஜ்கிரண் நடிக்கும் 'பொன்னு வௌைஞ்ச பூமி' படத்தில் பழைய கதாநாயகி லதா நடிக்கிறார் என்பது தெரிந்ததே இவரைத் தொடர்ந்து பார்த்திபன் நடிக்கும் 'வாய்மையே வெல்லும்' படத்தில் இன்னொரு பழைய நடிகை' வெண்ணிற ஆடை' நிர்மலா நடிக்கிறார்.

* 'அதிரடிப்படை' படத்தை அடுத்து ரோஜா தெலுங்கில் தயாரித்து நடித்த 'லத்தி சார்ஜ்', தமிழில் 'போலீஸ் அதிகாரி' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தை 'இது தாண்டா போலீஸ்' புகழ் கோடி ராமகிருஷ்ணா இயக்கியுள்ளார்.

*மலையாளத்தில் ஜெயராம்-சுகன்யா நடித்த 'தூவல் கொட்டாரம்' நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால் சுகன்யாவுக்கு மலையாளத்தில் ஐந்து படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன.



அருண்குமார்-மந்த்ரா
படம் : பிரியம்

'நல்லவனுக்கு நல்லவன்', 'முரட்டுக் காளை', 'போக்கிரி ராஜா', 'மனிதன்' உட்பட பல படங்களை தயாரித்த பட நிறுவனம் ஏ.வி.எம்.

ரஜினியின் பணிவும், பண்பும் கண்டு வியந்து பாராட்டுகிறார் ஏ.வி.எம் பட நிறுவனத் முதலாளி சரவணன்.

## "...மரியாதை தெரிந்த மனிதர்" ...ஜினியைப் புகழுகிறார் தயாரிப்பாளர்

...நாட்களுக்கு முன்பு என்னைச் சந்திக்க ரஜினி எங்கள் ...ாவுக்கு வந்திருந்தார். என் அறையில் சுமார் ஒரு மணிநேரம் ...ாண்டிருந்தார். காபி வரவழைத்துச் சாப்பிட்டோம். அப்போது ...ங்கள் பாத்ரூமை நான் பயன்படுத்திக் கொள்ளலாமா?" என கேட்டார் "ஓ! தாராளமாய்!" என்றேன். போனவர் ஐந்து ...ளில் திரும்பி வந்தார்.

...ச பிற்பகல்வரை தொடர்ந்தது. மறுபடி காபி சாப்பிட்டோம். ...தும் ரஜினி பாத்ருமை பயன்படுத்த அனுமதி கேட்டுச் சென்று

...க்கு உள்ளூர ஆச்சரியம் இரண்டு தடவையுமே ரஜினி சென்று வந்தது சிகரெட் பிடிக்கத்தான் என்பது எனக்குத் ... அவர் என் முன்னால் சிகரெட் பிடித்திருந்தாலும் நான் ...டுத்திருக்க மாட்டேன். ஆனால் ரஜினி அப்படிச் செய்யவில்லை. ...வரது சொல்லுக்கும், செயலுக்கும் அகில இந்திய அளவில் ...ர்ப்பு நிலவுகிறது. இந்தளவுக்கு வளர்ந்துவிட்ட பின்னரும் ... கொண்ட மரியாதையை ரஜினி கடைப்பிடிப்பது பெரியவிஷயம். ...துமட்டுமல்ல ரஜினி தன் உதவியாளரை அழைக்கும்போதுகூட ..., வாங்க...." என்று மரியாதை தரத் தவறமாட்டார்.

...ஜினி இப்போதெல்லாம் தனிமையில் இருக்கவும் தியானத்தில் இருக்கவும் அதிக நேரம் செலவிடுகிறார். ஆன்மீகப் புத்தகங்களைப் படிக்கிறார். அவரது சொல்லும், செயலும், நாள்தோறும் மெருகேறி வருவதற்கு அவரது ஆன்மீக ஈடுபாடுதான் காரணம் என்று நினைக்கிறேன்.

அடுத்தவர் மனம் நோகும்படி எதுவும் செய்யக்கூடாது என்பதை ஒரு கொள்கையாகவே கொண்டிருக்கிறார். 'முரட்டுக்காளை' படத்தில் ஜெய்சங்கர் வில்லனாக அறிமுகமானார்.

"நூற்றம்பது படங்களில் ஹீரோவாக நடித்த ஜெய்சங்கர் சார் இதில் வில்லன். படத்தின் விளம்பரத்தில் அவருக்குரிய முக்கியத்துவத்தைக் கொஞ்சமும் குறைத்து விடாதீர்கள். எனக்கும், அவருக்கும் சம முக்கியத்துவம் கொடுங்கள்." என்று கண்டிப்பாய் சொன்னார் ரஜினி.

தமிழ்நாட்டில் நடந்த ஆட்சி மாற்றத்துக்கு ரஜினி எந்தளவு காரணம் என்பது நாடே அறிந்த விஷயம். கலைஞர் முதல்வரானதும் அவரைச் சந்தித்து: "என் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு யாராவது வந்தால் நீங்கள் நம்பவேண்டாம். என் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு யாரும் உதவி கேட்டு வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன்." என்று ரஜினி கூறிவிட்டார்.

தேர்தல் நேரத்தில் ரஜினியை தனிப்பட்ட முறையிலும் விமர்சித்தார் ஆச்சி மனோரமா. அவரை மன்னித்தது மூலம் ரஜினி இமயமாக உயர்ந்துவிட்டார்" என்று பாராட்டிப் புகழ்ந்துள்ளார் ஏ.வி.எம். சரவணன்.

'மனதில் நிற்கும் மனிதர்கள்' என்ற பெயரில் தமிழக சஞ்சிகை ஒன்றில் எழுதியுள்ளார் சரவணன். பக்கம் பக்கமாக ரஜினிக்கு புகழாரம் சூட்டியிருக்கிறார்.

## சம்பள உயர்வு

தமிழில் ரஜினி ஜோடியாக 'அருணாச்சலம்' படத்தில் சவுந்தர்யா நடிக்கிறார் என்ற செய்தி வெளியானவுடன், தெலுங்கில் இதற்கு முன் அவர் நடித்த சில படங்களை தமிழில் மொழி பெயர்க்கும் வேலை மும்முரமாக நடந்து வருகிறது ஏற்கனவே சவுந்தர்யா நடித்துத் தமிழில் டப் செய்யப்பட்டு வெளியான 'ஹலோ பிரதர்', 'அம்மன்' ஆகிய இரு படங்களும் வெற்றி பெற்றது நினைவிருக்கலாம். இப்படித் திடீரென்று தனது தெலுங்குப்படங்களுக்குத் தமிழில் வரவேற்பு இருப்பதைக் கேள்விப்பட்ட சவுந்தர்யா, தனது சம்பளத்தை இரு மடங்காக உயர்த்தி விட்டாராம்.

## தயாராகிறது 'காங்கேயம் காளை'

பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்; 'காங்கேயம் காளை'. ஜோடியாக அஞ்சு அரவிந்த் நடிக்கிறார். மற்றொரு ஜோடியாக நடிக்கவைக்க புதுமுகம் தேடுகிறார்கள்.

விசு, நாகேஷ், ஆனந்தராஜ், செந்தில், சௌகார்ஜானகி ஆகியோரும் நடிக்கின்றனர்.

நெப்போலியன் நடித்த 'தமிழச்சி' படத்தை இயக்கிய எஸ்.ஏ.அசோகன் 'காங்கேயம் காளை' படத்தை வசனம், எழுதி இயக்குகிறார். கதை எழுதியிருப்பவர் பார்த்திபன். பாடல்கள்; வாலி. இசை; இளையராஜா. ஊர் ஊராகச் சென்று முரட்டுக் காளைகளை அடக்கும் இளைஞராக தோன்றுகிறார் பார்த்திபன். படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# அழகான கூந்தல் வேண்டுமா?

## பராமரிக்க சில வழிகள்

கூந்தல் நன்றாக வளர்ச்சி பெறுவதற்கு முட்டைக்கோவா, எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றைச் சம அளவு சேர்த்து முடியில் தேய்த்துக் கூந்தலைச் சுத்தம் செய்ய வேண்டும். மேலும் சுத்தமான ஒலிவ் எண்ணெயைச் சிறிது சூடாக்கி எலுமிச்சம்பழச் சாறைக் கலந்து இரவில் தலையில் தோலில் படும் விதத்தில் அழுந்தத் தேய்த்து



வைத்திருக்க வேண்டும். காலையில் தலையை அலசி சுத்தம் செய்துவிடவேண்டும். இவ்வாறு தொடர்ந்து சில மாதங்கள் செய்து வந்தால் கூந்தல் செழுமையாக வளரும்.

பெண்களுக்குத் தலைமுடி கருமையாக இருந்தால்தான் அழகாக இருக்கும். சிலருக்குச் செம்பட்டை நிறமாக, சாம்பல் நிறமாக இருக்கும். சில பெண்களின் முடி வெளுத்துப் போவதும் உண்டு. இந்தக் குறைபாடுகளுக்கு இலக்கானவர்கள் கரிசலாங்கண்ணிக் கீரையின் சாற்றையும், கடுக்காய் ஊறிய நீரையும் சேர்த்துத் தலையில் நன்றாகத் தடவித் தேய்த்து வைத்திருந்து சிறிது நேரம் கழித்துக் குளிக்க வேண்டும். இவ்வாறு சில நாட்கள் செய்து வந்தால் கூந்தல் செழுமையாகவும், கருமையாகவும் மாறும்.

தலையில் பேன் இருப்பவர்கள் எளிய முறையில் பேனை அகற்ற படிகாரத்தைத் தூளாக்கி, நீரில் நன்கு அரைத்துத் தலைமுடியில் தடவினாலே போதும். மருதோன்றிச் செடியின் பூவைத் தலையில் வைத்துக் கொண்டாலும் பேன் தொல்லை அகலும். வில்வங்காயை நன்கு காயவைத்துப் பொடியாக்கிச் சீயக்காய்த் தூளுடன் சேர்த்துத் தலையில் தேய்த்துக் குளித்து வந்தாலும் பேன் அகன்று விடும்.

தலையில் பொடுகு எளில் சாதாரண முயற்சிகள் மூலமே பொடுகை அகற்றிக் கொள்ள முடியும். நாட்டு மருந்துக் கடைகளில் வெள்ளை மிளகு கிடைக்கும். அதை அரைத்துப் பாலில் கலந்து தலையில் தேய்த்து ஊற விட்டுப் பின் தலை குளித்து வந்தால் பொடுகு சிறுகச் சிறுக அகன்று விடும். முட்டையின் வெள்ளைக் கருவுடன் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாற்றைக் கலந்து தலையில் தேய்த்து வைத்திருந்து பிறகு தலையை அலசி வந்தாலும் நாளடைவில் பொடுகு விலகும்.

# இளம் பெண்கள் கவனிக்கவும்!

இளம் பெண்கள் அழகைப் பாதுகாப்பது எப்படி, என்பதற்கு இந்தக் குறிப்புகள் உதவும்.

இளம் பெண்கள் உணவில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உள்ளன. பழங்கள், காய்கறிகள், சாலட், ஆடை நீக்கிய பால் போன்றவைகளை உணவில் சேர்க்க வேண்டும். சொக்கிலேட், கேக், பொரித்த உணவுகளை அதிகமாக உணவில் சேர்க்கக் கூடாது. இளம் பெண்களின் சருமம் பளபளப்பாகவே இருக்கும். அவர்கள் தோலின் பளபளப்புக்காக கிறீம்களைப் பயன்படுத்தத் தேவையில்லை. குளிர்ந்த நீரும், சவர்க்காரமும் போதும். கோடைக்காலத்தில் இருமுறை குளிக்கலாம். தலையில் எண்ணெய் தேய்த்து ஷம்பு பயன்படுத்தலாம். வாரத்தில் இருமுறை அவ்வாறு செய்வது நல்லது.

நீளமான கூந்தலைக் கொண்ட பல இளம்பெண்களுக்கு அதனைச் சுத்தப்படுத்த நேரமும் பொறுமையும் இருப்பதில்லை. ஈரம் காயும் முன்னே முடியைக் கட்டினால் சிக்குப் பிடிக்கும். வாடை அடிக்கும்.

முகப்பருவை ஒரு போதும் உடைத்து விடக்கூடாது. அப்படி உடைத்தால் அது கறுப்புப் புள்ளியாக மாறி அழகைக் கெடுக்கும். கஸ்தூரி மஞ்சளையும், சந்தனத்தையும் அரைத்து முகத்தில் பூசினால் முகப்பரு நீங்கும்.

வறண்ட சருமத்தைக்கொண்ட பெண்கள் இரவு படுக்கப் போகும்போது, கிறீம் தடவிக் கொள்ளலாம். அவர்கள் அடிக்கடி வெவ்வேறு கிறீம்வகைகளை மாற்றாமல் ஒரே விதமான கிறீம்களை உபயோகிக்க வேண்டும். வாரத்தில் ஒரு முறை ஒலிவ் எண்ணெயை



முகத்தில் தேய்த்து, இளம் சுடுநீரில் சவர்க்காரம் உபயோகித்துக் கழுவலாம். இளம் பெண்கள் பேபிசோப் அல்லது கிளிசரின் சோப் பயன்படுத்துவது நல்லது.

இளம் பெண்கள் பற்களைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். காலையிலும், இரவிலும் பல் துலக்க வேண்டும். சீரற்ற பற்களின் வரிசையைச் சரி செய்யவும். நிமிர்ந்து நிற்கும் பற்களையும் சமப்படுத்தவும் இளம் வயதே சிறந்தது. இவ்வாறான சிகிச்சைகளுக்குப் பல் வைத்தியர்களை அணுகுங்கள்.

இளம் பெண்கள் தேவையற்ற அளவுக்கு மேக்-அப் போட்டுக் கொள்ளக்கூடாது. அதைப் போலவே பொருத்தமில்லாத வாசனைப் பொருட்களையும் பயன்படுத்தக் கூடாது. உடல் அமைப்பு அழகாக இருக்க உடற்பயிற்சி அவசியம் செய்ய வேண்டும்.

# வெற்றிலை வைத்தியம்

வெற்றிலை மருந்தாகப் பல விதங்களில் பயன்படுகிறது.

* தலைவலிக்கு இரண்டு அல்லது மூன்று துளி வெற்றிலைச் சாற்றை மூக்கினுள் விட்டால் தலைவலி குணமாகும்.
* காது வலிக்கு மூன்று துளி வெற்றிலைச் சாற்றைக் காதில் விடக் காதுவலி நீங்கி விடும்.
* குழந்தை பெற்றபெண்களுக்குத் தாய்ப் பால் சுரக்கும்போது மார்பகங்களில் பால் கட்டிக் கொண்டு மார்பகங்களில் வீக்கம் ஏற்பட்டு மிகுந்த வலியை ஏற்படுத்தும். அப்படிப்பட்ட சமயங்களில் அப்பெண்கள் வெற்றிலையைத் தணலில் வாட்டி அப்படியே அடக்கடுக்காக மார்பில் வைத்துக் கொண்டால் வீக்கம் குறைந்து வலியும் நீங்கும்.
* நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்க வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாறு கலந்து கொடுக்கலாம்.
* தீப்பட்ட, பட்டாசுகளால் கை கால்களைச் சுட்டுக் கொண்ட காயங்களுக்கு அவற்றின் மீது வெற்றிலையை வைத்துக் கட்டலாம்.



தீப்புண் வலி உடன் நீங்குவதுடன் காயமும் ஆறிவிடும்.

* வெற்றிலைச் சாற்றில் சிறிது கோரோசனைச் சேர்த்துப் புகட்டினால் குழந்தையின் கப இருமல், மூச்சுத்திணறல் குணமாகும்.
* தேள் கொட்டியவர்களுக்கு ஒரு பெரிய வெற்றிலையில் 11 மிளகை வைத்து மடித்துக் கொடுத்து நன்றாக மென்று விழுங்கும்படி செய்தால் தேள் விஷம் நீங்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது சுகந்தினி

### நண்டுப் பொரியல்

**தேவையானவை:**

| | |
|---|---|
| பெரிய நண்டுகள் | 6 |
| இஞ்சி | சிறு துண்டு |
| பூண்டு | 10 பற்கள் |
| செத்தல் மிளகாய் | 6 |
| சின்ன வெங்காயம் | 10 |
| எண்ணெய் | தேவையான அளவு |
| உப்பு | தேவையான அளவு. |

**செய்முறை:**

நண்டின் கால்களைப் பிரித்து, ஓட்டைப் பிளந்து கொழுப்பு நீக்கிச் சுத்தம் செய்து கொள்ளவும். சின்ன வெங்காயத்தை நீளவாக்கில் மெல்லியதாக வெட்டிக் கொள்ளவும். இஞ்சி, பூண்டு, மிளகாயைச் சேர்த்து அரைத்து நண்டுடன் பிசறி வைக்கவும்.

வாணலியில் எண்ணெய் விட்டுக் கொதித்ததும் வெங்காயத்தை அதில் போட்டு வதக்கவும். வெங்காயம் நிறம் மாறியதும், பிசறி வைத்த நண்டைப் போட்டு வதக்கவும். உப்பு நீர் சேர்த்து வேக விடவும். நீர் வற்றி நண்டு வெந்ததும் இறக்கவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## உங்கள் ஆரோக்கியத்துக்கு எட்டு வழிகள்!

மருத்துவ உதவிக்குப் பிறகும் அடிக்கடி நோய்கள் உங்களுக்கு ஏற்படுமானால் கீழே சொல்லப்பட்டுள்ள எட்டு வழிகளைப் பின்பற்றி நீங்கள் மீண்டும் ஆரோக்கியம் பெறலாம்.



1. உங்களுக்கு நீங்களே உண்மையாக இருங்கள். உங்களுக்கு நீங்கள் உதவாமல் மற்றவர்களின் உதவியை எதிர்பார்ப்பது அர்த்தமில்லை.
2. டாக்டரிடம் உண்மையாக நடந்து கொள்ளுங்கள். உரிய நேரத்தில் டாக்டரை அணுகுங்கள். ஆரோக்கியத்திற்கான வழியை அவர் காட்டுவார். ஆனால் அதற்கான முயற்சிகளை நீங்கள்தான் மேற்கொள்ள வேண்டும்.
3. மனந்திறந்து பேசுங்கள். நோயின் காரணம் தெரிந்தால்தான் டாக்டர் உங்களுக்கு உதவமுடியும். ஆகவே உங்கள் உடல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் எதையும் மறைக்காமல் டாக்டரிடம் சொல்லுங்கள்.
4. டாக்டரிடம் நம்பிக்கை வையுங்கள். வியாதியை எதிர்த்துப் போராட இது மிக அவசியம்.
5. டாக்டரை மதியுங்கள். உங்கள் உடலை ஆரோக்கியமாக்க டாக்டர் செய்கின்ற தியாகத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். மிகப் பொறுமையுடன் அவர் உங்களுக்காகப் பணியாற்றுகிறார் என்பதை மறந்து விடாதீர்கள்.
6. அன்புடன் இருங்கள். டாக்டரிடம் நீங்கள் காட்டுகின்ற அன்பு உங்களிடம் அவர் அதிக அக்கறை காட்டுவதற்கும் உதவும்.
7. சாதுர்யமாக நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு என்ன வைத்தியம் செய்ய வேண்டுமென்று டாக்டருக்கு நீங்கள் ஆலோசனை சொல்லாதீர்கள். என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குத் தெரியும்.
8. முழு ஒத்துழைப்புக் கொடுங்கள். டாக்டர் சொல்கின்றபடி நீங்கள் நடந்து கொள்வது தான் மிக முக்கியம். அவருடைய ஆலோசனைகள் எதையும் நீங்கள் அலட்சியப் படுத்தக் கூடாது.

மருத்துவமனையில் நேரம் போவது கஷ்டம் என்பது உண்மை. நிமிடங்கள் கூட மணிகளாகத் தோன்றலாம். ஆனால் நோயை மறந்து கவனத்தை வேறு திசைகளில் திருப்புகின்ற போது, நேரம் தேக்கமடைவதைத் தவிர்த்து விடலாம்.

# கிளிண்டன் பாதி– ஹிலாரி பாதி

## யானையை உதைத்த கழுதை

அமெரிக்க மக்கள் மீண்டும் ஒருமுறை பில் கிளிண்டனை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

தனது 46வது வயதில் 1993ல் அமெரிக்காவின் 42வது ஜனாதிபதியாக முதன் முதலில் பதவியேற்றார் பில் கிளிண்டன்.

பல பெண்களோடு தொடர்பு வைத்திருந்தவர், ஊழல்கள் செய்தவர் என்று ஏகப்பட்ட புகார்கள் கிளிண்டன்மீது சுமத்தப்பட்டன.

குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் கிளிண்டன் ஜனாதிபதியாகப் பதவியேற்க முன்பாக நடந்து கொண்ட முறை பற்றியதாகவே இருந்தன.

கிளிண்டன் தங்களை என்ன செய்தார்; எவ்வாறான உறவை விரும்பினார் என்றெல்லாம் பல பெண்கள் தொலைக்காட்சி பேட்டிகளில் பச்சையாகவே புட்டுப் புட்டுவைத்தனர்.

அந்தப் பேட்டிகளையெல்லாம் அமெரிக்க மக்கள் சுவாரசியமாக ரசிக்கத் தவறவில்லை.

கிளிண்டனின் துணைவியார் ஹிலாரியையும் விட்டுவைக்கவில்லை. அவருக்கும் ஆண் நண்பர் ஒருவருக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருந்ததாகச் செய்திகள் வெளியாகின.

ஊழல் மற்றும் பாலியல் குற்றச்சாட்டுக்களால் கிளிண்டனின் செல்வாக்கு சரிந்துவிட்டது என்றே அவரது எதிரிகள் நினைத்தனர்.

யின் எடுப்பான- கம்பீரமான தோற்றம் வரவேற்பைப் பெற்றுவிட்டது. பில் கிளிண்டன், ஹிலாரி தம்பதியினரை அமெரிக்க மக்கள் பொருத்தமான ஜோடி என்று அமோகமாக வரவேற்கத் தொடங்கி விட்டன.

### கிளிண்டன் சில குறிப்புக்கள்

பிறந்தது-1946 ஆகஸ்ட் 19ம் திகதி. தந்தை பெயர், மூன்றாம் வில்லியம் பிலிப். அவர் கார் விபத்தில் பலியானார். அதன் பின்னர் கிளிண்டனின் அம்மா ரோஜர் கிளிண்டன் என்பவரை மணந்தார். அவரது பெயரையே கிளிண்டன் தனது பெயராகச் சூட்டிக் கொண்டார்.

சாதாரண நடுத்தரக் குடும்பமாகவே கிளிண்டன் குடும்பம் இருந்தது. அதனால்தான் கிளிண்டன் விடாமுயற்சி உள்ளவராக வளர்ந்தார்.

1970ல் சட்டக்கல்லூரியில் சேர்ந்தார். சக மாணவியான ஹிலாரியை காதலித்து 1975இல் மணம்புரிந்தார்.

1974ல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். தோல்வி காத்திருந்தது. மனம் தளராமல் தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டார். 1978ல் ஆர்கன்சாஸ் மாநில கவர்னரானார். அப்போது வயது 38.

1980ம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தோல்வி. மீண்டும் விடாமுயற்சி. 1982ல் மறு படி வெற்றி. மீண்டும் கிடைத்தது கவர்னர் பதவி.

1992 ஜூலையில் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக ஜனநாயகக் கட்சி கிளிண்டன் பெயரை அறிவித்தது.

1993 ஜனவரி 20ம்திகதி அமெரிக்காவின் 42வது ஜனாதிபதியாக பதவியேற்றார்.

பில் கிளிண்டன்-ஹிலாரி தம்பதிகளுக்கு ஒரே ஒரு மகள் இருக்கிறார், பெயர்: செல்சியா. வயது;15.

விரைவில் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும் யோசனையும் இருக்கிறது.

1993 ஜனாதிபதித் தேர்தலில் பில் கிளிண்டன், "என்னைத் தெரிவு செய்வது மூலம் இரண்டு ஜனாதிபதிகளைத் தெரிவு செய்கிறீர்கள். ஒன்று நான். இன்னொருவர் ஹிலாரி" என்று பிரசாரம் செய்தார்.

கிளிண்டன் சொன்னது போலவே அவர் பதவிக்கு வந்தபின்னர் ஆட்சியில் ஹிலாரி தலையீடு இருந்தது.

"தலையணை மந்திரப்படி ஆட்சி நடத்துகிறார் கிளிண்டன்." என்று அமெரிக்கப் பத்திரிகைகள் விமர்சனம் செய்தன.

ஆனாலும் அமெரிக்க மக்களிடம் ஹிலாரி

ஹிலாரி இல்லாமல் கிளிண்டன் இல்லை. கிளிண்டன் இல்லாமல் ஹிலாரி இல்லை என்றாகிவிட்டது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் பில் கிளிண்டனுக்கு நேரடிப் போட்டியாக களத்தில் இறங்கியவர் பாப் டோல். அவரது இரண்டாவது மனைவி பெயர் எலிசபெத்.

ஹிலாரிக்குப் போட்டியாக ஹிலாரி போன்ற கெட்- அப்புடன் எலிசபெத்தும் தனது கணவர் பாப் டோலுடன் கைகோர்த்துக் கொண்டு தேர்தல் பிரசாரத்தில் குதித்தார்.

பாப் டோல்-எலிசபெத் ஜோடியைப் பார்க்கவே அமெரிக்க மக்களுக்கு சகிக்கவில்லை. பாப் டோலுக்கு 73 வயது. கிளிண்டனைவிட 23 வயது அதிகம். போதாக்குறைக்கு பிரசாரம் செய்யப்போன இடத்தில் மயங்கி விழுந்துவிட்டார் பாப் டோல்.

அடப்பாவமே! பதவிக்கு வந்தால் அந்த சுமைதாங்காமல் மனுசன் பொட்டென்று போய்விடுவாரோ என்று பரிதாபப்படத் தொடங்கி விட்டனர் அமெரிக்க மக்கள். அந்தப் பாவம் நமக்கெதற்கு என்று நினைத்தார்களோ என்னவோ பாப் டோலை ஓரம் கட்டி விட்டார்கள்.



அதுமட்டுமல்ல பாப் டோலின் பிரசாரமும் இளமையாக இருக்கவில்லை. கிளிண்டனின் கடந்த காலத்தைப்பற்றி கிளறிக் கொண்டிருந்தாரே தவிர, அமெரிக்காவின் எதிர் காலத்தைப்பற்றி மனுசன் வாயே திறக்கவில்லை. கிளிண்டனோ அடுத்த நூற்றாண்டுக்கு அமெரிக்காவை அழைத்துச் செல்ல தன்னிடமுள்ள திட்டங்களை அடுக்கிக் கொண்டே போனார்.

பாப் டோல் போட்டியிட்டது குடியரசுக் கட்சி சார்பாக. அவரது சின்னம் யானை. கிளிண்டன் போட்டியிட்டது ஜனநாயகக் கட்சி சார்பாக. அவரது சின்னம் கழுதை.

யானையைக் கழுதை ஒரே உதையாக உதைத்துவிட்டது. யானைக்குப் பாகன் சரியில்லை. என்பதும் தோல்விக்கும் பிரதான காரணம்.

தனது எதிரியின் பலம் அறிந்து பொருத்தமான வேட்பாளரை நிறுத்துவதிலும், சுறுசுறுப்பான பிரசார வியூகம் வகுப்பதிலும் தப்புச் செய்துவிட்டது குடியரசுக் கட்சி.

கிளிண்டனின் வெற்றியில் ஹிலாரிக்கும் பெரும் பங்கு இருக்கிறது. அமெரிக்க மக்கள் மீண்டும் இரண்டு ஜனாதிபதிகளை தெரிவு செய்துள்ளனர். ஜனாதிபதியாக கிளிண்டன் இருப்பார். அவர் பின்னால் ஹிலாரி இருப்பார். சிவம் பாதி சக்தி பாதி என்பது இந்துமதத் தத்துவம்.

கிளிண்டன் பாதி, ஹிலாரி பாதி என்பது அமெரிக்க மக்களுக்கும் பிடித்திருக்கிறது.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** AQ

பெயர்:...............................

முகவரி:...............................

...............................

கையொப்பம்:...............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-11-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## பண்டாரவளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**எம்.எஸ். வாணி நளாயினி**
**10/6, ஜலாச ரோட், பண்டாரவளை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு நட்சத்திரம்

தாவணி நூல் எடு!
கயிறு திரி!
அவள் இதயத்தோடு
சேர்த்துக் கட்டு...!
**
விரல் ஒடி!
இரத்தம் எடு!
அவளைக் காதலிப்பதாக
கடிதம் எழுது!
**
உருகுவாள்;
பின்–
உனக்குள் ஊத்துண்டு போவாள்...!
**
காதல் சிறகு கிடைத்துவிடும்–
உனக்கு;
பறந்து சென்று
வான் முகட்டில் அவள் பெயரெழுதி
வடிவு பார்.
**
காற்றைக் கிழி!
கைக்குட்டை செய்!
அதில் முத்தம் வைத்து
அவளிடம் கொடு...!
**
கடற்கரைக்கு அழை!
கட்டிக் கொண்டு பேசு!
தாவணி காற்றில் ஆடும்.
**
கடற்கரைக் காற்று
அவள் காதுக்குள் புகுந்து கக்கிசப்படுத்தும்;
நீ காதோடு வாயைப் பூட்டு...!
**
இரவு(கள்) முழுக்க
உன் மூளை–
கனவு வங்கியாகும்.
**
உன்னிடம் தொழில் இருக்காது;
அவளிடம் வயது நிற்காது–
ஆனால்....இருவரும் அழுவதற்கு
கண்ணீர் நிறைய இருக்கும்...!
**
அழைப்பிதழ் வந்தால்
கலங்காதே!
கல்யாணத்துக்குச் செல்!
சேர்ந்து சிரி எல்லோர் போலும்.....!
**
அண்ணாந்து பார்;
வானில்–
கனக்க நட்சத்திரங்கள் தெரியும்...!
**

சிந்தனைப்பித்தன்.

## தகப்பட்ட.....

எத்தனை காலம்
இப்படியே...?
.........
**
தியாகியாய்....
வீரனாய்....
துரோகியாய்.....
அப்பாவியாய்.....
**
என்று ஓயும்?
**
"எம்மிடம்
சாவதற்கு
நிறைய
இளைஞர்கள்!"
**
எதுவரைக்கும்.....?
**
யாரால்
சாபமிடப்பட்டது?
எப்போது
விலகும்?
**
நெருப்பு கோழிகளாக
தலை புதைத்து
உண்மைகளை
ஏற்க மறுக்கிறோம்!
**
புத்தாண்டு....,
தீபாவளி.....,
தைப்பொங்கல்.....
அமைதி வரும்
என்றிருந்தோம்!
**
எத்தனை ஆண்டுகளாய்?
**
"மெல்ல தமிழ்
இனி
சாகாது!"
தமிழன்தான்.....
**

சுபா வரன்– கண்டி.

## தேன் கிண்ணம்

## தீராத சோகம்

இத்தனை பாரங்களையும்
இதயத்தில்
தாங்கியிருக்க நேர்ந்திருக்காது
நீ என்னைவிட்டுப்
பிரியாமலிருந்திருந்தால்!
–o–
உன் நினைவுகளைச்
சந்தித்து விடக் கூடாதென்று
முட்பாதைகளுக்கூடாக
எனது பாதங்கள்
பாதையமைத்துக் கொண்டாலும்
பழகிப் பிரிந்த
பழைய பாட்டையில்தான்
சுற்றிச் சுற்றி வந்து
சிக்கித் தவிக்கிறேன்!
–o–
எத்தனை கவிதைகள்
எழுதிய போதும்,
எல்லாக் கவிதைகளும்
எனது காயங்களை
உனக்கு உணர்த்துவதைத்தான்
செய்து கொண்டிருந்தாலும்,
உனக்குத் தான்
நெஞ்சில்
ஈரமில்லாதிருக்கிறது!
–o–
உனது கையெழுத்தின்
சாயலுடன் வருகின்ற
கடிதங்களையெல்லாம்
நடுநடுங்கும்
விரல்களால் பிரித்து
ஏராளமாக
ஏமாந்து போகிறேன்!
–o–
உன்னையே நினைத்திருந்து
உனக்காகவே வாழ்ந்திருந்ததால் தான்
விதியின் தாறுமாறான
தீர்மானங்களையெல்லாம்
தாங்கிக் கொண்டு
மௌனமாகக் குமுறுகிறேன்!
–o–
கண்களில் இருந்து
கசிந்து வெளிப்படும்
கண்ணீர்த் துளிகள்
இதயத்தில் அன்றோ
முட்களாக மாறி
அறையப்படுகின்றன!
–o–
மனதில் மோதி மோதி–எனைக்
கொடூரப் படுத்தும்
கண்ணீர்த் துளிகளின்
முனைகளை
மழுங்கடிக்க–உனது
காதலுக்குக்
கற்றுக் கொடுத்திருக்கக் கூடாதா?
–o–
அப்பாலுக்கப்பாலும்
எனைவிட்டும்
உன் உறவு
எங்கோ போய்ச்
சேர்ந்த பின்னரும்,
எல்லா இரவுகளிலும்
உன் நினைவுகளால் எழும்
கண்ணீர் ஆரவாரத்தாலேயே
உறக்கத்தைத்
தொலைத்து விடுகிறேன்.

பஹீமா ஜஹான்–
மெல்சிரிபுர.

## நவீனம்..!

இரும்பு மனிதன்!
இயந்திர வாழ்க்கை!
கணனிப் பாஷை!
செய்மதி உறவு!
இருபதாம் நூற்றாண்டின்
நவீன யுகம்!
•••
இங்கே....
பெற்றோரின் மதலைகளை
மகளே பிரசவிப்பாள்;
கற்றோரின் மகிமைகளை
காசுகளே கொள்ளையிடும்!
•••
சமாதானம் நிலவிட
சண்டைகள் கை(க்)கொடுக்கும்!
அமாவாசை இரவினிலே
அரங்கேற்றம் தூள்பறக்கும்!
•••
களவாடிய கற்பனைக்கு
காசுமாலை சூடப்படும்;
உலாப் போகும் "வானம்
பாடிகள்"
கூண்டுக் கிளியாக்கப்படும்!
•••
யாகசாலைகள் எல்லாம்
சாக்கடைக்குள் திணிக்கப்படும்!
சிவப்பு விளக்குகள் வீராப்போடு
செங்கோலோச்சும்!
•••
துரியோதனர் தானிங்கே
கலியாண வியாபாரிகள்!
ஆண்டாள்கள் இங்கே வெறும்
விற்பனைப் பண்டங்கள்!
•••
சுவாசத்துச் சேமிப்பில்;
நச்சுக் காற்றுலவும்!
உணவாய்க் கிடைப்பதுவும்
இரசாயனக் கூட்டே தான்!
•••
யுத்தத்தில் வேட்கையும்,
ரத்தத்தில் வேலியும்,
மொத்தமாய் பெற்றதால்;
பூமியும் புதிய செங்கோலமாகும்!
•••
"மனிதம்" நவீனம்!
பூமி நவீனம்!
யுகம் நவீனம்!
எல்லாமே நவீனம்...! நவீனம்...!
"மனிதன்"....?

செல்வி சுமைரா அன்வர்,
மல்லவப்பிடிய.

## ஏங்கல்

நேற்றுக் காலையும்
எழுதிய நீள்
கவிதையொன்றில்
செதுக்கிவைத்தேன்
உன்னை.....
♠♠
எப்படித்தான்
உன்னை
என்னிலிருந்து
மறைக்க
முயற்சித்தாலும்–நீ
திரும்பும் போதும்,
சிரிக்கும்போதும்,
நடக்கும்போதும்,
இன்னும்...
ஒவ்வொரு நிலையிலும்,
அது–
ஒரு கணமாயினும்,
என்னை–நீ
இடறாமல் விட்டதில்லை.
♠♠
இன்னும்
எழுதிய–ஒரு
கவிதைக்கு
முடிவுரையாக–உன்
நாமத்தைச் சூட்டி
அழகு
பார்த்தது என் மனம்.
ஏன்....? முடிவுரை
முதல் வரியாகப்போடு
எனச் சிந்தித்து
பெருமூச்சிறைக்கிறது
என்–சுவாசம்.
♠♠
நெடுங்காலமாய்
உன்
புரு விழிகளில்
கலக்கவில்லை நான்.
இப்போது–நீ
எப்படியிருக்கிறாய்
என்
தினப்பிரார்த்தனையில்?

ஆதம்லெப்பை லியாக்கத்ஹான்.

## அந்த நாள் ஞாபகம்

இளமையான தோற்றம், துடிப்பான வேகம், எதிர்கால திட்டம், துணைவி கிலாரியின் பின்பலம், எதிர்வேட்பாளரின் மந்தமான தோற்றம், எடுப்பில்லாத பிரச்சாரம் என்பவை தான் கிளிண்டனுக்கு வெற்றிக்கனி கிடைக்கக் காரணங்கள். இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகியுள்ள கிளிண்டனின் இளமைக்காலத் தோற்றங்கள் இவை.


பாலவடியும் முகத்தோடு


சட்டத்துறையில் பட்டம் பெற்றபோது


சிறுவனாக-வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்.


கவர்னராக இருந்தபோது




அமெரிக்க ஜனாதிபதி கென்னடியிடம் பரிசு வாங்குகிறார். இன்று நீ நாளை நான்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(17.11.96 தொடக்கம் 23.11.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், புதன்.
தனு - வியாழன்.
கும்பம் - சனி. (வக்கரம்)
மீனம் - கேது.
சிம்மம் - செவ்வாய்.
கன்னி - வெள்ளி, இராகு.

சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, மனக் குறைநீங்கும். | பி.ப. | 4 | மணி |
| **திங்கள்**- வெளியிட வாசம், கௌரவம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் இலாபம், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- துன்பம் நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- வீண் கலக்கம், பெரியோர் துணை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- குடும்ப சுகம், முயற்சி மேன்மை. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், செலவு அதிகம். | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, பொருள் நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- மறைமுக எதிர்ப்பு, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- வீண் முயற்சி, பெரியோர் பகை. | பி.ப. | 4 | மணி |
| **புதன்**- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- துயர்நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, மனக் குறைநீங்கும். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் துணை, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், காரியசித்தி. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் பகை, மனக் கிலேசம். | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, பயனற்ற செயல். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **புதன்**- துன்பம் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 4 | மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 9 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| **சனி**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7**

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், குடும்ப சுகம். | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- துயர் அதிகம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, ஆடம்பரச் செலவு. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- பயனற்ற பிரயாசம், மனக் கிலேசம். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- துன்பம் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-5**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 4 | மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, பொருள் இலாபம். | மு.ப. | 10 | மணி |
| **புதன்** - மன மகிழ்ச்சி, துயர் நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- காரிய சித்தி, செலவு மிகுதி. | பி.ப. | 4 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- பெரியோர் பகை, மனக் கிலேசம். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- வீண் பிரயாசம், மனக் கிலேசம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- துன்பம் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- எதிர்பார்த்த நன்மை, காரிய சித்தி. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | மு.ப. | 9 | மணி |
| **சனி**- காரியசித்தி, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், பயனற்ற செயல். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 4 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **புதன்**- புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- உறவினர் உதவி, பொருள் இலாபம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- மனக்குறை நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **சனி**- காரிய சித்தி, பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 4 | மணி |
| **புதன்**- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- வீண் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. | 3 | மணி |
| **சனி**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, துயர் நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- துன்பம் அகலும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, பயனுள்ள செயல். | பி.ப. | 4 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1**

### கன்னி: சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- துன்பம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 3 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் சகவாசம், கௌரவக் கேடு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 4 | மணி |
| **சனி**- வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**


படிப்பகம்





## உண்மை தனையே உணர்வீரே!

சிறியவர் நாம் நாளை பெரியவரே
சிறப்புடன் வாழ பிறந்தவரே
உரியவை நானே கூறிடுவேன்;
உண்மை தனையே உணர்வீரே!

கல்வி கேள்வி தனை நீரே
கண்கள் இரண்டாய் கொள்வீரே!
பல்வித்தைகளில் தான் நீரே
பட்டங்கள் பெற்று வாழ்வீரே!

தெய்வம் ஒன்றென்று நம்ப வேண்டும்!
தெளிவாய் மற்றவர்க்கு கூறவேண்டும்!
உய்வோம் எல்லாரும் தானென்று
உலகளாவிய நோக்கு வேண்டும்!

பொய்யும் புரட்டும் ஒழியவேண்டும்!
பொல்லாத் தீமை அழியவேண்டும்!
மெய்யாம் இன்பம் பெற்றிடவே
மனதில் உறுதி கொள்ள வேண்டும்!

ஏ.பி.வி. கோமஸ்.

நிகரென்று கொட்டு முரசே!- இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே!-
பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## நேர்மையால் கிடைத்த பரிசு



ஓர் ஊரில் விறகு வெட்டி ஒருவன் இருந்தான்.

ஒருநாள் அவன் ஆழமான குளத்தின் கரைமீது இருந்த மரத்தின் கிளையை வெட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் வெட்டிக் கொண்டிருந்த கோடரி குளத்தில் விழுந்து விட்டது.

"என் பிழைப்புக்கு அவசியமான கோடரி போய் விட்டதே! இனி நான் என்ன செய்வேன்?" என்று அழத் தொடங்கினான்.

அந்த வனத்தின் தேவதை விறகு வெட்டியின்முன் தோன்றி,

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது.

"என் கோடரி இந்தக் குளத்தில் விழுந்து விட்டது. இதை வைத்துத்தான் இவ்வளவு காலமும் நான் பிழைப்பு நடத்தினேன். இனி என்ன செய்வது என்று தெரியாமல் அழுகின்றேன்," என்றான்.

வனதேவதை உடனே குளத்து நீரில் குதித்து மூழ்கி, ஒரு தங்கக் கோடரியுடன் வெளியே வந்தது,

"இது தானா உன் கோடரி?" என்று கேட்டது.

"தங்கக் கோடரி வாங்க வசதி இருந்தால் நான் ஏன் விறகு வெட்டிப் பிழைக்கிறேன். இது என் கோடரி அல்ல," என்றான் விறகுவெட்டி.

வனதேவதை மறுபடியும் குளத்தில் குதித்து ஒரு வெள்ளிக் கோடரியை எடுத்து வந்து,

"அநேகமாக இதுதான் உன் கோடரியாக இருக்கும்," என்றது.

"இல்லவே இல்லை. இதுமாதிரி விலையுயர்ந்த கோடரி என்னிடம் எதுவும் கிடையாது. வெறும் இரும்புக் கோடரிதான் என்னுடையது," என்றான் விறகுவெட்டி.

வனதேவதை மறுபடியும் நீரில் மூழ்கி எழுந்தது.

இப்போது வனதேவதையின் கையில் இரும்புக் கோடரி ஒன்று இருந்தது.

"இதுதான் எனது கோடரி," என்று மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்தான் விறகு வெட்டி.

அவனுடைய நேர்மை, நாணயத்தைப் புகழ்ந்த வனதேவதை, தான் எடுத்த தங்கம், வெள்ளிக் கோடரிகளையும் விறகு வெட்டிக்கே அன்பளிப்பாகக் கொடுத்தது.

தங்கம், வெள்ளியால் ஆன கோடரிகளுடன் வீடு திரும்பினான் விறகுவெட்டி.

தனது நேர்மையால் கிடைத்த இந்தக் கோடரிகளை விற்றுப் பெரும் செல்வந்தன் ஆனான்.

## வாரம் ஒரு நாடு

## சான் மரினோ

தலைநகர்-சான் மரினோ
பரப்பு - 61 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 24,000
மொழி - இத்தாலியன்
எழுத்தறிவு - 97%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - இத்தாலியன் லிரா
தனிநபர் வருமானம் - 8250 டொலர்.




**அமைவிடம்:**
சான்மரினோ குடியரசு அபென்னைன்னஸில் டிடானோ மலையின் சரிவில் அமைந்துள்ளது. இது இத்தாலியின் முனையில் ஏட்ரியாடிக் கடல் ஓரத்தில் இருக்கிறது.

ஐரோப்பாவில் மிகப்பழமையான நாடாகக் கருதப்படும் சான் மரினோ கி.பி.301ல் கண்டுபிடிக்கப்பட்டது.

**வரலாறு:**
சுதந்திர நாடு. இத்தாலியுடன் 1862 முதல் நேச ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை 60 உறுப்பினர்கள் கொண்ட 'கிரேட் அன்ட் ஜெனரல் கவுன்சி'லுக்கு இரண்டு ரீஜெண்ட்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் முறையே ஆறுமாதத்திற்கு ஒருவர் வீதம் பணியாற்றுவர். சான் மரினோவில் பிறந்த ஒருவர், உலகின் எந்த மூலையில் வசித்தாலும் அவருக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது.

**பொருளாதாரம்:**
கோதுமை, திராட்சை, பார்லி போன்றவை முக்கிய விளைபொருட்கள். சுற்றுலாத் துறையும் வருமான மூலமாகும்.

## இரைப்பை



*** இரைப்பை எங்குள்ளது?**
வயிற்றின் மேற்புறத்தில் உதர விதானத்திற்கு அடியில் உள்ளது.


*** இதன் வேலை என்ன?**
உணவைச் சேமித்து சிறுகுடலுக்கு அனுப்பும் முன் அதைச் சமிபாட்டிற்குத் தயார் செய்வது.

*** இது எப்படி நடைபெறும்?**
இங்கு அமிலங்களும், நொதியங்களும் சுரக்கப் படுகின்றன. அமிலம் உணவில் உள்ள தீய பக்டீரியாக்களை அழிக்கிறது. நொதியங்கள் உணவுப் பொருட்களை சமிபாட்டுக்கு இலகுவாக்குகின்றன.

*** இரைப்பையில் சுரக்கப்படும் நொதியங்கள் எவை?**
பெப்சின் மற்றும் ரெனின். பெப்சின் புரதச் சத்தின் சமிபாட்டை ஆரம்பித்து வைக்கிறது. ரெனின் பாலைத் திரையச் செய்து சமிபாட்டுக்கு இலகுவாக்கிறது.

*** இரைப்பையில் இருந்து சத்தம் வருமா?**
இல்லை. குடலில் இருந்து தான் சில சமயம் சத்தம் வரும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.11.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 167
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 165

பரிசுக்குரியவர்:
செல்வி சிந்துஜா,
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-4.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். பிரவீன், றோயல் கல்லூரி, கொழும்பு. | வி. தினேஸ், நு/ கொட்டகலை, த.ம.வி., கொட்டகலை. |
| பாத்திமா ரினுஷா ரசீம்கான், பா.ம.ம. வித்தியாலயம், புத்தளம். | வி. கௌரிசங்கர், வவுனியா மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| மகாதீபன் தனபாலசிங்கம், நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம். | எல். ரஜீவ், இ/பரி யோவான் தமிழ் ம.வி., இறக்குவானை. |
| ரி. பிரகாஷ், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.13. | எம்.எப்.எப். பர்ஹானா, மன்னார் வீதி, புத்தளம். |
| பாத்திமா நிம்நாஸ், மின்ஹாத் கனிஷ்ட வித்தியாலயம், திக்வெல்ல. | ஹாஷினி நாகேந்திரன், பாக்கியா மகா வித்தியாலயம், மாத்தளை. |

## லூயி பாஸ்டர்

வெறிநாய்க்கடியினால் ஏற்படும் நோய்க்கு மருந்து கண்டு பிடித்தவர் யாரென்று தெரியுமா? அவர்தான் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவரான லூயி பாஸ்டர்.

ஃபிரான்ஸ் நாட்டில் டோல் என்னும் ஊரில் தோல் பதனிடும் தொழிலாளியின் மகனாக 1822ம் ஆண்டு பிறந்தார் லூயி பாஸ்டர். இவர் கணிதமும், விஞ்ஞானமும் பயின்று ஆசிரியர் பயிற்சியும் பெற்றார்.

1854ம் ஆண்டில் லில் பல்கலைக்கழகத்தில் இரசாயனப் பேராசிரியராகவும், விஞ்ஞானத்துறைத் தலைவராகவும் இருந்தார். பின்னர் ஃபிரான்ஸில் நிறுவப்பட்ட பாஸ்டர் கழகத்தின் தலைவராக இறுதிக்காலம் வரை பணிபுரிந்தார். முதலில் பௌதீகத் துறையிலும், பின்னர் இரசாயனத்துறையிலும் ஆராய்ச்சி செய்து வந்த பாஸ்டர், பக்டீரியங்கள் என்ற நுண்ணுயிர்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு மருத்துவத் துறையில் ஒரு புரட்சியை உண்டு பண்ணினார்.



திராட்சைப்பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் வைன் அடிக்கடி கெட்டுப்போனது. ஒரு வகை நுண்ணுயிர் வைனைப் புளிக்கச் செய்வதும், மற்றொரு வகை நுண்ணுயிர் வைன் பாணத்தை அழுகச் செய்வதுமே இதற்குக் காரணம் என்று பாஸ்டர் கண்டு பிடித்தார். ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் வைனை வைத்தால் அது கெடாமல் இருக்கும் என்றும் கண்டு பிடித்தார். கறந்த பாலைக் கெடாமல் பாதுகாக்கவும் இப்போது பாஸ்டர் முறை பயன்படுத்தப்படுகிறது.


1865ம் ஆண்டில் ஃபிரான்சில் பட்டுப் புழுக்கள் நோயினால் தாக்கப்பட்டு அழிந்தன. அரசினர் வேண்டுகோளுக்கிணங்கி பாஸ்டர் இந்நோய் பற்றி ஆராய்ந்து நோயுற்ற புழுக்களைப் பிரித்து அழித்துவிட்டு, நல்ல புழுக்களின் இனவிருத்திக்கு வழிவகுத்தார்.

கால்நடைகளுக்கு அண்ட்ராக்ஸ் என்னும் ஒரு வகை நோய் வராமல் தடுப்பதற்கு அம்மைப்பால் போன்ற தடுப்பு மருந்தையும் தயாரித்தார். இம்முறையைப் பின்பற்றியே பின்னர் டைபோயிட், மஞ்சட் காமாலை, தொண்டை அடைப்பான் போன்ற தொற்று நோய்களுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. வெறிநாய் கடித்தால் அதைக் குணமாக்க 'ஸீரம்' என்ற மருந்தையும் கண்டுபிடித்தார்.

இவர் 1895ல் காலமானார்.

## பச்சோந்தி

பச்சோந்தி பொதுவாக மரங்களில் தான் வாழும். கால்களில் உள்ள நகங்களினால் இது மரக்கிளைகளைப் பற்றி ஏறுகிறது. பச்சோந்திக்கு நீளமான வால் உண்டு. வாலினால் இது மரங்களைச் சுற்றிப் பற்றிக் கொள்கிறது. பச்சோந்தியின் கண்கள் விந்தையானவை. கண்களை இது தனித்தனியாக வெவ்வேறு திசைகளில் திருப்பிப் பார்க்க முடியும். வலக்கண்ணால் ஓர் இலையைப் பார்த்துக் கொண்டிருக்க, இடக்கண் மற்றோர் இடத்தில் ஒரு பூச்சியைக் கவனித்துக் கொண்டிருக்கும்.



பச்சோந்தியின் நாக்கு மிக நீளமானது. நுனிப்பகுதி தடித்தும், அடிப்பகுதி குறுகியும் இருக்கும். நாக்கின் நுனிப்பகுதி பிசுபிசுப்பாகவும் இருக்கும். தனக்கு இரையாகும் ஈ,பூச்சிகளைக் கண்டவுடன் நாக்கைச் சட்டென நீட்டி, இரையை ஒற்றி எடுத்து, உள்ளிழுத்துக் கொள்ளும்.

இதன் நிறம் அவ்வப்போது மாறிக் கொள்ளும். ஒளி, வெப்பம் ஆகியன மாறுவதற்கேற்ப இதன் உடலின் நிறம் மாறுபடும். பகலில் சூரிய ஒளியும் வெப்பமும் இல்லாத போது இதன் உடல் பழுப்பு நிறமாக இருக்கும். வெப்பம் உள்ளபோது பச்சையாக இருக்கும். சூரிய ஒளியில் இதன் உடல் முழுவதும் கருமையாக மாறிவிடும். இது அச்சமோ, கோபமோ அடையும் போது நிறம் மாறும்.

இது இவ்வாறு நிறம் மாறுவதற்கு என்ன காரணம் தெரியுமா? இதன் தோல் கறுப்பு, மஞ்சள், சிவப்பு முதலிய நிறங்களைக் கொண்ட அணுக்களால் ஆனது. இந்தப் பல நிற அணுக்கள் வெளிச்சம், வெப்பம் ஆகியவை மாறுபடுவதற்கேற்ப சுருங்கவோ, விரிவடையவோ செய்கின்றன. அப்போது இதன் தோலின் நிறமும் மாறுபடுகிறது.

பச்சோந்தி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இது முட்டைகளைத் தரையில் புதைத்து விடும். முட்டைகள் பொரிக்க நான்கு மாதங்களுக்கு மேல் ஆகும். வெப்பம் அதிகமில்லாத இடங்களில் 10 மாதங்கள் கூட ஆகலாம்.

## ஏன்? எப்படி?

*** சவர்க்காரத் தண்ணீரை குழாயால் ஊதும் போது நுரை வருகிறது. ஆனால் சாதாரண தண்ணீரில் வருவதில்லையே ஏன்?**

சவர்க்காரத் தண்ணீரில் சர்பேக்டன்ட் என்ற சுத்தம் செய்யும் சாதனம் உள்ளது. ஆனால் சாதாரண தண்ணீரில் இந்த சாதனம் இல்லை. அதனால் நுரை வருவதில்லை.



*** ஷம்புவைத் தண்ணீருடன் கையில் தேய்த்தால் நுரைவருவதில்லை. ஆனால் அதையே தலையில் தேய்க்கும் போது நுரை வருகிறதே எப்படி?**

தலை மயிர்களின் இடையே காற்று உள்ளது. எனவே இதில் தண்ணீரும் ஷம்புவும் இணையும்போது நுரை உண்டாகிறது.


படிப்பகம்

www.padippakam.com

## அமோகமான புதுத் தொடர் 1

**தமிழ் நாவல் உலகில் நவீனமுறையில் கதை சொல்லும் பாணியை ஆரம்பித்துவைத்தவர்களில் முதன்மையானவர் சுஜாதா. விக்ரம்-இந்தியன் உட்பட பல படங்களில் சுஜாதாவின் வசனங்கள் கலக்கல் நடத்தின. சுஜாதாவின் நாவல்களில் சுறுசுறுப்பான நாவல் இது.**

# அனிதா இளம் மனைவி

**நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன்**

**-சுஜாதா-**



அந்தப் பெண்ணுக்கு வயது பதினெட்டு இருக்கலாம். அந்த வயதுக்கு ஏற்பட்ட தனி வளர்ச்சி. அவள் கண்களில் பயம் இருந்தது. சற்று ஆர்வமும் இருந்தது. பயமும் ஆர்வமும் எதனால்? அந்த இளைஞன் அவளை அழைத்துச் செல்கிறான். தனியான பாதை. தூரத்தில் மிலிட்டரி ரேடியோ நிலையத்தின் உயரமான ஏரியல் கம்பங்கள். நீல வானம். பாறைப் பிரதேசம். சரிவுகள். காட்டு மலர்கள். மஞ்சள் பூரிப்பு. அவன் அவளை அழைத்துச் செல்வதன் காரணம் அவளுக்குத் தெரியும். இருவரும் காரணம்தெரியாதவர்கள் போல இயல்பாக அந்தத் தனி இடத்தை நாடுகிறார்கள். இருவரும் இளம் வயதினர். சிறிது நெருக்கமாகப் பழகினவர்கள். பழக்கத்தின் நெருக்கமும் அவர்கள் அந்தரங்கமாக ஒருவரை ஒருவர் இதுவரை அறிந்து கொண்டதன் பற்றாக்குறையும் இன்னும் கொஞ்சம் இன்னும்கொஞ்சம் என்று எல்லைக் கோடுகளைத் தள்ளித் தள்ளி அமைத்துக் கொண்டு இன்று தனியாக வந்திருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்பாடுகளை விடுவித்துக் கொண்டு இன்று எவ்வளவு தூரம் போகிறது என்று பார்ப்பதற்கு முன்–

அவன் பெயர் ஆனந்த், அவள் பெயர் மல்லிகா. இடம் டில்லி. நேரம் மாலை. நவம்பர் மாலை 3-30.

அவர்கள் நடந்து கொண்டே சென்றார்கள். இடது பக்கம் பாதைச்சரிவு. அதில் புல் தரைகள் திட்டுத்திட்டாக. பூமரங்கள், ஜாகராண்டா, குல்மோஹர், வர்ண வர்ணப் பூப்புதர்கள். ஓர் அழகான பூஞ்சோலையாவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் இடம். அவன் கண்கள் தேடின. கூட்டமில்லை. அதனால் தான் அங்கு வந்திருக்கிறான். அவர்கள் பேசுவதைக் கேட்கலாம்.

"பார், என்ன அழகான பூ!" அவள்.

"ஓ எஸ். இட்ஸ் ப்ரெட்டி" அவன்.

"மல்லிகா."

"ம்."

"என்னோடு வா."

"எதற்கு?" (எல்லாம் அர்த்தமில்லாத கேள்விகள். அர்த்தமில்லாத பதில்கள். அவனோடு தான் வந்து கொண்டிருக்கிறாள்; எதற்கு என்பதும் தெரியும்!)

"எதற்காக? நான் உனக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன்."

"என்ன ரகசியம்?"

"வாயேன்."

"எங்கே?"

"என்னுடன் வாயேன். இங்கே ஆட்கள் தென்படுகிறார்கள்."

"ரகசியம் தனியாகத்தான் சொல்ல வேண்டுமா? இங்கேயே சொல்லிவிடேன்."

"சொல்லுகிற ரகசியமில்லை இது."

"பின்?"

"இந்த நெக்லஸ் புதிதா?"

"அதற்காகத் தொட வேண்டாம்."

"புதிதா என்று பார்த்தேன். ஆ! ஏன் கிள்ளுகிறாய்?"

"சும்மா இருக்க மாட்டேன் என்கிறாயே?"

"நீ என் தேன். என் சர்க்கரை. என் டார்லிங்."

"எப்பொழுதும் உனக்கு... எங்கே போகிறாய்?"

"வரப் போகிறாயா; இல்லையா?"

"எங்கே போகிறாய் என்று சொன்னால் தான்."

"ஒரு பூ. ஒரு மலர் இருக்கிறது. மிக அழகான மலர். அது மிகக் கஷ்டமான அணுகமுடியாத இடத்தில் இருக்கிறது. அதை மெதுவாக அணுகி, மெதுவாக; மிக மெதுவாக, அதை வலிக்காமல் பறிக்கப் போகிறேன்."

அவள் ரத்தத்தில் சூடேறியது. "நான் இங்கேயே இருக்கிறேன்."

"நீ இல்லாமல் பறிக்க முடியாது. உன் உதவி. தேவை வா!"

சிமெண்ட் கான்க்ரீட்டினால் கட்டப்பட்ட ஓர் ஓவல் சைஸ் சுவர். அதன் பின் தேங்கிய தண்ணீர். ஒரு செயற்கை நீரோடை. அதில் தாவித் தாவிக் கடப்பதற்காகக் கான்க்ரீட் வட்டங்கள். அதைத் தாண்டியதும் பொதுவாக பூமி ஏறி இறங்கி, புதர்கள், புல்வெளிகள், மரங்கள், மரங்களுக்குப் பின் இன்னும் மரங்கள், அடர்ந்து சற்று இருட்டான மிகத் தனியான, மிகத் தனியான பச்சை இருட்டு.

"அந்த இடம் நல்ல இடம்." என்றான்.

அதை அவர்கள் அடைந்தார்கள். சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு சில பட்சிகள் டிர்ரித்துக் கொண்டிருந்தன.

"ஒருவரும் பார்க்க மாட்டார்கள்," என்றான்.

தூரத்தில் சலசலப்புக் கேட்டது. வெள்ளைப் பாண்ட் அணிந்து ஒருவன் நடந்து செல்வது இலைகளுக்கிடையே தெரிந்தது.

"இங்கே வேண்டாம்!" என்றாள்.

"இன்னும் நடக்கலாம்!." என்றான். நடந்தார்கள்.

சரேல் என்று பூமி சரிந்து மிக ஆழமான அந்தரங்கமான இடம் ஒன்று தென்பட்டது. அவன் அனாயாசமாகக் குதித்து அவளுக்காகக் காத்திருந்தான். அவள் தயங்கிக் குதித்தாள். அவளைத் தாங்கித் தூக்கி கீழே மெதுவாக......

அவள் உற்சாகத்தில் கிறீச்சிட்டாள். மார்பை அழுத்திக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"ஒருவரும் நம்மைப் பார்க்க முடியாது."

கீழே மெத்தென்று பச்சைப் புல். அவைகளில் ஒன்றைக் கிள்ளிக் கடித்தான். "எப்படி இந்த இடம்?" என்று கேட்டான்.

அவள் மெதுவாக 'சர்வே' செய்தாள்.

எங்கிருந்தோ ஒரு மண் பாதை அவர்கள் இருந்த இடத்துக்கு அருகே வரை வருவது தெரிந்தது.

"ஒரு வழி! பாதை தெரிகிறது," என்றாள்.

"ஒருவரும் வரமாட்டார்கள்," என்றான் அவன்.

"ஷ்யூர்?"

"நீ இதற்கு முன் இங்கு வந்திருக்கிறாயா?"

"ஓ நோ!"

அவன் அவள் அருகில் வந்து உட்கார்ந்தான். "இந்த நெக்லஸ் புதிதா?"

"நிஜமாகச் சொல். உனக்கு நெக்லஸ் மேல் தான் கவனமா? கழற்றித் தருகிறேன்."

"வேண்டாம்."

"நோ....நோ...நோ!"

"எஸ்..... எஸ்......எஸ்"

"வெயிட் ப்ளீஸ் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்."

அவன் அவளை அணைத்தான். அவன் வலது கை அவள் முதுகில் பரவியது.

அவள் உதடுகளில் மெலிதாகத் தீட்டியிருந்த 'லிப்ஸ்டிக்' கின் பரவலைப் பற்றி ஒரு முழு வியாசம் எழுதக் கூடிய அளவுக்கு அருகில் இருந்தான். அவன் சாய்ந்தான்.

அவள் திடீரென்று வீறிட்டாள். அதிவேகமான பயப் பாய்ச்சலில் ஏற்பட்ட அலறல். "அங்கே பார்!" என்று கிறீச்சிட்டாள்.

அவள் காட்டிய இடத்தில் ஓர் உடல்.

பச்சைப் புதர்களின் நடுவே மல்லாந்து நீல வானத்தைக் குத்திட்டு நோக்கிய செத்த பார்வையுடன் ஆவென்ற வாய்த் திறப்புடன் ஒரு கால் மடங்கி, ஒரு கால் நீண்டு, ஒரு கை துவண்டு, விரல்கள் கடைசியில் உயிர் வாழ்ந்த கணத்தில் இருந்த நிலையில் உறைந்துவிட்ட உடல், செத்த உடல்.....

"க்ளிக்"

காமிரா ஒரு தடவை கண் சிமிட்டியது.

உடனே படம் எடுத்தவன் நடந்து வேறு கோணத்திற்குச் சென்றான். 'வ்யூ ஃபைண்டர்'ரில் பிம்பத்தைத்தேடி உன்னதமாகத் தீட்டிக் கொண்டான். "க்ளிக்".

இன்ஸ்பெக்டர் ராஜேஷ் ஒரு சிகரெட் பற்ற வைத்தார். மிக ஆசையுடன் புகையை இழுத்துக் கொண்டார். தயங்கினார். புகையை விடுவித்தார். கீழே பார்த்தார். கீழே கிடந்தவருக்கு வயது ஐம்பது இருக்கலாம். அணிந்திருந்த டெரிலின் சட்டை சற்றுப் பெரிதாக இருந்தது. காலில் புதிய ஷூ. காயங்கள், நெற்றியில், கழுத்தில். கான்ஸ்டபிள்கள் புதர்களில் தேடிக்கொண்டிருந்தனர். ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஆனந்த் இன்ஸ் பெக்டரிடம் தீப்பெட்டி கடன் வாங்கி தன் பையிலிருந்து ஒரு பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டை எதிர்த்துப் பற்றவைத்துக் கொள்வதற்கு முன் கேட்டான். "இன்ஸ்பெக்டர் ஸாப், ஒரு விண்ணப்பம்."

ஏதோ யோசனையில் இருந்தவர், "ம்?" என்றார்.

"நான் போகலாமா?" என்றான்.

"கூடாது," என்றார் சுருக்கமாக.

"அதுதான் எல்லாக் கேள்விகளையும் கேட்டு விட்டீர்களே!"

"இன்னும் பாக்கி இருக்கிறது. இந்த இடத்திற்கு ஒருவரும் அண்ட முடியாத இடத்திற்கு நீங்கள் ஏன் வந்தீர்கள்?"

"சும்மா."

"ம்ஹூம்" என்றார் "மற்றொரு பொய் சொல்லிப் பாருங்கள்."

"பொய்யில்லை."

"எங்கே அந்தப் பெண்?"

"பெண்ணா!"

"பொலிஸ் வருவதற்கு முன் சட்டையில் படிந்திருக்கும் லிப்ஸ்டிக் கறையை அகற்றி இருக்க வேண்டும்."

அவன் தன் சட்டையைப் பார்த்துக் கொண்டான். இன்ஸ்பெக்டரைப் பார்த்தான். அவரும் இளைஞர்தான். சிரித்தான்., "ஆம்" என்றான்.

"எங்கே அந்தப் பெண்?"

"அந்தப் பெண் எதற்கு? பார்த்தது நான்! ரிப்போர்ட் செய்தது நான்! என்விலாசம் கொடுத்திருக்கிறேன். அவளை இதில் சம்பந்தப்படுத்த வேண்டிய தேவையே இல்லை."

"பொலிஸிடம் எதையும் மறைக்கக் கூடாது தெரியுமா? "

"இன்ஸ்பெக்டர் ஸாப்! நான் இந்த இடத்திற்கு வந்ததையும், பார்த்த உடலையும் உடனே உங்களுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறேன். நான் பேசாமல் போயிருக்கலாம். நாட்கணக்கில் இந்த இடத்திற்கு ஒருவரும் வந்திருக்கமாட்டார்கள். நான் என் கடமையைச் செய்தேன், தவறவில்லை."

"உண்மை- நன்றி."

"நான் போகலாமா?"

"இரு. ஸ்டேட்மெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். என்னப்பா?"

"என்னப்பா," என்றது ஒரு கான்ஸ்டபிளைப் பார்த்து.

"ஸார், ஒரு கார் நிற்கிறது."

"எங்கே?"

'திஸ் இஸ் கோயிங் டு பி ஈஸி' என்று நினைத்துக் கொண்டார். அவன் அழைத்துச் சென்ற . பாதை, அந்த மண் பாதை, வளைந்து நெளிந்து திரும்பி சுமார் ஒரு ஃபர்லாங் சென்றது. அந்தப் பாதை தார்ரோட்டில் சேரும் சந்திப்பின் இறக்கத்தில், ஓர் ஓரத்தில், சற்று சாய்ந்து ஒரு சிறிய கார் நின்று கொண்டிருந்தது. தார் ரோடிலிருந்து ஒருவரும் கவனிக்க முடியாத ஒதுக்கத்தில் அது இருந்தது. அதன் கதவு திறந்திருந்தது.

"தொடாதே," என்றார்.

கார் புதிதாகச் சேதமில்லாமல் இருந்தது. புழுதி படிந்திருந்தது. அதன் சாவி தென்படவில்லை. "நீ இங்கேயே இரு," என்று கான்ஸ்டபிளிடம் சொல்லி விட்டு மறுபடி அந்த மண் பாதையில் அந்த உடலை நோக்கிச் சென்றார். அங்கிருந்த கான்ஸ்டபிள் அவர் வரவுக்குக் காத்திருந்தான். போட்டோ பிடிப்பவர் புல் தரையில் உட்கார்ந்திருந்தார். "ஸார், இது கீழே கிடந்தது," என்று பர்ஸ் போலிருந்த பொருளை அவரிடம் கான்ஸ்டபிள் கொடுத்தான். ராஜேஷ் அதைத் திறந்தார். அதில் காரின் இக்னிஷன் சாவியும், பெட்ரோல் மூடியின் சாவியும் மற்றொரு சாவியும் இருந்தன.

இன்ஸ்பெக்டர் முதல் தடவையாக அந்த உடலைத் தொட்டார். தொடுகையில் சற்று அருவருப்பு இருந்தது. பைகளைத் தேடினார். பர்ஸ் இருந்தது. பர்ஸைத் திறந்தார். காலியாக இருந்தது. ஆனால் பர்ஸில் ஓர் அறையில் ஓர் அச்சிட்ட கார்டு இருந்தது. அதில் மிக அழகாக தங்க எழுத்துக்களில் ஆர்.கே. ஷர்மா, 'நிலிமா'47, வஸந்த் விஹார், 616643 என்று அச்சிடப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் இன்ஸ்பெக்டர் அந்தக் காயங்களைப் பார்த்தார். இந்த மரணம் நிச்சயம் இயற்கையானதல்ல.... எப்பொழுது இறந்திருப்பார்? பர்ஸ் பையில் இருக்கிறது. நல்லவேளை பெயர் விலாசம் இருக்கிறது. கார்சாவி இருக்கிறது. 'டபிள் செக் எப்படி இறந்திருப்பார்?' 'ஹி இஸ் ஸோ கோல்ட்!' மார்ச்சுவரியிலிருந்து எடுத்துக் கொண்டு போய்க் கிழித்துப் பரிசோதித்துச் சொல்வார்கள். கணக்கிடுவார்கள். கழுத்தில் பதிந்திருக்கும் காயங்களைக் கணக்கிடுவார்கள். இத்தனை சென்டிமீட்டர் நீளம், இவ்வளவு அகலம். உடலின் காயங்களை வரிசைப் படுத்துவார்கள்.

வயிற்றைக் கிளறி சிறிய மிகச் சிறிய துண்டெடுத்து டெஸ்ட் ட்யூப்களில் போட்டு, ரசாயனக் குலுக்கலில் அலசுவார்கள். பற்களைக் கவனிப்பார்கள். அந்த மண்டையில் தெரிந்த மெல்லிய ரத்தக் கீறல்.

ஷர்மா! ஆர்.கே. ஷர்மா, வஸந்த் விஹார். பெரிய புள்ளி.

"இன்ஸ்பெக்டர், நான் போகலாமா?"

இந்த இளைஞன் வேறு! ஆனால் பையன் பரவாயில்லை. ரிப்போர்ட் செய்வதற்கு மகத்தான தைரியம் வேண்டும் மற்றவர்கள் ஓடி இருப்பார்கள்.

"ஸ்டேஷனுக்கு என்னுடன் வந்துவிட்டு உடனே நீங்கள் போகலாம்..... மிஸ்டர் நாராயணன்."

போட்டோ எடுத்தவன் எழுந்தான்.

"நீங்கள் சற்று நேரம் இருங்கள். 3850வும் 718ம் இருக்கிறார்கள். நான் ஒரு ரெலிஃபோன் கால் செய்துவிட்டு உடலை விலிங்டனுக்கு எடுத்துச் செல்ல பந்தோபஸ்து செய்து விட்டு வருகிறேன்."

"திரும்பி வரும் போது பான் (பீடா) வாங்கிக் கொண்டு வாருங்கள்." என்றான் ஃபோட்டோ.

"லாலல்லா!"

அனிதா அந்த அறையில் பாடிக் கொண்டிருந்தாள். சந்தன மணமும் 'ஷவரி'லிருந்து பெருகும் இதமான வெந்நீரும், மிக மென்மையான பதிந்த கற்களும், மிக மெதுவாக அவள் தன் உடலைத் திருப்பித் திருப்பிச் சுடுநீரின் தொடுகையில் ஓர் அரை மயக்கத்தில் பாடிக்கொண்டிருந்தாள்.

தண்ணீர்த் துளிகள் அவள் உடம்பின் வளைவுகளில் சரிந்தன, நேர்ப்பட்டன, தழைத்தன, சொட்டின....

அறைக்கு வெளியே சற்று நேரமாக அடித்து கொண்டிருந்த ரெலிஃபோன் அப்பொழுதுதான் அவளுக்கு உறைத்தது. ஷவரை நிறுத்தினாள். கேட்டாள். ஆம் ரெலிஃபோன் அடித்துக்கொண்டு தான் இருந்தது.

அவள் அவசரப்படவில்லை. மிக வெண்மையான டவலை எடுத்து உடம்பெல்லாம் ஒத்திக்கொணடாள். எதிரே இருந்த கண்ணாடியில் அவள் மார்பு வரை தெரிந்தது. உடனே துண்டைச் சுற்றி மறைத்துக் கொண்டாள். ரப்பர் செருப்பு அணிந்தாள். கதவைத் திறந்தாள். இன்னும் பல இடங்களில் ஈரமாக நடந்தாள். அடுத்த அறையில் ரெலி ஃபோன் எக்ஸ்டென்ஷன் இருந்தது. ரெலி ஃபோன் பிடிவாதமாக அடித்துக் கொண்டுதான் இருந்தது. அந்த டவல் போல வெண்மையாக இருந்த பெகினீஸ் நாய் ஒன்று பாத்ரூம் வாசலில் காத்திருந்தது. அவளைக் கண்டதும் வால் சாமரம் வீசி, கண்களில் சந்தோஷத்துடன் அவளைத் தொடர்ந்தது.

"நீயும் இன்று குளிக்கப்போகிறாய்," என்று நாயிடம் சொல்லிக் கொண்டே ரெலிஃபோனை எடுத்து "ஹலோ!" என்றாள்.

"இஸ் இட் ஸிக்ஸ் ஒன் டபிள் ஸிக்ஸ் ஃபோர் த்ரீ."

"எஸ்!"

"மிஸ்டர் ஷர்மா, ஆர்.கே. ஷர்மா வீடா அது?"


"ஆம்."

உங்க வீட்டு கார் நம்பர் என்ன?"


"யார் பேசுவது?"

"பொலிஸ்!" **(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம். மௌஜூத்.
வயது: 17
முகவரி: கச்சக்கொடித்தீவு, கிண்ணியா-5
பொழுதுபோக்கு: வழமையானவை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெயர்: கே. மகாதேவன். வயது: 22 முகவரி: 12, ஸ்டேசன் வீதி, ஜா-எல. பொழுது போக்கு: வழமையானவை. | பெயர்: எவ். ரியாஸ். வயது: 23 முகவரி: 66, பிறின்சஸ் கேட், கொழும்பு -12. பொழுதுபோக்கு: பத்திரிகை. | பெயர்: கே. பிரகாஷ். வயது: 24 முகவரி: BREM GATNER STR-28, 8003 ZURICH, SWITZERLAND. பொழுது போக்கு: ரீ.வி., புத்தகம். | பெயர்: ஏ. நளினி. வயது: 24 முகவரி: 34/15, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு. பொழுது போக்கு: வழமையானவை. | பெயர்: எம். இக்ரம். வயது: 19 முகவரி: 274/ஏ, அல்ஹிலால் வீதி, சாய்ந்தமருது-15, கல்முனை. பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி. | பெயர்: ஏ. நம்ஷாத். வயது: 25 முகவரி: P.O.BOX-3717, SAFAT-13038 KUWAIT. பொழுதுபோக்கு: ரீ.வி., பேனா நட்பு. | பெயர்: ஏ. றசூல். வயது: 19 முகவரி: 12/1, இஸ்லாமபாத், மத்திய முகாம். (CENTRAL CAMP) பொழுதுபோக்கு: வழமையானவை. |

| | | | |
|---|---|---|---|
| பெயர்: ரி. திருக்குமார். வயது: 32 முகவரி: 6/3, MELBE CRES, DANDENONG-3175, VICTORIA, AUSTRALIA. பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, ரீ.வி. | பெயர்: வி. ராஜ்குமார். வயது: 22 முகவரி: 387 ஏ, காலி வீதி, வெள்ளவத்தை. பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம். | பெயர்: ஏ. விஜயராஜா. வயது: 23 முகவரி: தாண்டிக்குளம், வவுனியா. பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை. | பெயர்: அன்சார். வயது: 24 முகவரி: BIN DAWOOD MARKET, AL HAMRA BRANCH, FALALSTIN ROAD, JEDDAH, K.S.A. பொழுது போக்கு: வழமையானவை |



படிப்பகம்

www.padippakam.com



**சென்ற வாரம்**

**ஹிட்லரின் பாசிச ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய செக்கோஸ்லாவியா போராளிகளின் முன்னணித் தலைவர் ஜூலிஸ் பூசிக். போலி அடையாள அட்டையுடனும் மாறு வேடத்திலும் கைதாகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அவரது மனைவியைக் கைது செய்து அவர் முன் நிறுத்துகின்றனர்.**

இனி......

# தூக்கு மேடைக் குறிப்பு

## ஜூலிஸ் பூசிக்

**02**

என்னதான் செய்துவிடப்போகிறார்கள்? இவர்களால் என்னைக் கொல்லலாம். எங்களை அழிக்க முடியாது.

நான் யார் என்பது இவர்களுக்குத் தெரிந்துவிட்டது. தெரியட்டும்.

ஆனால் நான் அதை ஒத்துக் கொள்ளப் போவதில்லை. நான் சாகப் போவது உறுதியாகிவிட்டது. என் தாயகமே! உனக்காக மரித்துவிட்ட உன் புதல்வர்களில் நானும் ஒருவனாகப்போகிறேன்!

நான் தயாராகிவிட்டேன்.

அப்போதுதான் அவர்கள் என் மனைவியை அழைத்துவந்து என் முன் நிறுத்தினார்கள்.

அடியே! என் இனியவளே! நீயுமா இவர்களிடம் சிக்கிவிட்டாய்?

என் பிடிவாதத்தை உடைத்துப் போடுவதற்காக அவளைப் பிடித்து வந்திருக்கிறார்கள்.

அவர்களின் முகங்களில் தாங்கள் ஒரு புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்து முடித்துவிட்ட கர்வம் தெரிகிறது.

'அடே பூசிக் இப்போது என்னடா சொல்லப்போகிறாய்? எங்களுக்கா பூச்சி காட்டுகிறாய்? உன் வண்ணத்துப் பூச்சியையே பிடித்து வந்துவிட்டோம் பார்த்தாயா' என்பது போன்ற பார்வை.

'அன்பே தைரியமாக் இரு! எதிரிகளுக்கு தங்கள் காரியத்தில் வெற்றி என்ற மகிழ்ச்சியைக் கொடுத்துவிடாதே' என்று அவளுக்கு சொல்லத்தான் நினைத்தேன். முடியவில்லை.

"இவளை உனக்குத் தெரியுமா?"

என்வாயைச் சுற்றி வழியும் இரத்தத்தை அவளுடைய கண்களில் படாமல் மறைக்க விரும்பி, நாக்கால் வழித்து விழுங்குகிறேன்.... ஆனால் அது அசட்டுத்தனம்.

என் முகத்தில் இரத்தம் காயாத மயிர்க்கால் ஏது? கைவிரல்களின் நுனியில் இருந்தும் இரத்தம் கொட்டிக்கொண்டிருக்கிறது.

நான் பதில் சொல்லவில்லை என்றதும் அவளை அதட்டினார்கள்.

"இவனைத் தெரியுமா?"

"ஊஹூம் தெரியாது!"

என் உடம்பில் இருந்த அத்தனை மயிர்க்கால்களும் சிலிர்த்தன.

இப்படி நடக்கலாம் என்று எனக்கு முன்னரே தெரிந்துதான் அவளிடம் ஒரு சத்தியம் வாங்கியிருந்தேன்.

இரகசிய இயக்க வேலையில் நான் சிக்கிவிடக்கூடும்; என்னிடமிருந்து உயிரைத்தவிர வேறு எந்த இரகசியத்தையும் அவர்களால் பெறமுடியாது.

"என்னைக் கண்டுபிடிக்க உன்னை அவர்கள் பயன்படுத்தலாம். எச் சந்தர்ப்பத்திலும் என்னைத் தெரிந்ததாக நீ காட்டிக் கொள்ளக் கூடாது," என்று சத்தியம் வாங்கியிருந்தேன்.

இப்போது அந்தச் சத்தியத்தை என் கண்மணி காப்பாற்றிவிட்டாள். அசல் தங்கம் அவள்.

என்னை அவர்களுக்கு தெரிந்துவிட்டபோதிலும் துளியும் அச்சமோ தயக்கமோ இல்லாமல் அவள் சத்தியத்தைக் காப்பாற்றி விட்டாள்.

என் உண்மையான பெயரை இவர்களுக்குச் சொன்னது யார்?

அவளை அங்கிருந்து அகற்றிச் சென்றனர். முடிந்தளவுக்குப் பார்வை மூலம் உற்சாகம் ஊட்டும் வண்ணம் விடையளித்தேன்.

ஒருவேளை என் பார்வை உற்சாகம் ஊட்டக்கூடியதாக இல்லையோ எனக்குத் தெரியாது.

### மணி நான்கு

கிழக்கு வெளுக்கப் போகிறதா, இல்லையா? ஜன்னல்கள் இன்னும் இருட்டாகவே இருக்கின்றன.

சாவு வரப்போகிறதா, இல்லையா? சாவு வருவதில் மிகத் தாமதம் ஏற்படுகிறது. அதைச் சந்திக்க நான் போகட்டுமா? எப்படி?

பளார்! பளார்!

யாரோ என்னை அடிக்கிறார்கள். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

தரையில் விழுகிறேன்.

அவர்கள் என்னை உதைக்கிறார்கள். என் மீது ஏறி மிதிக்கிறார்கள்.

ஒரு கறுப்பன் என் தாடியைப் பிடித்து தூக்கி நிறுத்துகிறான்.



கை நிறையப் பிடுங்கிய தாடி மயிரை என்னிடம் காட்டி, பேய்போலச் சிரிக்கிறான். அது உண்மையில் சிரிக்கத்தக்க விஷயம்தான். எனக்கு வலி தெரியவில்லை.

❀ ❀ ❀

### மணி ஐந்து...ஆறு...ஏழு... பத்து.

என் அம்மா இந்த நேரத்தில் ஒருவேளை என்னைப் பற்றி நினைத்து உருகிக் கொண்டிருப்பாள்.

என் தோழர்கள் நான் சிறைப்பட்ட செய்தி அறிந்து உஷாராகி இருப்பர். ஆமாம், உஷாராகி இருப்பர்..... ஒருவேளை நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுவேனோ என்று..... ஊஹூம் நான் மாட்டேன். சொல்லவே மாட்டேன்.

தோழர்களே! என்னை நம்பலாம்! நீங்கள் எங்கே மறைந்திருக்கிறீர்கள்?

எங்கள் ஆயுதங்கள் எங்கே இருக்கின்றன?

நாங்கள் என்னென்ன செய்ய திட்டமிட்டிருக்கிறோம்?

எங்கெங்கே நம் ஆட்கள் மக்களோடு மக்களாக கலந்து இரகசிய வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்?

இதில் ஒன்றைக்கூட என் வாயில் இருந்து இவர்களால் கறக்க முடியாது.

நான் சாகத் தயாரானவன். தோழர்களே! நாங்கள் சாவைக் கண்டு சற்றும் அஞ்சாதவர்!

"சொல்லடா- சொல்!"

அடிகள்-அடிகள்!! உடம்பு முழுவதும் அடிகள்!

உணர்வு தவறுகிறது.

தண்ணீரைக் கொட்டி உணர்வு ஊட்டுகிறார்கள்.

மீண்டும் அடிக்கிறார்கள்.

"பேசுடா! பேசு! பேசு!" என்று கத்துகிறார்கள்.

நான் இன்னும் சாகாமல் இருக்கிறேன். என்னை பெற்ற தாயே! தந்தையே! இந்த சித்திரவதைகளைத் தாங்கிக்கொள்ளும் அளவுக்கு என்னை ஏன் வலுவுள்ளவனாக பெற்றீர்கள்?

### பிற்பகல் மணி ஐந்து

என்னை அடித்து-நொறுக்கி அவர்கள் ஓய்ந்துவிட்டார்கள்.

இப்போது அவர்களுடைய அடிகள் ஒவ்வொன்றும் ஓய்ந்து, ஓய்ந்து விழுகின்றன.

திடீரென்று ஒரு குரல்.

வெகு தொலைவிலிருந்து, நிதானமாக, இரக்கப்படுவதுபோல ஒலிக்கின்றது.

"அவன் பட்டது போதும்!"

சிறிது நேரம் கழிந்தபிறகு, ஒரு மேஜையின் அருகில் அமர்ந்து இருக்கிறேன்.

அந்த மேஜை என்னிடமிருந்து விலகிப் போவதும் வருவதுமாக இருக்கிறது.


யாரோ ஒருவன் எனக்குத் தண்ணீர் தருகிறான்.

யாரோ ஒருவன் ஒரு சிகரெட்டை நீட்டுகிறான். அதை விரலால் பிடிக்கக் கூட எனக்கு முடியவில்லை.

யாரோ ஒருவன் என் காலில் செருப்பை மாட்ட முயலுகிறான். ஆனால் "முடியவில்லை." என்கிறான்.

பின்னர் என்னைச் சிறிது தூரம் இழுத்துப் போகிறார்கள். சிறிது தூரம் சுமந்து போகிறார்கள்.

ஒரு லாரியில் என்னைத் தூக்கிப் போடுகிறார்கள்.



லாரி ஓடுகிறது. எவனோ ஒருவன் என் எதிரே துப்பாக்கியை நீட்டிப் பிடித்திருக்கிறான்.

இந்த நிலமையிலும் நான் தப்பி ஓடிவிடுவேனாம்! சிரிக்க வேண்டும் போலிருக்கிறது.

லார்ரி ஓய்ந்து நிற்கிறது.

மீண்டும் என்னைத் தூக்கிப் போகிறார்கள். பின்னர் தரையில் இறக்கிவிடுகிறார்கள்.

பின்புறம் எவனோ என் தலையில் ஓங்கி அடிக்கிறான்.

"கைகளைத் தலைக்கு மேல் தூக்கு!"

"முழங்காலை மடக்கு!"

"கீழே இரு! ம்.. எழுந்திரு!"

மூன்றாம் தடவை முடியாமல் விழுகிறேன்.

எஸ்.எஸ்.படை முரடன் ஒருவன் என்னை மிதித்து நிற்கிறான்.

"எழுந்திருடா" உதைக்கிறான். அதில் பயனில்லை.

எவனோ என் முகத்தில் தண்ணீரைக் கொட்டுகிறான்.

ஒரு பெண் எதையோ தருகிறாள். அது மருந்து போலும்.

"எங்கே அதிகமாக வலிக்கிறது?" என்று கேட்கிறாள்.

"எல்லா வலியும் இதயத்தில்தான்!" என்கிறேன்.

அவர்கள் சிரிக்கிறார்கள்.

"உனக்குத்தான் இதயமே கிடையாதே!" என்கிறான் எஸ்.எஸ். முரடன்.

"ஓ! எனக்கு இருக்கிறது, நிச்சயமாக இதயம் இருக்கிறது!" என்கிறேன்.

அதைச் சொன்னபோது எனக்கே என்னைப் பற்றி ஒரு பெருமை. என் இதயத்தைப் பற்றிய அவதூறை மறைக்க எனக்கு தெம்பு இருந்ததற்காகத்தான் பெருமை.

வலிகளை மறக்க தூக்க மாத்திரை தந்திருக்கிறார்கள்.

மீண்டும் எல்லாம் மறைகின்றன. சுவர், பெண், மருந்து, எல்.எஸ்.முரடன் ஒன்றுமே தெரியவில்லை.

நினைவு மீண்டபோது என் எதிரே சிறை அறையின் கதவு திறக்கிறது.

ஒரு எஸ்.எஸ்.தடியன் என்னை உள்ளே இழுத்துப் போகிறான்.

கிழிந்துபோன என் சட்டையைப் பிடித்து இழுத்து வைக்கோல் படுக்கையில் தள்ளுகிறான். குனிந்து வீக்கத்தைத் தொட்டுப்பார்த்துவிட்டுச் செல்கிறான்.

சிறை அறைக்கதவு பூட்டப்படுகிறது.

மீண்டும் ஒரு குரல் வெகு தொலைவிலிருந்து, நிதானமாக, இரக்கப்படுவது போல ஒலிக்கிறது.

"விடியும் வரை பிழைத்திருக்க மாட்டான்."

பத்து அடிக்க ஐந்து நிமிஷம். இதமான, ரம்யமான வசந்த மாலை. 1942 ஏப்ரல் 25. நான் கைதுசெய்யப்பட்டு 24 மணி நேரமாகிவிட்டது.

※ ※ ※

### செவ்வாய்க்கிழமை

பகல் ஓடிவிட்டது. தூக்கம் கலைகிறது.

என்னைக் குனிந்து பார்த்து நிற்கிறது ஒரு நாய்! அது ஓநாய் ஜாதியைச் சேர்ந்தது. என்னை அது கேட்கிறது:

"நீ எங்கு தங்கியிருந்தாய்?"

ஓ! அல்ல, அது நாய் அல்ல. ஆமாம், அங்கு வேறு எவனோ நிற்கிறான்.

நீண்ட பூட்சுகள் என் கண்களுக்கு தெரிகின்றன.

ஒரு ஜோடி. இரண்டு ஜோடி. மூன்று ஜோடி பூட்ஸ்கள். ஒரு பட்டாளத்தானின் கால்சட்டை கூடத் தெரிகிறது.

அதற்குமேல் பார்வை ஓடவில்லை. தலையைத் தூக்கினால் கிறு கிறுக்கிறது.

ஹூம், அது கிடக்கட்டும். யாருக்குக் கவலை? நான் தூங்கலாம்.

### புதன்கிழமை

சிறை அறைக்குள் என்னுடன் இரண்டுபேர் இருக்கிறார்கள். ஒரு மண்சட்டியில் இருந்து எதையோ உண்கிறார்கள்.

அவர்களும் கைதிகள்தான். இப்போது தனித்தனியாய் அவர்களை என்னால் விபரிக்க முடியும்.

ஒருவனைவிட மற்றவன் இளையவன். பார்த்தால் சந்நியாசிகள் போல் தோன்றவில்லை. இது மடத்து அறையல்ல. சிறை, தரையில் நீளமான பலகை கிடக்கிறது. அதன் நுனிவரை பார்வையைச் செலுத்துகிறேன்.

கடைக்கோடியில் அதோ.... அங்கே கனமான கொடூரக் கதவு.

பூட்டில் சாவி உராயும் சத்தம்.

அந்த இரண்டுபேரும் துள்ளி எழுந்து விறைப்பாய் நிற்கிறார்கள்.

எஸ்.எஸ்.படையினர் இருவர் உள்ளே பிரவேசிக்கின்றனர்.

எனக்கு உடைகளை அணியுமாறு கட்டளையிடுகின்றனர்.

ஒவ்வொரு பாத உறையிலும், சட்டையிலும் எவ்வளவு வேதனை மறைந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது.

நோயாளிகளுக்குரிய ஸ்ட்ரெச்சரில் என்னைக் கிடத்தி கீழே தூக்கிப் போகிறார்கள்.

நீண்ட வராந்தாவில் அவர்களுடைய கனமான பூட்ஸ்கள் அதிர்ச்சியை உண்டு பண்ணுகின்றன.

இது எங்கே போகிறது? எந்த நரகத்தில் போய் முடிகிறது?

சிறைப்பொலிஸ் காரியாலயம். உபசாரமற்ற வரவேற்பு அறை.

என்னைத் தரையில் கிடத்துகிறார்கள். ஆத்திரமாக ஒரு ஜெர்மன் குரல் பேசுகிறது. ஒரு செக்கோஸ்லாவாக்கியக் குரல் எனக்கு அதை மொழி பெயர்க்கிறது.

நான் விழிகளை விரித்து அந்த அறையைச் சுற்றிலும் பார்க்கிறேன்.

ஓ! நான் காண்பது உண்மையா? என்னால் நம்பமுடியவில்லை.

தளர்ந்துவிடக்கூடாது? தைரியமாக இருக்கவேண்டும்.

எதிரிகள் மிகத் தந்திரமாகத்தான் வலை விரித்திருக்கிறார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

## "ஜீவந்தி வா வெளியே!" அவன் அழைத்தான். அவள் விழிவிரித்து வியந்தாள்.

# வாழலாம் வா

### ஆத்மராஜா றூத்சந்திரிக்கா


மூடுபனியை ஊடுருவிக்கொண்டு அந்தத் தனியார் பேரூந்து புளியடிச் சந்தியில் ஒரு குலுக்கலோடு உயிரிழந்தது. குதித்து இறங்கிய சுதாகர் இருள்விலகாத அதிகாலைப் பொழுதில் மனதில் சுமையோடு நடந்தான்.

'ஜீவந்தியை இனியும் கொத்தடிமையாக வாழவிடக்கூடாது-கூடாவே கூடாது' சபதமிட்ட மனதோடு வேகவேகமாய் நடந்தான். 'பெரிய மனிதர்கள் என்ற முகமூடிக்குள் ஏழையின் ஜீவாதார, வாழ்வியல் உரிமைகளைப் பறிக்கும் அந்தக் கும்பலுக்குள் ஜீவந்தி இன்னமும் சிறைப்பட அனுமதிக்கக்கூடாது. புனிதமே இல்லாத மரக்கட்டைகளோடு ஜீவிதம் நடத்தும் ஜீவந்தியை ஓர் உணர்வுள்ள சிருஷ்டியாய் மாற்ற வேண்டும்' தெளிவான முடிவோடு நடந்தான்.

குறுக்கு வீதியில் கால் பதித்த போதே வெளி முற்றத்தில் விளக்கு மாறோடு நிற்கும் ஜீவந்தியின் சோகபிம்பம் துல்லியமாய்த் தெரிந்தது. சட்டென மறைந்துவிட்டாள். அவன் பார்வையிலிருந்து. ஜீவந்தி வீட்டார் பட்டாடைகள் சரசரக்க எங்கோ பயணப்பட அவதிப்படுவது புரிந்து சுதாகர் நடைவேகம் குறைத்தான்.

"ஜீவந்தி வீட்டைப் பார்த்துக்கோ... சமைக்க வேணாம். வர்றப்போ பார்ஸல் எடுத்துவாறம். பூட்டிட்டு உள்ள போயிரு-போ போ." கடுகடுப்போடு அவள் மாமி உத்தரவிட மௌனமாய் தலையசைத்து ஜீவந்தி கதவைத் தாளிட்டாள்.

உள்ளே போனவளுக்கு 'ஹோ' என்று அழவேண்டும் போலிருந்தது. ராகவன் படத்துக்கு முன்னே சம்மணமிட்டமர்ந்தாள். தாரை



தாரையாக விழிநீர் பொங்கிச் சொரிந்தது. விரக்தியும் வேதனையும் குபுக்கென வெளியேறி விழிநீராய் வடிகாலானது. பத்து வருடங்களாகச் சேமித்து வைத்திருந்த சோகங்கள் பொங்கி வழிந்தன.

'ஓ... பத்து ஆண்டுகள்-ஒரு தசாப்தத்தை இந்த அரக்க சாம்ராஜ்ஜியத்தில் கழித்துவிட்டேனா? இதயமே இல்லாத இந்த மரக்கட்டைகளுக்காக என் பெறுமதியான வாழ்வை அழித்துக்கொண்டிருக்கிறேனா? இந்தப் பேய்கள் வாழும் சுடலையில் இனியும் இருந்து புதைந்து போவதுதான் தீர்ப்பா?'

குலுங்கியழுதாள். இந்தக் காலத் திரை விரிந்து ஆர்ப்பாட்டம் செய்ய நினைவுகளோடு கலந்தாள் ஜீவந்தி.

***

ஜீவந்தி ஒரு கட்டுளமைப்பருவப்பெண்ணாக ராகவனைக் கரம் பிடித்த போது அந்த அரக்க சாம்ராஜ்ஜியம் அதிர்ந்துதான் இருந்தது. ஏழ்மை-அவள் ஏழ்மை அவளின் பலவீனமாக - இழிவாக- பூதாகரமாகத் தெரிய ராகவன் மட்டும் தன் முடிவில் உறுதியாய் நின்று ஜீவந்தியைத் துணையாக்கினான். ஏழ்மையை அவன் இழிவாக எண்ணியதில்லை, வசதியின்மையை அவன் வசையாக நினைத்ததில்லை. திருமணப்பதிவு நடந்து ஒரு மாதத்திலேயே காலம் மிக மோசமானதொரு அவலத்தைத் தோற்றுவித்துவிட்டது.

ஒரு போர்க்கால சூரியோதயத்தில் அலுவலகம் சென்ற ராகவன், துப்பாக்கிகளின் விசாரிப்பில் சிவப்பு ஜடமாகக் கிடந்தான். ஜீவந்தி துடித்துப்போனாள், கூடிவாழுமுன்னே கூட்டுக்கு கல்லெறிந்து கலைக்கப்பட்ட அந்த வானம்பாடியின் சிறகுகள் கத்திரிக்கப்பட்டு அது கரிக்கோட்டுப் பரிதிக்குள் சிறைப்படுத்தப்பட்டது. உலகமே அஸ்தமித்துப்போக அழுது புரண்டாள். தன் கணவனின் மரணத்தில் கூட அவளை அந்நியமாக்கி உடலில் விழுந்து கதறக்கூட உரிமை கொடுக்காமல் துரவமாக்கினார்கள் ராகவன் வீட்டார்.

விதவை முத்திரை குத்தி அவள் ஏழ்மையை சாதகமாக்கி வீட்டுக்குள் முடக்கி ஒரு சம்பளமற்ற கொத்தடிமையாக்கிக் கொண்டார்கள். ஜீவந்தி மௌனமாகிப் போனாள்.

ராகவனின் நண்பன் சுதாகர்தான் ஜீவந்திக்கு ஆறுதல் சொன்னான். அடிக்கடி வந்து தைரியம் கொடுத்தான். ராகவன் வீட்டாரின் சந்தேகப்பார்வையால் சுதாகர் விரட்டப்பட்டான்.

தனியானவளாய், சோகம் பகிரவும் யாருமில்லாதவளாய் முடங்கிக் கிடந்தாள் ஜீவந்தி.

அடுக்கடுக்காகப் பல ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுத்திருந்த ராகவனின் தாய் தன் மக்களை எங்கே கூடிய விலையில் ஏலம் போடலாமென்பதிலேயே குறியாய் இருந்தாள்.

பதினாறு வயதிலே தன் பிள்ளையை மணந்து கூடிவாழுமுன்னே தனிமரமாகிப் போன ஜீவந்தியை நினைக்கவோ- ஒரு மறுவாழ்வு தர முன்வரவோ முடியாமல் இருந்தார்கள். வெண்திரைக்குள்ளே அந்த வெண்ணிலவு சிறைப்பட்டுக்கிடந்தது.

சுதாகர் உறுதியான முடிவோடு அழைப்பு மணியை அழுத்தினான். கதவு வாய் பிளக்க ஜீவந்தி மிரட்சியாய் நின்றாள். "இன்னுமா இந்த மரக்கட்டைகளோடு மல்லுக்கட்டப் போறாய்? உன் ஜீவாதார உரிமையைப் பறித்து கொத்தடிமையாக்கிய இந்த அரக்க சாம்ராஜ்ஜியத்தில் நீ வாழத்தான் வேண்டுமா?

உன்னை முடிவை நம்பி சோக அத்தியாயத்திற்கு முற்றுப்புள்ளி வை. புதியதோர் அணித்துறை எழுதத்தான் வந்திருக்கிறேன். ஜீவந்தி.. வெளியே வா...!" இமைகள் படபடக்க விழிவிரித்து வியந்தாள். "தனிக்க முன்னமே கருக்கப்பட்ட ஆயிரம் காலத்துப் பயிர் மீண்டும் தழைக்க வழியுண்டு, இந்த தேசத்து சாபக்கேடுகளை சாதனையாக்கலாம் வா!" கரம் கோர்த்து இழுத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# சோதனை

மழை ஓயாது கொட்டிக் கொண்டிருந்தது. வளைந்து நெளிந்த மலைப்பாதையினூடாக ஓடிக் கொண்டிருந்தது பஸ்வண்டி. நூறு ரூபாய்த் தாளை நீட்டிய பக்கத்து சீட் பெண்ணை முறைத்தார் கண்டக்டர். "நூறு ரூபாய் தாளை நீட்டினால் எப்படி? என்னிடம் மாற்றுவதற்கில்லை. சில்லறையாக தாங்கள்" கடுகடுப்புடன் சிங்களத்தில் கூறவே பக்கத்து சீட் பெண் விழித்தாள். பரிதாபமாகப் பார்த்தாள். தடுமாறினாள். அதுவரையில் மௌனித்திருந்த சஹானா கேட்டாள். "என்ன, சில்லறை இல்லையா?" தயங்கியபடி அந்தப் பெண் "சி...சில்லறையா கேட்டார்? எ..எனக்கு என்ன சொன்னார் எண்டே புரியல." மெதுவாகக் கூறியபடி சில்லறை நாணயங்களைப் பொறுக்கிக் கொடுத்தாள்.

**என்ன ஆறுதல் சொல்வதென்று சஹானாவுக்குப் புரியவில்லை. பலரது பார்வைகள் கீதாமேல் பட்டு ஓய்ந்தன.**



**ஷர்மிளா இஸ்மாயில்**

சஹானா புன்னகைத்தாள். "இந்தப் பக்கத்துக்குப் புதுசா?" கேட்டாள். "ஓம்..நான் யாழ்ப்பாணம். வந்து மூணு மாசமாகுது...." என்றவாறு விபரங்களைக் கூறினாள். பாடசாலையொன்றில் ஆசிரியையாக நியமனம் பெற்று, ஊரில் பெற்றவர்களை உறவுகளை விட்டு வர வேண்டிய நிர்ப்பந்தம். வந்து விட்டாள்.

"எப்படி மலையகம்? பிடிச்சிருக்கா?" சஹானாவின் கேள்விக்கு அவள்-கீதா புன்னகைத்தாள். "ம். ஆனா இந்தக் குளிர்தான் கொஞ்சம் கஷ்டம். எனக்கு சளி வருத்தம் வேறு இருக்கிறபடியால.... இப்பகூட மருந்தெடுக்கத்தான் போறேன்."

இடையில் பொலிஸார் பஸ்ஸை இடைமறித்தனர். "எல்லோரும் இறங்குங்க. செக் பண்ணணும்!" கம்பீரமான குரலுடனும் உயரமான உருவத்துடனும் சீருடை-வண்டியினுள் முகத்தைக் காட்டியது. கீதா சஹானாவைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் சொல்ல முடியாதவோர் உணர்வு. சஹானாவுக்கு அவளைப் பார்க்க பாவமாயிருந்தது. பாவம் என்ன கேள்வி கேட்டு துளைக்கப்போகிறார்களோ?

அடையாள அட்டைகளை கவனமாகப் பார்வையிட்டு பரிசீத்து ஒவ்வொரு முகங்களையும் ஆராய்ந்து உடமைகளையும் அலசிப் பார்த்து அனுப்பினார்கள். சஹானா சோதனை முடிந்து மீண்டும் பஸ்ஸுக்குள் அமர்ந்து கீதாவுக்காக காத்திருந்தாள். எல்லோரும் வந்துவிட்டார்கள். அவளைக் காணோம். எட்டிப் பார்த்தாள் வெளியே. தீவிரமாய் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். பஸ் புறப்பட்டு விட்டது. பதறினாள் சஹானா.

கடைசியாய் ஓடி வந்து மூச்சிறைக்க புஸ்ஸினுள் ஏறினாள் கீதா. சஹானாவிற்குள் ஆறுதல். "என்ன செய்ய? வடபகுதி என்றாலே சந்தேகம் வந்து விடுகிறது. எனக்கோ சிங்களம் சரியா வராது. ஏதோ சமாளித்து பிழைத்து வந்தேன். இதையெல்லாம் அனுபவிக்க வேண்டும்கிறது இறைவன் விதிச்சது போலகிடக்கு" தனக்குள்ளான வேதனையை, வியர்வையைத் துடைத்தவாறே வெளியிட்டு பெருமூச்சு விட்டாள் கீதா. பட படத்தாள்.

என்ன ஆறுதல் சொல்வதென சஹானாவிற்குப் புரியவில்லை. பலரின் பார்வைகள் கீதாவின்மேல் பட்டு ஓய்ந்தன. "தீர விசாரித்தார்களா இல்லையே? விட்டு விட்டார்களே! நல்லா விசாரிச்சிருக்கணும். யாரையும் நம்புவதற்கில்லை." பெரும்பான்மைக் குரல் ஒன்று பக்கத்து நபரிடம் மனத்தாங்கலை வெளிப்படுத்தியது. சஹானா கீதாவைப் பார்த்தாள். அவளுக்குத்தான் மொழி புரியாதே. 'பாவம் அப்பாவிகள் கூட இப்படி வதை படுவதுதான் வேதனை. நல்ல வேளை இவர்களது கண்டனம் இவளுக்குப் புரியவில்லை.' நினைத்துக் கொண்டாள்.

கீதா தொடர்ந்து பேசினாள். "மறுபடியும் தாக்குதல் ஆரம்பிச்சுட்டாங்கள். வீட்டிலர்ந்து கடிதம் வந்து ஒரு மாதமாகுது. இந்த முறை அம்மா சொல்லிப்போட்டா. எங்காவது பயந்து ஓடிப் போறதில்ல.... இருந்தா வீட்டோட இருக்கிறதுன்னு. நாங்களும் எவ்வளவு காலந்தான் பயந்து ஓடுறது? பாவம். என்ன நடந்ததோ? எனக்கு ஒரே யோசனையாக் கிடக்குது. நிம்மதியில்ல."

கீதாவின் வார்த்தைகளில் கவலை தோய்ந்து கிடந்தது. உண்மைதானே! எவ்வளவு காலம் தான் வீட்டை விட்டுவிட்டு பாதுகாப்பு என வேறிடம் போயிருப்பது? அகதிகளாய் இருப்பது போல அவதியான நிகழ்வு தான் வேறெது? அடிப்படை வசதிகள்கூட இல்லாது, தேவைகளை நிறைவேற்ற வழியில்லாது....ச்சே...இந்த மண்ணில் பிறந்ததே தவறோ?

கடுமையான இருமல். பின்னர் மூக்கை அடைத்து சிரமப்படுத்திய சளி. கீதா சிரமப்பட்டாள். "ஊரிலே இருந்தா அம்மா... எத்தனை கைவைத்தியம் பார்த்திருப்பா..." சொல்லிவிட்டு மேலே தொடர முடியாது ஜன்னலோரமாய் தலையை வைத்து கண் கலங்கினாள் கீதா. வார்த்தை தொலைத்திருந்தாள் சஹானா. என்ன சொல்வது?

# தேசிய உடை

**கனகசபை தேவகடாட்சம்**

"இந்த விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்ச்சியாக வினோத உடைப் போட்டி நடைபெறவிருக்கின்றது. பெற்றோர், பார்வையாளர்கள் அமைதியாக இருந்து கண்டு களிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்"- ஆசிரியர் அமானுல்லாவின் தொனி 'கணீர்' என்று ஒலிபெருக்கியில் முழங்கியது 'அநியாயம் சொல்லக்கூடாது! இந்த வானொலி அறிவிப்பாளர்கள் எல்லாம் பிச்சைவாங்க வேண்டும்.' அவர் பற்றி பரவலாக பேசப்படும் கருத்து, அது!

போட்டி ஆரம்பமாகிவிட்டது.

வினோதமான உடைகளுடன் பிள்ளைகள் மைதானத்தைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள்.

பெற்றோர்கள், தமது பிள்ளைகளை அந்த உடையில் படம் பிடித்துக் கொள்ள முண்டியடித்துக் கொண்டிருக்கின்றார்கள்!



அந்த மைதான வேம்பு மரத்துக்கருகில், ஒரு ஓரமாக, ஒதுங்கி நின்று தன் பிள்ளை கோபியை காண்பதற்கு காத்திருந்தாள் கமலா.

அன்றாட சாப்பாட்டிற்கே தாளம் போடும் அவள் குடும்பம்! எப்படியாவது கோபியை நல்ல நிலைக்கு கொண்டுவரவேண்டும். இதுதான் அவள் குறிக்கோள்.

அதற்கு, அந்த அதிபர் தண்டாயுதபாணி இடமாற்றம் பெறாமல் இருந்திட வேண்டும். மனத்திற்குள் எண்ணிக்கொண்டாள் கமலா.

தொடர்ந்து வந்த அனர்த்தங்களால் அல்லல் பட்டது- அவள் குடும்பம். இறுதியான அனர்த்தத்தில் விறகு வெட்டி சம்பாதித்துத் தந்த தன் கணவனையும் பறி கொடுத்தாள்.

அப்படியே தன் ஒரே மகனுடன் ஊரை விட்டுப் புறப்பட்டவள்தான்!

முற்றுப்பெறாத யுத்தத்தால் மீண்டும் சொந்த இடம் புக முடியவில்லை அவளால்! இப்போது வீடு வீடாக, கூலிப்பணி செய்யும் விதவை அவள்! அப்போதுதான் பாடசாலையில் கோபியை சேர்ப்பதற்கு அதிபரை காண வேண்டியிருந்தது. 'அகதியாக அடிபட்டு வந்த என்பிள்ளைக்கு இப்பெரிய பாடசாலையில் இடம் கிடைக்குமா?' கமலா நினைத்துக் கொண்டாள்.

எதிர்பார்த்ததற்குமாறாக அமைந்தது. அதிபரை வாழ்த்திக்கொண்டாள். இப்போது வகுப்பில் கோபி தான் முதல் பிள்ளை.

—★★★—

வினோத உடையில் வரும் கோபியை கண்டதும் பூரித்துக் கொண்டாள் கமலா! அது கணநேரம் நீடிக்கவில்லை. அவள் முகம் மாறியது! விறகு வெட்டி வேஷத்தில் வினோத உடை! அதிர்ந்து போனாள்! அப்பனை அப்படியே உரித்து வைத்தது போல் கோபியிருந்தான். மீண்டும் அக்கோர நினைவுகள் சூழ அவள் மனம் இடம் கொடுக்க விரும்பவில்லை. விறு......விறு... என்று சென்ற கமலா, போட்டி முடிந்து வெளியேறிக்கொண்டிருந்த கோபியை கையில் பிடித்து இழுத்தவண்ணம் அவ்வெல்லையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள்.

"ஏன் அம்மா அவசரப் படுறியள்? முடிஞ்சதுக்குப் பிறகு போகலாமே?" இது கோபியின் கனிவு கலந்த வேண்டுகோள்.

"வினோத உடையா காட்டிறியள்? இது தாண்டா உன்ர அப்பாட உடை! அதுதான் அகதி உடை! மத்தவங்களுக்கு இது வினோத உடையா இருக்கலாம். நமக்கு இதுதான் தேசிய உடை," என்று பொரிந்து தள்ளிக் கொண்டு சென்றாள்.

மீண்டும் ஒலிபெருக்கியில் ஆசிரியர் அமானுல்லாவின் அறிவிப்பு!

"குளக்கோட்டன் இல்லத்தைச் சேர்ந்த செல்வன் கோபி, வினோத உடைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்."

# வெண் மல்லிகை

**கர்மா ராஹில்**

கவிதா நேரத்தைப் பார்த்தாள்.

3 மணி.

"இன்னும் அரைமணி நேரத்துக்குள் போகணும்!"

சிந்தனை அவளை இயக்கியது:

கல்லூரி மல்லிகை அவள். வெள்ளை யூனிஃபோமில் அழகாக இருந்தாள்.

புறப்பட்டாள். அவளின் பாதங்கள் நகர்ந்து பாடசாலையில் நின்றன.

எல்லோரும் வந்திருந்தார்கள்.

"என்....ன...ரெடியா...? எல்லாம் சரியா...?"

"ஆமாண்டி...!"

"எங்க பாப்பம்...?"

சில்மியா அந்தப் பார்சலைக் காட்டினாள். கவிதா பிரித்துப் பார்த்தாள். அதற்குள் ஒரு அழகான சுவர்க்கடிகாரம் குடியிருந்தது. வகுப்பில் மொத்தம் 12 பேர்கள். அத்தனை பேர்களும் சேர்ந்து அந்த சுவர்க்கடிகாரத்தை வாங்கினார்கள்.

தமிழ்ப்பாடம்.

சங்ககாலந் தொடக்கம் இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் வரை மேய்ந்திருந்தார்கள். பரீட்சைக்கும் வாழ்க்கைக்கும் தேவையானவற்றைக் கொய்து மனதில் சூடிக்கொண்டார்கள்.

சுவை;

சுவாரஸ்யம்:

அறிவு அத்தனையையும் தமிழ்ப்பாடம் அவர்களுக்கு வழங்கியது. இன்னுமொரு விழி முளைப்பது போல அவர்கள் உணர்ந்தார்கள். அகநானூற்றுக் காதல் புறநானூற்று வீரம் என்பன மாணவர்களுக்குப் பூவாக மலர்ந்தன.

"சில பேர் நினைக்கிறாங்க... தமிழ்ப் பாடம் சுமையானதென்று.... ஆனா..... தமிழ்ப்பாடம் சுகமானது, சுவையானது.... அது சுமையா இருக்கிறதும் சுகமா இருக்கிறதும் படிப்பிக்கிற ஆசிரியரப் பொறுத்தது.... மொழி படிப்பிக்கிறவங்க உண்மையிலே ஒரு கலைஞனா இருக்கணும்..... அப்படி இருந்தா தமிழ்ப்பாடம் சுவையா, சுகமா இருக்கும்....."

ஆசிரியரின் முதல் நாள் உரையினை இதயத்தில் செதுக்கிவைத்தாள். அதைக் கவிதா புதுப்பித்துப் பார்த்தாள்.

"தமிழ்ப்பாடம் எப்புடிடி....?"

"ஜாதியா படிப்பிக்கிறாரிடி....எதக் கட்பண்ணினாலும் தமிழ்ப்பாடத்தைக் கட் பண்ணவே மாட்டன்....."

இப்படித்தான் தேனாக இனித்தது. அறிவும் கற்பனையும் மாணவர்களுக்குத் தானாகக் கனிந்தன.

"சேர்...! இண்டைக்கு இங்கிலிஷ் தெரிஞ்சவங்க... உலகத்த பயப்புடாம சுத்தலாம். அதப் போல தமிழ் தெரிஞ்சவங்களும் பயப்புடாம உலகத்தச் சுத்தலாம்...."

"ஏன் அப்படிச் சொல்றீங்க...?"

"உலகம் முழுதும் தமிழ் பரவி வருது... வளர்ந்து வருது...."

"உண்மைதான்...!"

தமிழின் பெருமையினைக் கவிதா இன்னும் மெருகுபடுத்திச் சொன்னாள்.

"சேர்! புகலிட இலக்கியமெண்டல்லாம் சொல்றாங்க....நம்மட சிலபஸ்ஸில இருக்கா....?"

"இதுவர இல்லை....இனித்தான்...."

கவிதாவின் உரையாடல் அவளின் அறிவை விளம்பரப்படுத்தியது:

இப்படித்தான்
அமுதா
சில்மியா
செல்லத்துரை
றிஸ்மியா
றினோசா
கலா
குமார்
.........
.........

........இன ஒற்றுமைக்கு அந்தத் தமிழ் வகுப்பை உதாரணமாக ரீ.வியில் காட்டலாம்.

இளமை: இதயம் எங்கும் பசுமை: பேச்சில் இனிமை: பண்பில் மேன்மை உள்ள மாணவர்கூட்டமே அந்த வகுப்பு.

கவிதா சின்னச்சின்னக் கவிதைகள் எழுதுவாள்.

"சேர்!...நான் கவித எழுதியிருக்கன்...."

பூக்கடைக்கு விளம்பரமா தேவை?

"எங்க....பாப்பம்...?"

அவள் கொடுத்தாள்.

ஆசிரியர் விழிகளை விதைத்தார். இதயத்தை அதில் புதைத்தார்.

'சமாதானமே!
எங்கே
புதைந்து போனாய்...?
கல்லறைக்குள்ளா?
எங்கே
புதைந்து கொண்டிருக்கிறாய்...?
அரசியல்வாதிகளிடமா?
நீ..........
இல்லாத வெற்றிடம்
நரகமாகக் கிடக்கிறது!
எங்கள்
சுவனமே
நீ வா...!'

**சில்மியா அந்தப் பார்சலைக் காட்டினாள். கவிதா அதைப் பிரித்துப் பார்த்தாள். அதற்குள் ஒரு அழகான சுவர்க்கடிகாரம் குந்தியிருந்தது.**



இதயத்தில் பூக்கள் மலர்ந்திருக்க வேண்டும். அதனால் அவரின் முகத்தில் புன்னகை.

"ச்...சா.....அருமையா இருக்கு..... காலத்துக்கு ஏற்ற பிரதிபலிப்பு.... பத்திரிகைக்கு அனுப்புங்க...." அவர் பாராட்டுப் பூக்களைச் சொரிந்தார்.

"கல்வியின்ர நோக்கம் நல்ல பிரஜைகள உருவாக்குறதுதான். அதுக்கு இலக்கியங்கள் பெரும் பங்குவகிக்கின்றன. அன்பும் அறனும் பெருகும். மனம் மென்மையாகும். நல்ல கற்பனை உருவாகும்.... படிச்ச கெட்டவங்களவிட படிக்காத நல்லவங்க மேல்...."

சென்ற வகுப்பில் அவர் சிந்திய முத்துக்கள்.

மாலை நேர ரியூசன் வகுப்பு வைக்க வேண்டுமென்று மாணவர்கள் அவரிடம் விண்ணப்பித்தார்கள்.

"சரி, ஒரு ஆளுக்கு அம்பது ரூபா தரவேணும்...." மாணவர்கள் உடன்பட்டனர்.

"காசு தரமுடியாதவங்க தனிப்பட்ட முறையில சொல்லிட்டு வகுப்புக்கு வரலாம்....."

ஆனால்; எல்லோருமே பணங்கொடுத்தார்கள். அவர் ஒவ்வொரு மாதமும் கொப்பி வைத்துக் குறித்துக்கொண்டார். கவிதாவுக்கு மட்டுமல்ல; மாணவர்கள் எல்லோருக்கும் ஆச்சரியமாகவும் இருந்தது.

"காசுக்கு ஆசப்படாதவங்க.... யாருமில்ல...."

"சேர்! இந்த விசயத்தில ரொம்ப மோசம்...."

மாணவர்களின் விமர்சனம். அவரின் காதில் அரங்கேறாத வார்த்தை.

கவிதாதான் மாணவர்களிடம் ரியூசன் ஃபீஸ் சேர்த்தாள்.

கல்லூரிப் பூக்களுக்கு வாசம் அதிகம். கனவுகளும் கற்பனைகளும் அவர்கள் வாழ்க்கைச் சோலையில் ஏராளம்.

"நீங்க...எல்லா சேர்மாருக்கும் பட்டம் வைப்பீங்களே....எனக்கு என்ன பட்டம் வைச்சிருக்கீங்க...?"

மாணவர்கள் சிரிப்புப் பூக்களை உதிர்த்தார்கள்.

"சேர்! அப்படி ஒண்டும் இல்ல..."

அவர் நம்பவில்லை.

இவர்கள் சொல்லவுமில்லை.

* * * *

இன்றைக்குக் கடைசிவகுப்பு.

காசுக்காக ரியூசன் படிப்பித்தாலும் காலம், நேரத்தைத் தங்களுக்காகச் செலவுசெய்தவர் ஆசிரியர் என்று மாணவர்கள் கருதினார்கள்.

ஆசிரியர் வகுப்பறையில் மலர்ந்தார்.

எங்கும் சுகங்கலந்த சோகம். பரீட்சை பற்றியும் வினாக்கள் பற்றியும் விளக்கினார்.

வகுப்பு நிறைவு பெறுவதற்கு முன்.... "நீங்கள் நல்லாப் படித்துப்பரீட்சை எழுதி வெற்றிபெற என் வாழ்த்துக்கள்,...... நீங்க... என்ன ரியூசன் வகுப்பு வைக்கச்சொன்னீங்க.. நான் உங்களுக்கிட்ட ரியூசன் ஃபீஸ் வாங்கித்தான் வகுப்பு நடத்தினன். ஆனா...."

அவர் நிறுத்தினார்.

மாணவர்களின் பொறுமை தவித்தது.

அவர் மாணவர்களிடம் கடித உறைகளைக் கையளித்தார்.

"இதில் உங்கட ரியூசன் ஃபீஸ் அவ்வளவும் இருக்கு.... நான் இத வாங்காம வகுப்பு நடத்தியிருக்கலாம்... ஆனா... சும்மா படிப்பிச்சா இந்தக் காலத்தில மதிப்பில்ல... அப்படித்தான் இந்த சமூகமும் நினைக்குது..."

மாணவர்களுக்கு அவர் இமயமாகத் தெரிந்தார். மாணவர்கள் புரிந்தார்கள்.

டிக்...டிக்...டிக்

அவருக்காக அவர்கள் சேர்த்து வாங்கிய சுவர்க்கடிகாரம் மாணவர்களைப் பார்த்துக் கேலி செய்வது போலிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# துன்பம் தோற்கும்

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்





ஆர்த்தது முரசம்.
அழைத்தது யுத்தம்!

சுந்தரன் நகைத்தான். போருடை தரித்தான்
பத்தரை மாற்று பசும் பொன் மேனியாள்
சுந்தரன் புறப்பட குங்குமம் இட்டாள்.

தொட்டிலில் பிள்ளை தூக்கத்திலிருந்தது.
தூக்கியொரு முத்தம் கன்னத்திலிட்டான்.

கட்டிலில் மனைவி, தொட்டிலில் பிள்ளை.
காரிருள் சூழ்ந்தால் களிப்புக்கா பஞ்சம்.
வாழலாம் ஆயிரம் வழிதான் உண்டு-ஆயினும்
மாளலாம் என்னும் வழியினில் புறப்பட்டான்

"எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையா?
மானமே போயினும் வாழ்வது இனிமையா?
மயிரொன்று போனால் மாிக்குமே கவரிமான்
தாயிற் சிறந்தொரு நாடே போயினும்
நாயிலும் கீழாய் நாமிருப்பது நியாயமா?"

சுந்தரன் கேள்வியில் உண்மையின் வெளிச்சம்.
சந்தன மயிலாள் புன்னகை சிந்தினாள்.

துடியிடை தழுவித் துயின்றவன் போகின்றான்.
மடியினில் தாவிப் புரண்டவன் போகின்றான்.
மார்புறத் தழுவி மகிழ்ந்தவன் போகின்றான்.
மஞ்சத்தில் கூடிக் கலந்தவன் போகின்றான்.

தேன் இதழ் பெண்ணாள் தேம்பவேயில்லை.
பொன் மகள் முகத்தில் சோகமுமில்லை.
காரிகை நெஞ்சில் கலக்கமுமில்லை.

பூமுகம் முழுவதும் புன்னகை மின்னல்.
"இந்தப் புன்னகை ஒன்று போதும்
எந்தப் பகையையும் வென்று வரலாம்.
பூமுகம் மலரப் புறப்படும் புன்னகை
செருமுகம்மீது சுழன்றாட வைக்கும்!
சென்று வருகிறேன்-தேவி
உனக்கென்ன கொண்டுவரவேண்டும்?"

"வென்றது நாடு-வீழ்ந்தது பகை
என்ற வெற்றிச் செய்தி!"
தேவி சொல்ல சுந்தரன் மகிழ்ந்தான்

"மயிலென்பர் பெண்களை
மானென்பர் கண்களை
மயில் ஆடும், மான் மிரண்டு ஓடும்-நீயோ
சூழவரும் பகையை விரட்ட
சுழன்றடிக்கும் புயலாகிவிட்டாயடி!
வேழ நிகர் நெஞ்சுறுதி-உன்னால்
பெற்றுவிட்டேன் பெருமையடி!"

கட்டித்தழுவிக் கொண்டான்.
கட்டி முத்தம் பெற்றும் கொண்டான்.
"வாழவைக்கும் அமுதம் தந்தாய்-வீரம்
இனிக் கொப்பளிக்கும். கொந்தளிக்கும்!"

சென்றுவிட்டான் சுந்தரன்-பகை
வென்று வருவானோ?
படுகளத்தில் விதையாகிவிடுவானோ?
யார் கண்டார், யார்தான் கண்டார்.
செருக்களம் என்பது சூதாட்ட அரங்கம்.

போட்டது மீளுமா?-சூதாட்டம்
முடிந்தால்தான் தெரியும்!
போனவர் மீள்வாரா?-போர்க்களம்
ஓய்ந்தபின்தான் தெரியும்!

இப்போதும் தேவி கலங்கவேயில்லை.
எப்போதும் போலவே முகத்தில் புன்னகை.

ஈருடல் கலந்து ஒருடலாக
மஞ்சத்தில் தூங்கிய நினைவுகள் இனிமை!
இனியந்தச் சுகம் கைக்கெட்டுமா?
மஞ்சத்தில் வதைத்தது தனிமை!

தொட்டுத் தொட்டு தழுவிய கைகள்
பட்டுப் பட்டு சிவந்தது மேனி
கொட்டிக் கொட்டித் தந்தது இன்பம்
தொட்டிலில் கிடக்குது நினைவுச் சின்னம்!
நினைத்துப் பார்த்தால் மஞ்சத்தில் முட்கள்
புரண்டு படுத்தால் உடலெங்கும் வலித்தது.

"கலங்காதே மனமே! கலங்காதே மனமே!
கடமையைத்தானே முடிக்கச் சென்றார்
பெருமையத்தானே சூடிச் சென்றார்.
கலங்காதே மனமே! கலங்காதே மனமே!"

"மேனியில் ஆடிய மன்மத வண்டு
பூவினில் தேனை அள்ளிய தேனி
நாவினில் உன்பெயர் இனிக்கும் என்று
பாவினைப் பாடிய கள்ளப் புலவன்-இந்த
இரவினில் எந்த களத்தினில் ஆடி
குருதி சிந்திக் குன்றென வீழ்ந்தானோ?"
மனம் ஒரு குரங்கு தாவத்தான் செய்தது.
கணம் ஒரு நினைவில் தாவிவிழுந்தது.

"வாழ்ந்தால் அவர் மலையென வாழ்வார்
வீழ்ந்தால் அவர் விதையென வீழ்வார்.
தாழ்ந்தோம் என்ற அவப்பெயர் அழிக்க
எழுந்தோம் என்றே சென்றவர் வீரர்!"
மனதோடு பேசினாள் மங்கை நல்லாள்.

வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசி
மந்தையாய் இருந்து வாழ்வது பெரிதா?
வெஞ்சமர் களத்தில் வீரம் விதைத்து
எந்தையர் நாட்டை காப்பது பெரிதா?
சிந்தையில் உறுதி இரும்பென எழுந்தது.

மறுநாள் செய்தி வந்தது இடியாய்!
"களத்தில் உன்னவர் காவியமானார்
கடைசி வார்த்தையாய்-தேவியென்று
உன் பெயர் சொன்னார்!"

தொட்டிலில் குழந்தை வீறிட்டு அழுதது.
தூக்கிக் கொஞ்ச இனி அவர் வருவரோ?
தாக்கிய பகை இரையாக்கி விட்டதே!

"எங்கே அவர் உடல்?"

"களத்து மேட்டில்!"

"செல்லலாம்-என்னை
அழைத்துச் செல்க!"

"வேண்டாம் பெண்ணே! அங்கே
வேதனை அதிகம்!"

"வெற்றி யாருக்கு?"

"வீரமரபில் வந்தவர் நமக்கே
வெற்றித் தேவதை திலகமிட்டாள்!"

"எதிரிகள் எங்கே? அந்த
எத்தர்கள் எங்கே?"

"தெரியாது பெண்ணே! தோற்றனர்
தெரியும்! தோற்றோடியது
தெரியாது! அத்தனை வேகம்
அவர்கள் புறமுதுகுப் புயல்கள்!"

விளைந்தது வீரம்-வெற்றி
விதைத்தனர் நம்மவர்
பிறகென்ன வேதனை! களத்தில்
பிறந்திருப்பது சாதனை!
புறப்படு வீரனே! என்னவர்
பொன் முகம் கண்டிட வேண்டும்!"

தொட்டிலில் கிடந்த குழந்தையை
தூக்கித் தோளினில் சூடினாள்.
செய்தி சொல்ல வந்த வீரன்
முதலில் வியந்தான், பின் மகிழ்ந்தான்!

வீரப் பெண்டிர் பிறப்பது பெருமை
வீட்டுக்குள் பெண்ணை பூட்டிவைத்து
சிட்டுக் குருவியாய் நினைப்பது மடமை!

நாட்டின் கண்களாய் பெண்களும்
எழுகின்ற காலம் இனிமலரும்!
வீரனின் நெஞ்சில் பெருமிதம் வழிந்தது.

களத்தினில் கிடந்தவன் மார்பினில்
காயம் கண்டவள் கலங்கிடவில்லை!
இதழ்களால் காயத்தில் முத்திரை பதித்தாள்!
நெற்றியில் முத்தம் நிறைவாயிட்டாள்!

"உன் பெயர் சொல்ல
இதோ உன் மகன்!
நாளை மீண்டும் பகை சூழ்ந்திடில்
நம் மகன் களத்தில் இருப்பான்-உன்வாள்
அவன் கரத்தில் இருக்கும்!"

மாண்டவன் வாளை
கரத்தினில் ஏந்தி-பொன்மகள்
இல்லம் திரும்பிச் சென்றாள்.

"இத்தனை சோகம்-அடியே
எப்படித் தாங்கினாய்?"
பிறிதொரு நாளில்
தோழி கேட்டாள்

"இன்றுபார் தோழி-என்மகன்
படைத் தளபதி-துன்ப
வெள்ளத்தில் துவண்டு போயிருந்தால்
துன்பம் சிரித்திருக்கும்.
நாங்கள் விழுந்திருப்போம்!"

தேவி சொன்னதும்-தோழியின்
மனதில் திருக்குறள்
ஒன்று எழுந்து நின்றது.

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்."

துன்பம் தொடர்ந்து தாக்கினாலும்
துவளாமல் எதிர்த்து நிற்பவர் முன்
துன்பமும் துன்பப்படும்.

குறள்-625, அதிகாரம்-63

## அஸார்-சங்கீதா திருமணம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் முகமட் அஸாருதீனின் திருமணம் இம்மாதம் 16ம் திகதி மும்பாயில் நடக்கிறது. இவர் இந்தி நடிகை சங்கீதா பிஜ்லானியை திருமணம் செய்கிறார்.

அஸாருதீனும், இந்தி நடிகை சங்கீதா பிஜ்லானியும் கடந்த இரண்டு வருடங்களாகக் காதலித்து வந்தனர். அஸ்ாருதீன் ஏற்கனவே திருமணமானவர். அவரது மனைவி நவ்ரீன். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். நவ்ரீனை விவாகரத்துச் செய்த அஸாருதீன் தற்போது சங்கீதாவை மணம் முடிக்கிறார்.

இவர்களது திருமணம் 16ம் திகதி மும்பாயில் உள்ள தாஜ் நட்சத்திர ஹோட்டலில் நடைபெறுகிறது.

திருமணத்திற்குப் பிறகு அஸாருதீன் மும்பையில் குடியேறி விடுவார் எனக் கூறப்படுகிறது. அஸாருதீனின் பெற்றோர் ஹைதராபாத்தில் வசித்து வருகின்றனர்.

## தென் ஆபிரிக்க வீரர் திரும்பினார்

இந்தியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் தென் ஆபிரிக்க அணி மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி இம்மாதம் 20ம் திகதி அகமதாபாத்தில் தொடங்குகிறது.

இதற்கிடையே தென் ஆபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் டி வில்லியர்ஸின் மனைவிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு சொந்த ஊரில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளதாகத் தகவல் வந்தது.

இதைத் தொடர்ந்து டி வில்லியர்ஸ் அவசரமாக தென் ஆபிரிக்காவுக்கு விமானம் மூலம் புறப்பட்டுச் சென்று விட்டார். மனைவிக்கு அறுவைச் சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இது முடிந்த சில நாட்களில் டி வில்லியர்ஸ் மீண்டும் இந்தியாவுக்குச் சென்று அணியுடன் இணைந்து விளையாடுவார் என்று தெரிகிறது.

## "பெண் நண்பிகள் வேண்டாம்!"



மைக ஆதர்ட்டன

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஸிம்பாப்வே மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்குச் சென்று ஒரு நாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

இம்மாதம் 25ம் திகதி தனது 14வார சுற்றுப்பயணத்தை இங்கிலாந்து அணி தொடங்குகிறது. இந்தப் போட்டிகளின் போது பெண் நண்பர்கள், மனைவியை அழைத்துக் கொண்டு வருவதைத் தவிர்க்குமாறு அணி வீரர்களிடம் கூறியுள்ளார் இங்கிலாந்து அணியின் கப்டன் மைக் ஆதர்ட்டன்.

## ஒதுங்குவாரா மரடோனா?

ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற கால்பந்து வீரர் மரடோனா போதை மருந்து விவகாரங்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார். இவர் இனித் தொடர்ந்து கால்பந்து விளையாட முடியாது என்ற கருத்து நிலவி வருகின்றது.

எனினும் கால்பந்துப் போட்டிக்கு முழுக்குப் போடுவது குறித்து, தான் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று அவர் கூறிவருகின்றார். இந்த நிலையில் அவர் டெலிவிஷன் நிருபராகி விட ஆர்வம் காட்டி வருகின்றார்.

கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ, தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா ஆகியோரை டெலிவிஷனுக்காகப் பேட்டி காண மரடோனா திட்டமிட்டுள்ளார்.

## சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! அரசாங்கமும், புலிகளும் பேசிக்கொள்ளக் கூடுமோ?

செல்வி வி.எஸ். கல்யாணி, மட்டக்குளி.

இப்போதும் பேசிக்கொண்டுதானே இருக்கிறார்கள்: ஆயுதங்கள் மூலமாக! பேச்சுத் தொடரும்.

—●●●—

★ கையெழுத்து விவகாரத்தில் சட்டத்தை ஆதாரம் காட்டியிருக்கிறாரே ஒருவர்?

கே. ராகவன், கொழும்பு-11.

கொலை, கொள்ளை, திருட்டு என்று பலவித குற்றங்கள் செய்தவர்கள் தப்பிக் கொள்ளவும்தான் சட்டத்தில் ஓட்டைகள் இருக்கின்றன. அதற்காக செய்தது கொலையல்ல, என்பது உண்மையாகிவிடுமா?!

—●●●—

★ டியர் சிந்தியா! இன்றைய நடிகைகளில் அழகானவர் யார்?

சி. காயத்திரி, பதுளை.

கமல் மாமி.

—●●●—

★ உலக அழகிப் போட்டி தேவைதானா?

திருமதி மாலதி தர்மலிங்கம், கண்டி.

சமீபத்தில் படித்த ஒரு செய்தி: இந்திய அரசியல் தலைவர்களில் ஒருவர் லல்லு பிரசாத். உலக அழகிப்போட்டியை கண்டித்துப் போராடவேண்டும் என்று அவரது கட்சியின் மகளிர் அணியினர் வலியுறுத்தினார்களாம். அதற்கு லல்லு என்ன சொன்னார் தெரியுமா?

"நீங்கள் யாருமே பார்க்க சகிக்காமல் இருக்கிறீர்கள் என்பதற்காக, அழகிப் போட்டி கூடாதென்று அபாண்டமாகப் பேசாதீர்கள்!" என்றாராம். மகளிர் அணி வாயே திறக்கவில்லை.

—●●●—

★ திருமலைச் சிறையிலிருந்து புலிகள் எப்படி தப்பியோடினார்கள்? இப்போது எங்கே இருக்கிறார்கள், என்ற விபரமெல்லாம் படையினருக்கு தெரிந்துவிட்டதாமே?

சா. சிவகணேஷ், திருமலை.

எல்லாம் நடந்து முடிந்தபின்னர், எப்படித்தான் இப்படியான துல்லியமான(?!) விபரங்கள் பெறுகிறார்களோ தெரியவில்லை!

—●●●—

★ எதிலும் போட்டிபோடும் இந்த உலகத்தைப் பற்றி?

எம்.எஸ். அப்ரா, புத்தளம்.

போட்டி இருக்கட்டும், நல்லதுதானே! பொறாமைதான் மெத்தப் பொல்லாதது.

—●●●—

★ சிந்தியா! தீபாவளி வெளியீடாக வந்துள்ள படங்கள் எவை?

கு. மணிவண்ணன், பசறை.

அவ்வை சண்முகி, சேனாதிபதி, அலெக்சாண்டர், கல்கி, நேதாஜி, பாஞ்சாலங் குறிச்சி, கோகுலத்தில் சீதை, ஞானப்பழம், மிஸ்டர் ரோமியோ, தினமும் என்னைக் கவனி.

—●●●—

★ இந்திய அணி 'டைட்டன்' கிண்ணத்தை கைப்பற்றி விட்டதே. வெற்றிகள் தொடருமா?

பா. பிரகாஷ், மஸ்கெலியா.

இந்திய அணி நினைத்தால் ஜெயிக்கமுடியும். ஜெயிக்கத்தான் வேண்டும் என்று எப்போதாவது ஒருமுறைதானே நினைத்துத் தொலைக்கிறார்கள். என்றாலும் புதிய கப்டனுக்கு கை கொடுக்கலாம்!

—●●●—

★ சார்ஜாவில் இலங்கை அணியின் வேகம் போதவில்லையே: ஏன்?

ஜே.எம். நவ்சாத், மருதானை.

சற்றுக் களைத்துப் போயிருக்கிறார்கள். சில சமயங்களில் அதீத நம்பிக்கை காரணமாகவும் கோட்டை விட்டதுபோல் தெரிந்தது. நியூஸிலாந்துடன் நடந்த இரண்டாவது போட்டியில் முரளிதரன் வெட்கப்பட வைத்துவிட்டார். "முரளி! துடுப்பையும் கொஞ்சம் தொட்டுப்பாருமய்யா! வந்ததும் வணக்கம் வேண்டாமே பிளீஸ்!"

—●●●—



★ பில் கிளின்டன் மீண்டும் ஜனாதிபதியாகி விட்டார்! நீர் சொன்னது பலித்துவிட்டதே?

எஸ். சந்திரதாஸ், வத்தேகம.

எதிர்த்தரப்பில் ஓட வந்தது நொண்டிக் குதிரை. தட்டிவிட்டதும் பாய்ந்து சென்ற இளம் குதிரை எல்லைக் கோட்டைக் கடந்து விட்டது.

—●●●—

★ வேலைக்காரர்களை இளக்காரமாக நினைத்து அடக்கி ஒடுக்குபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

செல்வி ஆர். சந்திரகலா, ஹட்டன்.

ஒரு அடிமை இருந்தான். தன்னுடைய முதலாளிக்கு மிக விசுவாசமானவன்.

ஒருநாள் அந்த அடிமை முதலாளியின் கால்களை அமுக்கிவிட்டுக் கொண்டிருந்தான். முதலாளி கொஞ்சம் ஜாலி டைப். பணத்திமிரும் அதிகம்: முதலாளி அடிமையிடம் சொன்னார்:

"டேய்! உனக்கு கல்யாணம் செய்து வைக்க முடிவு செய்துவிட்டேன்," என்றார். அடிமைக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

"ஆனால் ஒரு நிபந்தனை!" என்றார் முதலாளி.

"என்ன எஜமான்?"

"உன்னுடைய மனைவியும் அவ்வப்போது என் கால்களை அமுக்கிவிட வேண்டும். சம்மதமா?" என்றார் முதலாளி.

"சரிங்க எஜமான்," என்றான் அடிமை. முதலாளிக்கு மகாசந்தோஷம்.

"ஆனால் ஒரு நிபந்தனை," என்றான் அடிமை.

"என்னடா நிபந்தனை?" என்று கேட்டார் முதலாளி. அடிமை சொன்னான்:

"உங்கள் மகளையே எனக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும்!"

—●●●—

★ அரசியலில் மாற்றம் ஏற்பட வழியே இல்லையா?

எம். ஜெகதீசன், திருமலை.

மாற்றம் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. எப்படி என்று கேளுங்கள்.

அமெரிக்காவில் நூறு ஆண்டுகளுக்கு முன்பாக தேர்தல் நடந்தது. ஆபிரகாம் லிங்கன் போட்டியிட்டார். அவரை நிருபர்கள் சந்தித்து கேள்வி கேட்டார்கள்.

"நீங்கள் தேர்தலில் வெற்றி பெறுவீர்களா?"

"நிச்சயமாக வெற்றி பெறுவேன்!"

"எதைக் கொண்டு சொல்கிறீர்கள்?"

"என் உழைப்பு. உழைப்பு. உழைப்பு..... இந்த மூன்றில் நான் வைத்துள்ள நம்பிக்கை!" என்றார் லிங்கன்.

அவருக்கு அடுத்ததாக பின்னர் ஒரு கட்டத்தில் ஜோன் கென்னடி தேர்தலில் போட்டியிட்டார். ஜோன் கென்னடியின் தந்தையிடம் நிருபர்கள் கேட்டார்கள்:

"உங்கள் மகன் தேர்தலில் வெற்றி பெறுவாரா?"

"நிச்சயமாக!"

"தேர்தலில் வெற்றி பெற முக்கியமான தேவை என்ன?" என்று கேட்டார்கள் நிருபர்கள்.

"முதலாவது பணம்: இரண்டாவது பணம். மூன்றாவதும் பணம்," என்றார் கென்னடியின் தந்தை.

அரசியல் மாறிக்கொண்டுதானே வருகிறது.

—●●●—

★ பணம் பாதாளம்வரை பாயும் என்கிறார்கள். பணம்தான் வாழ்க்கையா?

என். சிவகௌரி, வவுனியா.

சமீபத்தில் சஞ்சிகை ஒன்றில் படித்த கதை:

இங்கிலாந்துப் பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில். ஒருநாள் அவர் பி.பி.சி. ரேடியோவில் உரையாற்றவிருந்தார்.

ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டு "பி.பி.சி.ரேடியோ ஸ்ரேசனுக்கு விடப்பா," என்றார் சேர்ச்சில்.

சாரதிக்கு அவர்தான் சேர்ச்சில் என்பது தெரியாது.

"அங்கு நான் வரமுடியாது. வேறு டாக்ஸியில் செல்லுங்கள்," என்றான்.

"ஏன் முடியாது என்கிறாய்?" என்று கேட்டார் சேர்ச்சில்.

"இன்று பி.பி.சி ரேடியோவில் சேர்ச்சில் உரையாற்றுகிறார். நான் விரைவாக வீட்டுக்குச் சென்றால்தான் கேட்கமுடியும்," என்றான் டாக்ஸி சாரதி.

சேர்ச்சிலுக்கு உச்சி குளிர்ந்து போனது. அவனிடம் ஒரு பெரிய நோட்டை நீட்டினார்.

அதை வாங்கிக் கொண்ட சாரதி சொன்னான்:

"சேர்ச்சில் கிடக்கிறான். ஏறுங்கள் வண்டியில்!"

—●●●—

★ மனித உரிமைகள் எந்தளவுக்கு நம்நாட்டில் மதிக்கப்படுகின்றன?

ஜே. பெரோஸ், மட்டக்களப்பு.

'ம'வுக்கு பதிலாக 'மி' போட்டிருந்தால் உங்கள் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கலாம்.

—●●●—

★ அக்கால இசை, இக்கால இசை. ஒப்பிடுக?

சியானந்-ஜெய பத்மநாதன், மட்/ தாண்டவன்வெளி.

செவிக்கு இதம். செவிக்குள் இடி!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 57

## விண்ணோக்கி வளர்ந்த வீர ஆஞ்சநேயர்

இராமபிரானை முதன் முதலில் பார்த்த தினத்தன்றே அனுமன் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே அண்ண லுக்கு அர்ப்பணித்து விட்டார். வெறும் புறத் தோற்றத்தினால் ஏற்பட்ட உறவல்ல; ஆத்மார்த்தமன- அநாதியான உறவு. அன்றி லிருந்தே தன் அன்னை தந்தையாக, குருவாக, ஏன் கடவுளாகவே ஆஞ்சநேயர் இராமரை தன் உள்ளத்திலே அமர்த்தி, அர்ச்சித்துத் துதிக்கலானார்.

வானர உருக்கொண்டு விலங்கினைப் போலிருந்தாலும் ஆஞ்சனேயர், வீரமுடன் விவேகமும், விண்ணவர்க்கே உரித்தான மேலான நோக்கமும் ஒருங்கே கொண்டவரா கத் திகழ்ந்தார்.

அனுமன் வாயுதேவனின் மகன். தாய் அஞ்சனாதேவி, தேவலோகத்து அப்சரஸ். பூலோகத்தின் அழகைக் கண்டுகளிக்க தனியாக வந்து ஒரு மலையடிவாரத்தில்



### இராஜகுமாரன்

உலவிக் கொண்டிருக்கும்போது வாயுபக வான் அவளைக் கண்டார்; தீராத மையல் கொண்டு அவ்வழகியைத் தீண்டிவிட்டார். அஞ்சனாதேவி அடங்காத கோபங் கொண்டார். "பதிவிரதையாகிய என்னை ஏன் தீண்டினாய்?" என்று கர்ஜித்தாள். வாயுதேவனோ, குற்றத்தை ஏற்றவராக, "தேவி! காற்றாக உன்னைத் தீண்டியதனால் உன் கற்புக்கெடவில்லை. இருப்பினும் மனத் தால் உன்னை வரித்துவிட்டேன். ஆதலால் என்னைப்போல் வீரபராக்கிரமங்கொண்ட வனும் அதிபுத்திசாலியுமான மகனை ஈன் றெடுப்பாய். அவனால் உன் புகழும் பெருமையும் என்றென்றும் நிலைத்திருக்கும்," என்று கூறி மறைந்தார்.

அஞ்சனாதேவி, அழகிய குமாரனைப் பெற்றெடுத்தாள். அனுமன் என்று பெய ரிட்டாள். தேவ சாபத்தால் வானர உரு ஏற்று வானரங்களுடன் வாழத்தலைப்பட் டார். அனுமன் சிறுவனாக இருக்கும் போதே வானில் வலம் வந்த கதிரவனை ஒரு கனி எனக் கருதி, அதனைப் பறிக்க விண்ணில் தாவினான். இதனைக் கண்ட தேவேந்திரன் கோபமடைந்து, தனது வஜ்ஜிராயுதத்தை அனுமனை நோக்கி வீசினான். இடியேறு தாக்கியதுபோல் அனுமன் அவ்வாயுதத்தி னால் தாக்குண்டு மலை ஒன்றின்மீது வீழ்ந்து படுகாயமடைந்தான்.

### சிரஞ்சீவி

தன்மகன் தேவேந்திரனால் தாக்கப்பட்ட செய்தி அறிந்த வாயு பகவான் தனது உலக சஞ்சாரத்தை சடுதியாக நிறுத்திக் கொண்டார். சுவாசிக்க காற்றில்லாமல் ஜீவராசிகளெல் லாம் வீழ்ந்து மடிந்தன. தேவர்களும் மூவர் களுமே அஞ்சினர். வாயுவை அனைவரும் சாந்தப்படுத்தி அனுமனுக்கும் ஆசிகளை வழங்கினர். என்றுமே எவருமே எவ்வாயுதத் தாலும் அனுமனை அழிக்க முடியாது என்றும், சிரஞ்சீவியாக வாழ்வான் என்றும் வாழ்த்தி வரமளித்தனர். அஞ்சனையின் மகன் ஆஞ்சநேயன் என்ற பெயராலும் அழைக்கப்பட்டான். இப்பொழுது ஆஞ்சநே யன் இராமதாசனாக மாறி இராமரடி தொழுது நிற்கின்றார்.

தன்னுடைய கையிலணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி அனுமனிடம் கொடுத்த இராமர் சீதையின் அடையாளங்களை எடுத் துரைத்தார். பயபக்தியுடன் சகலவற்றையும் கேட்டறிந்த ஆஞ்சநேயன் இராமருக்குப் புறங்காட்டாமல் பின்சென்று மீண்டும் வணங்கினான்.

மேற்கு, கிழக்கு, வடக்கு ஆகிய திசைகளுக்குச் செல் லும் படைகளை வழி அனுப் பியபின் அனுமனிடம் வந்த சுக்கிரீவன், தென் திசையில் தேட வேண்டிய இடங்களை விவரித்தான். வாலியின் மகனான அங்கதனும் சற்று வயதில் முதிர்ந்தவனும் அனுபவசாலியுமான ஜாம்ப வனும் அனுமனுடன் தென் திசைக்குச் செல்வதற்குத் தெரிவானார்கள். இவர்களும் வானரவீரர்கள் பல்லாயிரக் கணக்கானோரும் சுக்கிரீவன் கூறும் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டனர்.

விந்தியமலை, சென்று அங்கிருந்து நர்மதை நதி கடந்து, எமகூடம் மலையை யடைந்து, பெண்ணை ஆற் றோரமுள்ள ஊர்களிலே தேடியபின் விதர்ப்பநாடு சென்று, அங்கிருந்து தண்டக வனம் போய் அதற்கப் பாலும் சென்று தேடும்படி சுக்கிரீவன் பணித்தான்.

### தேவதச்சன் மாளிகை

இத்தேடுதலுக்காகக் கொடுக்கப்பட்ட அவகாசம் ஆக ஒரேயொரு மாதமாகும். வானரர்களல்லவா? காடு, மலை, முகடெல் லாம் கன வேகத்துடன் தாண்டி களைப்புற் றுப் போனார்கள். இடையில் இருளில் ஒரு குகைக்குள்ளிருந்து ஒளி வெளிவருவதைக் கண்டு அங்கு சென்றார்கள். அங்கே சுயம் பிரபை என்ற ஒரு பெண் தபஸ்வி தவம் செய்து கொண்டிருந்தார். அவரைக் கண்டு தங்கள் பணிபற்றி விபரித்தார்கள். அவர் தனது தவவலிமையினால் அனைவருக்கும் உணவளித்தார்.

அந்தக் குகைக்குள் தங்க ஒளி வீசும் அழகிய பெருநகரைக் கண்டார்கள். அந் நகரை தேவதச்சனாகிய விஸ்வகர்மா நிர் மாணித்தான். விஸ்வகர்மாவுக்கும் இந்திரனுக் கும் ஏற்பட்ட முரண்பாடுகளால் இந்திரன் விஸ்வகர்மாவை கொன்றொழித்தான். இந் நகரை ஹேமை என்பவளுக்கு இந்திரன் கொடுத்தான். அழகான நகரமாக விளங்கினா லும் இதற்குள் பிரவேசித்தோர் எவரும் உயிருடன் திரும்பமாட்டார்கள் என்று தவ வலிமையில் சிறந்த மாதரசியான சுயம்பிரபை எடுத்துரைத்தார். இக்கதை கேட்டு அச்சம் கொண்ட வானரர்களை சுயம்பிரபை வெளியே கொண்டுவந்து சேர்த்தார். இராமரின் பணிக் காகச் செல்வதனால் அவர்களுக்கு எத்தீங்கும் வராதென வாழ்த்தினார்.

சீதாப்பிராட்டியாரைக் கண்டுபிடிப் பதற்கு சுக்கிரீவனால் கொடுக்கப்பட்ட காலக் கெடு ஒருமாதம் முடிவடைந்து மேலும் இருமாதங்கள் போய்விட்டன. அனைவரும் சுக்கிரீவன் தங்களை உயிரோடுவிடமாட்டான் என்ற முடிவுக்கு வந்தனர். காலக்கெடு முடிவடைந்தும் சீதாபிராட்டியாரைத் தேடிக் கண்டு கொள்ளமுடியவில்லையே என்ற ஏக்கம் பலரையும் வாட்டியது. அங்கதன் தன் உயிரை மாய்த்துவிடவும் துணிந்தான்.

### சம்பாதி

அப்போது அவர்கள் கடற்கரையை அடைந்திருந்தனர். கடற்கரையை அண்மித் திருந்த மலைமீது ஒரு கழுகு அமர்ந்திருந்தது. அதற்குச் சிறகுகள் காணப்படவில்லை. வாடி வதங்கி நலமிழந்து கிழப்பருவம் கொண்டதாகத் தென்பட்டது. நீண்ட நாட் களாக அக்கழுகுக்கு உணவு கிடைக்கவில்லை. இறக்கைகள் இல்லாமையினால் இரை தேடிப் பறக்கவும் முடியவில்லை.

இந்த வேளையில்தான் கவலையே உருவாக வானரங்கள் வந்து குவிந்து கிடந் தன. தனது பசியாற விருந்து கிடைத்திருக்கிறது என்று அக்கழுகு ஓரளவு களிப்படைந்தது. வானரங்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டி ருந்த வார்த்தைகளை உற்றுக்கேட்டது. இராமர் என்ற வார்த்தைகள் வானரங்களின் வாயிலிருந்து வெளிப்பட்டதும் தன்னுடலில் ஏதோ புதுமையான மாற்றம் ஏற்படுவதை அக்கழுகு உணர்ந்தது. தன்னை அறியாமலே, எப்போதோ சூடுபட்டுப் பொசுங்கிப்போன இறக்கைகள் வளர்வதை அறிந்து கொண்டு ஆனந்த பரவசமடைந்தது.

புதிதாக முளைத்த இறக்கை ஏற்படுத்திய குதூகலத்தால் ஆகாயத்தில் தாவிப்பறந்து அந்தக் கழுகு வானரங்கள் அமர்ந்திருந்த கடற்கரையில் வந்தமர்ந்தது. கழுகின் பிரவேசத்தால் வானரங்கள் மத்தியில் சற்றுச் சல சலப்புத் தோன்றியது. இதனால் அனுமன் முன்னெழுந்து சென்று கழுகினை விசாரித்தார்.

இராமரின் பெயர் அவர்களுடைய பேச்சு களில் அடிபட்டதனால், தான் எப்போதோ இழந்து விட்ட இறகுகள் முளைத்ததை முதலில் கூறிவிட்டு, சக்கரவர்த்தி தசரதரின் குமாரன் இராமருக்கு என்ன நடந்ததென வாஞ்சையோடு வினவியது அக்கழுகு. அனுமன், இராமர் சீதையுடனும் தம்பி இலக்குமணனுடனும் வனவாசம் வந்த கதை யைக் கூறினார். கதையைக் கூறும்போது கழுகரசன் ஜடாயு, இராவணனால் கொலை யுண்ட கதையினையும் கூறினார்.

ஜடாயு மாண்ட கதையினைக் கேட்ட இக்கழுகு வாய்விட்டு அழுது புலம்பியது. ஜடாயு தன் தம்பி என்றும் தன் பெயர் சம்பாதி என்றும் கூறியது. சம்பாதி தன் தம்பி இறந்ததைக் கேட்டு துன்புற்றதைப் பார்த்து அனுமனும் ஏனைய வானரங்களும் துன்பத்தில் பங்கேற்றனர். தன் தம்பிக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடனையும் நிறை வேற்றிவிட்டு வானரர்களுடனிணைந்து சீதை யைத் தேடும் பணிக்கு உதவுவதெனத் தீர்மானித்தார் சம்பாதி.

வானத்தில் தாவிப்பறந்து சற்று நேரத்துக் கெல்லாம் தரை இறங்கிய சம்பாதி, சீதையை இராவணன் இலங்கையில்தான் சிறை வைத்திருக்கிறான்; ஆகவே, இலங்கை சென்று தேடுவதனால் பலன் கிடைக்கும் என்றார்.

### விசுவரூபம்

கடலைக் கடந்து இலங்காபுரி செல்ல எவரால் முடியும் என்பதில் வானரங்களுக் கிடையில் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வயதில் முதிர்ந்தவனும் பழுத்த அனுபவமுள்ளவனுமான ஜாம்பவன், அனுமனை அணுகி, "ஆஞ்சநேயா! இந்தக் கடலைத் தாண்டக் கூடிய வலிமை இங்கு உன்னைத் தவிர வேறு எவர்க்குமில்லை. உன்னால்தான் முடியும்! உன் வலிமை உனக்குத் தெரியாது. நீ சின்னவனாக இருக்கும்போதே சூரியனைப் பறித்தெடுக்க விண்ணிலே தாவினாயல்லவா? அதிபராக் கிரமசாலியான நீ நினைத்தால் நிச்சயமாக இந்தக் கடல் என்ன; ஏழுகடல்களையும் தாண்டக் கூடிய சக்தி உன்னிடம் இருக்கிறது. உன்னால்தான் சீதாபிராட்டியாரைக் காண் பதற்கு முடியும் என்று இராமபிரானே திடமாக நம்பி இருக்கிறார். நீயோ ஏது மறியாதவன் போல் ஏகாந்தமாக இருக்கிறாய். வாயுபுத்திரனே! உன் தந்தை புகுந்தறியாத இடமில்லை. உன் தந்தையின் பலத்தை நீயும் கொண்டவனல்லவா? நீயே இலங்காபுரி சென்று சீதாபிராட்டியார் இருக்குமிடம் கண்டறிவாய்!" என்று உற்சாகமூட்டினார்.

ஆஞ்சநேயருக்கு அப்போதுதான் தன் வலிமை தெரிந்தது. இராம நாமத்தை ஜெபித்த வண்ணம், தென் கடற்கரையில் நின்று ஐம்பொறிகளையும் அடக்கித் தியானிக்கலானார். "ஜெயராமா ஜெயராமா ஜெயஜெய ராமா..." என்று அவருடைய வாயி லிருந்து இராம ஜெய நாமாவளி வெளிவர அவருடைய உருவம் வளரலாயிற்று. சிறிது சிறிதாக அவ்வுருவம் வளர்ந்து விண்ணைத் தொடும் விசுவரூபமானது.

அனுமனின் விசுவரூபத்தைக் கண்ட வானரர்களும் கழுகரசனான சம்பாதியும் திகைத்து நின்றனர். சீதாபிராட்டியார் சிறைவைக்கப்பட்டிருக்கும் இடம் கண்டு பிடிக்கப்படவில்லையே; இதனால் சுக்கிரீவன் வழங்கும் மரண தண்டனைக்கு முன்பே தற்கொலை செய்து விடலாம் என கருதிய அங்கதன், அனுமனின் விசுவரூபங்கண்டு ஆனந்த பரவசமடைந்தான். அனுமன் சீதா பிராட்டியார் இருக்குமிடத்தை நிச்சயம் கண்டு பிடித்து வந்து சேருவார் என்ற நம்பிக்கை சகலரிடத்திலும் ஏற்பட்டுவிட்டது.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 55

சரியானவிடை:- கார்காலம்.

1. செல்வி வஜீஹா ஜெய்னுல்ஆப்தீன். பிஹில்ல தெனிய, மடவளை பஸார்.
2. செல்வி கே.தமயந்தி. நாவற்குடா, மட்டக்களப்பு.
3. எஸ்.செய்னுல் அல்தாப். ரோயல் கல்லூரி, கொழும்பு-7.
4. எம்.அம்பலவேணி. புளூமென்டோல் தொடர் மாடி, கொழும்பு-13.
5. சி.சிவதாஸ்., மத்திய வீதி, காரைதீவு.

**போட்டி இல. 57 கேள்வி:- அனுமனின் தாய் தந்தையர் யார்?**

நவம்பர் 23 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.57, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

*அம்மையாரின் அலுவலகத்தில் உள்ள இரகசியத் தொலைபேசி ஒலிக்கிறது. அம்மையார் அதனை எடுக்கிறார்.*

அம்மையார்:- ஹூ இஸ் ஸ்பீக்கிங் பிளீஸ்?

பிரபா:- ஹா ஹா ஹா பிரபாகரன் ஸ்பீக்கிங்.

அம்மையார்:- ஓ... நீர்தான் பிரபாகரன் என்பவரோ? இதுதான் உம் குரலோ?

பிரபா:- அதிலென்ன சந்தேகம்?

அம்மையார்:- கையெழுத்தைக்கூடப் போலி எழுத்தாக மாற்றும் காலம் இது! கையெ ழுத்துகளைச் சரிபார்க்க தனிப்பிரிவே தேவைப்படுகிறது இங்கே!

பிரபா:- எங்களுக்கு கையெழுத்தை மாற்றிப் போட்டுப் பழக்கமில்லை. தலையெழுத்தை மாற்றித்தான் பழக்கம். குரலை மாற்றிப் பழக்கமில்லை. குரலை நிறுத்தித்தான் பழக்கம்.

அம்மையார்:- பழக்கமல்ல, பயங்கரவாதம்!

பிரபா:- ஹா ஹா ஹா
பயம்! கரம்! வாதம்!
பயம்:- அது பிறர் நம்மீது கொள்ளும் எண்ணத்தில் ஒரு வகை.
கரம்:- அது எப்போதும் உயர்ந்தே இருக்கவேண்டும் என்று நாம் நினைப்பதில் இல்லைக் குறை!
வாதம்:- அதுதான் நம் தரப்பு நியாயத்தை நாம் எடுத்துச் சொல்லும் முறை.

அம்மையார்:- வீண்வாதம் தேவையில்லை. போன் செய்த காரணத்தைச் சொல்லும் முதலில்?

பிரபா:- பண்டிகை நாட்களில் வாழ்த்துச் சொல்வது எம் பண்பாடு. தீபாவளிக்கு வாழ்த்துச் சொல்லவே இந்த போன் செய்யும் ஏற்பாடு!

அம்மையார்:- தீபாவளிதான் முடிந்து விட்டதே?

பிரபா:- இங்கே தினம்தோறும் தீபாவளி தானே!

அம்மையார்:- பதுங்கவே முடியாதளவுக்கு நாம் பாயப்போகிறோம்.

பிரபா:- சறுக்கிவிடும் ஜாக்கிரதை.

அம்மையார்:- மிரட்டுகிறீரா?

பிரபா:- இல்லை! திரட்டிக்கொண்டிருக் கிறேன் என் சேனையை!

அம்மையார்:- நாமும்தான் திரட்டிக் கொண்டி ருக்கிறோம்.

பிரபா:- பேச்சுக் கதவுகளை ஒரே மூச்சில் மூடிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது தான் அதன் அர்த்தம்!

அம்மையார்:- திறந்துவைத்தால் ஆயுதங்க ளோடு நீங்கள் உள்ளே வந்துவிடுவீர்கள்.

பிரபா:- ஆயுதம்! அது நம் கூடவே இருப்பது!

அம்மையார்:- அதைக் கீழே போடாவிட்டால் பேச்சே நடக்காது!

பிரபா:- வேண்டுமானால் கொஞ்சம் ஒப் படைக்கலாம்.

அம்மையார்:- பழுதான ஆயுதங்களை வாங்கு வதற்கு நாம் என்ன இரும்புக்கடையா வைத்திருக்கிறோம்?

பிரபா:- நன்றாகத்தான் புரிந்துவைத்திருக் கிறீர்கள் நம்மை பற்றி!

அம்மையார்:- பாம்பின் காலைப் பாம்பறியும் என்பது பழமொழி.

பிரபா:- புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பதும் பழமொழிதான்!

அம்மையார்:- நாம் என்ன புல்லோ அனுப்புகி றோம்? உணவுப் பொருள்தானே அனுப்பு கிறோம்.

பிரபா:- அரிசியில் கல்லுக் கிடக்கிறது, மாவில் புழு நெளிகிறது.

அம்மையார்:- தானம் கொடுத்த மாட்டில் பல்லுப் பிடித்துப் பார்க்கக்கூடாது!

## அம்மையார் - பிரபா திடீர் பேச்சுவார்த்தை

காதிலை பூ கந்தசாமி



அம்மையார்:- வட் டு யூ மீன்?

பிரபா:- பட்டுபட்டென்று கேட்கும் வெடி யோசை! அதுதான் தீபாவளி நாளில் தெருஓசை. இப்போது இங்கே தினந் தோறும் கேட்கிறது வெடியோசை.

அம்மையார்:- காரணம் நீர்தான்!

பிரபா:- ஓ.. வழக்கமாகக் கூறுகின்ற குற்றம்.

அம்மையார்:- குற்றமல்ல, குற்றங்கள்!

பிரபா:- என்னென்ன குற்றங்கள்?

அம்மையார்:- கொலைகள்-கொள்ளைகள், குண்டுவைப்புக்கள். எண்ணிக்கை யில்லாத குற்றங்கள்?

பிரபா:- ஆதாரம்?

அம்மையார்:- நீதிமன்றத்தில் நீரே அதனை நேரில் சந்திக்கலாம்!

பிரபா:- இந்திய நீதிமன்றத்துக்கே நான் சென்றதில்லை.

அம்மையார்:- இந்தியா எட்டத்தில் இருக் கிறது. தலைநகர் உமக்குக் கிட்டத்தில் இருக்கிறது. பொடி நடையாகவே நீர் வந்துவிட்டுப் போகலாமே!

பிரபா:- அழைப்பை நான் ஏற்காவிட்டால்?

அம்மையார்:- பிடியாணை அனுப்பப்படும்!

பிரபா:- பிடியாணை கொண்டுவருபவரை நாம் பிடித்துவைத்துவிட்டால்...

அம்மையார்:- விரைவில் அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாம் ஒரு அறிக்கை விடவேண்டியிருக்கும்.

பிரபா:- அப்படியானால் பிடியாணையைப் பிறப் பித்துப் பார்க்கலாமே!

அம்மையார்:- ஆணை பிறப்பிப்பதற்கு அரை நொடி போதும். அதைக் கொண்டுவர ஆள் தேட அரைவருடமாவது தேவைப் படும். பிளீஸ் வெயிட்.

பிரபா:- பொறிவைத்துக் காத்திருப்பது நமக் கொன்றும் புதுமையல்லவே!

அம்மையார்:- காலக்கெடு விதிப்பதும் நமக் கொன்றும் புதுமையல்லவே!

பிரபா:- விதித்த காலக்கெடுக்கள் காலாவதி யாகிவிட்டனவே.

அம்மையார்:- கதிர் அடியால் உம்மைக் காட்டுக்கு விரட்டிவிட்டோமே!

பிரபா:- நாம் பதுங்குவது பாய்வதற்காக!

பிரபா:- தானம்! தண்டம்! பண்டம்! எல்லா வற்றையும் தனிக்கணக்காக குறித்துவை யுங்கள். தமிழீழம் அமைந்ததும் திரும்பித் தந்துவிடுகிறோம்.

அம்மையார்:- தமிழீழம்! நல்ல கற்பனை!

பிரபா:- கற்பனையல்ல நம்பிக்கை!

அம்மையார்:- விரைவில் தடை வரும்.

பிரபா:- அப்படியானால் படை வராதா?

அம்மையார்:- அதுவும் வரும்- இதுவும் வரும்! விரைவில் நமக்கு வெற்றி வரும்!

பிரபா:- எப்போது வரும்?

அம்மையார்:- ஆண்டு முடிவற்கிடையில்.

பிரபா:- எந்த ஆண்டு முடிவதற்கிடையில்? யார் ஆண்டு முடிப்பதற்கிடையில்?

அம்மையார்:- பதில் உண்டு. சொல்ல முடி யாது. இராணுவ இரகசியம்!

பிரபா:- நல்லது நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளலாமா?

அம்மையார்:- என்னவென்று?

பிரபா:- இரு தரப்பும் வெல்லும்வரை போர் தொடரும் என்று!

அம்மையார்:- அது எப்படி முடியும்? ஏதாவது ஒரு தரப்புத்தானே வெல்லும்!

பிரபா:- உங்களுக்குத் தேவை தேர்தலில் வெற்றி. எங்களுக்கு அது தேவையே இல்லை. பேச்சு நடந்தால் நீங்கள் தருவ தற்கும் ஒன்றுமில்லை. நாங்கள் பெறு வதற்கும் ஏதுமில்லை. தமிழீழமே எங்கள் கொள்கை. அதைத் தரமறுப்பதே உங்கள் கொள்கை. இதில் மத்தியஸ்தம் எதற்கு? மறுதரப்பு எதற்கு?

அம்மையார்:- உண்மையைத்தான் பேசுகிறீர்!

பிரபா:- ஒத்துக் கொண்டதற்கு நன்றி!

அம்மையார்:- நம்பலாமா?

பிரபா:- நம்ப நட, நம்பி நடவாதே! அதுதான் உண்மை! நீங்களும் எங்களை நம்பமாட் டீர்கள். நாங்களும் உங்களை நம்பமாட் டோம். அனுபவம் அப்படி! இதிலே போரை நிறுத்துவது எப்படி?

அம்மையார்:- எம்மிடம் உண்டு அரசியல் தீர்வுப்பொதி!

பிரபா:- ஹா ஹா ஹா அது யானைப் பசிக்கு சோளப்பொரி. நன்றி' தொடர்ந்து பேச நேரமில்லை. பில் கிளிண்டனுக்கும் வாழ்த் துச் சொல்ல வேண்டும்.

**கலப்படமில்லாத கற்பனை**



படிப்பகம்

...News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)
www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
43 6 3 3 1
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# கையெழுத்து வரம்

கைநிறையச் சம்பாதிப்பதுதான் ஆண்களுக்கு அழகு. அதெல்லாம் பழைய கதை. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் சம்பாதிக்கும் காலத்தில் இருக்கிறோம். விளையாட்டு வீரங்கனைகளில் ஒரு வருடத்துக்குள் கலையாக அதிக தொகை சம்பாதித்தவர் அறாண்ட்ஷா சால்செஷ் விகாரியோ. டென்னிஸ் உலகின் கவர்ச்சியான நட்சத்திரம். 1994ல் மட்டும் இவர் சம்பாதித்த தொகை; 29 இலட்சத்து 43 ஆயிரத்தி 665 டொலர்கள். நம்மூர் பெறுமதிப்படி 16 கோடியே 48 இலட்சத்து 45 ஆயிரத்து 240 ரூபாய்கள். என்னங்க, தலை சுற்றுகிறதா?!

சான்செஷிடம் ஒட்டோ கிராப் வாங்குவதில் பலத்த போட்டி. சான்செஷிடம் கையெழுத்து வரம் கேட்பவர்கள் ஒட்டோகிராப் புத்தகத்தை நீட்டுவதில்லையாம். தாங்கள் அணியும் ஆடைகள், தேசியக் கொடிகள் போன்றவற்றை நீட்டுகிறார்கள். சிலர் உள்ளங்கையைக் கூட நீட்டுகிறார்கள். சட்டையைக் கழட்டி முதுகைக் காட்டிய ஒரு ஆண் ரசிகரை சான்செஷின் பாதுகாவலர்கள் செல்லமாக இரண்டு தட்டுத்தட்டி அனுப்பிவைத்ததும் உண்டு.

நம்நாட்டில் என்றால் சான்செஷ் கைவலிக்க கையெழுத்துப் போடும் அவசியம் இருக்காது. அவரது கையெழுத்தை வேறு யாராவது போட்டுக் கொடுத்துவிடுவார்கள்.



# இமயம் வசப்படும்

உலகிலேயே உயரமான மலைகளில் ஏறுவதற்கு பல நவீன கருவிகளை உபயோகப்படுத்த வேண்டும். அதிலும் அதி உயரமான இமயமலையின் மவுண்ட் எவரெஸ்ற் சிகரத்தை ஏறித் தொடவேண்டுமானால் பலப் பல உபகரணங்களையும் உடலுக்குடன் பொருத்தியோ கையில் கொண்டோ செல்லவேண்டும்.

நைலோன்கயிறு, கிளிப்புக்கள், சுத்தியல், ஆப்புக்கள், வளையங்கள், கொழுவிகள், கைக்கவசங்கள், உறை குளிர் கோட்டுக்கள், முதலைப் பற்கள் போன்று கூரிய கத்திகள் பிணைக்கப்பட்ட பூட்சுக்கள், தலைத் தொப்பி, பட்டிகள், கூடைகள் இவ்வாறு பலவும் கொண்டு சென்றால் தான் 'சிகரத்தை' எட்டிப் பிடிக்கலாம்.

மாதக்கணக்குக்கு தேவையான உணவு ரேடியோகருவி, சமிக்ஞை குண்டுகள் போன்றவையும் தேவைப்படும்.

இமயமலையின் மவுண்ட் எவரெஸ்ற் சிகரத்தின் உயரம் 8 ஆயிரத்து 848 மீட்டர் (29 ஆயிரத்தி 29 அடி). கடல் மட்டத்திலிருந்து உலகிலேயே உயரமான பகுதி இதுதான். அதனால் சாதனைக்காகப் பலர் ஏறிமுடித்ததுண்டு. மிகப்பலர் உயிர்விட்டு 'கைலாசம்' போனதும் இங்குதான்.

1953 மே 22 பகல் 11.30 இற்கு நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த எட்மண்ட் பேர்சிவல் ஹிலாரி (அப்போது வயது 34) யும் அவருடன் நேபாளத்தைச் சேர்ந்த செர்பா டென்ஷிங் நோர்கேய் (வயது 39) என்பவரும் சென்றடைந்தனர். இமயத்தின் உச்சியில் முதல் கொடி நாட்டியவர்கள் இவர்கள்தான்.

இமயத்தின் உச்சத்தில் முதன் முதலாக கொடி பொறித்த பெண்மணியின் பெயர் ஜங்கேதபேய். ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர். 1975மே 16ல் சென்றடைந்தார். வயது 36.

இமயத்தில் சோழன் கொடி பறந்தது என்று நாம் பழம்பெருமை பேசிக் கொண்டிருந்தால் போதுமா? இமயத்தை முத்தமிட்ட உலக சாதனைப் பட்டியலில் தமிழ் பேசுவோர் பெயரையே காணவில்லை. யார் முயலப் போகிறார்கள்




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
3 2 3 6 5 7
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# வன்- ரூ. திறீ- ரெடி



வளர்க்கப்படும் விதம், பராமரிப்பு செலவு போன்றவற்றில் மனிதர்களைவிட நாய்களுக்குத்தான் வசதி கூடியுள்ளது. நாய்களுக்கு அழகுப் போட்டி நடந்த செய்தியை சென்றவாரம் பார்த்தோம். இப்போது ஒரு விளையாட்டுப் போட்டிச் செய்தி. அதாவது நாய்களுக்கான ஓட்டப்போட்டி.

ஆச்சரியப்படாதீர்! இன்று, நேற்றல்ல, 1919 முதல் பல நவீன வசதிகளோடு இந்த ஓட்டப்போட்டி நடைபெற்று வருகிறது. மெல்லிய உடல் கொண்ட வேட்டை நாய்கள்தான் போட்டியில் கலந்துகொள்ளலாம். நாய் ஓட்டப் போட்டியின் ஒரு காட்சிதான் படத்தில்.

இதுவரைகால நாய் ஓட்டப்போட்டியில் உலக சாதனை படைத்த நாயாரின் பெயர் ஸ்டான்டைட்டில். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தது. 366 மீட்டர் தூரத்தை (400 யார்) 19.57 செக்கனில் சென்றடைந்தது. மணிக்கு 67.32 கிலோ மீற்றர் வேகம். மனிதர்களால் படைக்கப்பட்ட ஓட்டவேக சாதனைகள்கூட இதனை நெருங்க முடியாது. 1994 மார்ச் 5ம் திகதி இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. இந்தப் போட்டி அவுஸ்திரேலிய யொங் நகரில் நடைபெற்றது. கோபத்தில் நாய் என்று திட்டுவதை நிறுத்துங்கள். நாய் ஒன்றும் குறைச்சலில்லை.



# 'நறுக்' மன்னன்

சமையலறை நுணுக்கங்கள் பெண்கள் சமாச்சாரம் என்பது பழையகதை. ஆண்களும் சமையல் மன்னர்களாக மாறிவிட்டார்கள். சமீபத்தில் எடுத்த ஒரு புள்ளிவிபரப்படி, சமைக்கத் தெரியாவிட்டாலும் சமையலில் தமக்கு கூடமாட ஒத்தாசையாக இருக்கும் கணவர்மார்களை பெண்கள் விரும்புவதாக தெரியவந்துள்ளது.

படத்தில் இருக்கும் சமையல் மன்னரின் பெயர் நோர்மன் ஜோன்சன். உணவுத்துறைக் கல்வி விரிவுரையாளராக கல்லூரி ஒன்றில் கற்பிக்கிறார்.

'நறுக்'குவதில் இவர் ஒரு சூராதிசூரர். உலக சாதனைப் புத்தகத்தில் நறுக் மன்னராக இடம்பிடித்திருக்கிறார். அப்படி, எதை நறுக்கினார்? என்கிறீர்களா?

3.8 சென்றி மீற்றர் (1 1/2 அங்குலம்) விட்டமும் 30.5 செ.மீ (12 அங்குலம்) நீளமுமான வெள்ளரிப் பிஞ்சை 1 அங்குலத்தில் 27 துண்டுகள் வீதம் மொத்தம் 254 மெல்லிய துண்டுகளாக மின்னல் வேகத்தில் நறுக்கி முடித்தார். எடுத்துக்கொண்ட நேரம் 13.4 செக்கன்கள்.

1983 ஏப்ரல் 3ம் திகதி ஜெர்மனியில் கின்னஸ் நிறுவன நடுவர்கள் முன்னிலையில் இந்த உலக சாதனை படைக்கப்பட்டது. சமையலில் பெண்கள் வெளுத்துவாங்கினாலும், அதில் ஒரு சாதனை படைத்திருப்பவர் ஆண்தான். ஆண்கள் கொலரைத் தூக்கி விட்டுக் கொள்க.





# உலகம் சுற்றும் பூலான்

துப்பாக்கி ஏந்தி குருவி சுடுவதுபோல எதிரிகளைச் சுட்டுத்தள்ளிய கரங்கள், இப்போது வீடியோக் கமராவை இயக்கிப் பார்க்கின்றன. பூலான்தேவியின் கரங்களைத்தான் சொல்கிறோம்.

சமீபத்தில் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார் பூலான்தேவி. பாரிஸ் நகரில் சுதந்திரமாக வலம்வந்தார். வீடியோக் கமரா ஒன்றை விலைக்கு வாங்கி கண்ணில் கண்டதையெல்லாம் அதனால் சுட்டுத்தள்ளினார்.

'பண்டிட் குயின்' படம் பார்த்தவர்கள் பலர் பூலான்தேவியை அடையாளம் கண்டு கொண்டனராம். 'ஹலோ பூலான்' என்று ஆச்சரியமாய் பார்த்தபடி வலியவந்து கைகுலுக்கினார்களாம்.

பூலானுக்கு பிரான்ஸ் பொலிசார் கடும் பாதுகாப்பு வழங்கியிருந்தார்கள். 'இந்தியாவில் எங்கு போனாலும் என்னை அடையாளம் கண்டு கொண்டு கூட்டம் திரண்டுவிடும். சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. அதுதான் இப்படியொரு ஜாலியான சுற்றுப்பயணம்' என்கிறார் பூலான்.

பாரிசில் பூலான்தேவி முக்கியமாகச் சென்ற இடங்களில் ஒன்று அழகு நிலையம். (பியூட்டி பார்லர்) சிகையலங்காரம், முக அலங்காரம், விரல் அலங்காரம் என்று நவீன பூலானாக காட்சியளிக்கிறார் பாருங்கள். பூலான் பூலான்தான்.



[illegible] 25, [illegible] நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்